BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்
ORU PAPER

Paper - 04 Issue - 87 01 Friday February 2008 ஐரோப்பாவில் ஆகக் கூடிய விலை 1 யூரோ

• நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
• வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
• உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

Forward Consultants
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052

AskTamil.com™
உங்கள் அனைத்து தகவல் தேவைகளுக்கும்..
No.1 Online British Tamil Directory
www.AskTamil.com

Sky Wings LTD.
TRAVEL AGENTS
Simply the best in Price & Service
Main agents for Sri Lankan Airlines, Qatar Airways, Kuwait Airways
Tel: 020 8672 9111

Hot Fares - Economy
Colombo from £335 + Taxes
Dubai from £205 + Taxes
Madras from £300 + Taxes
Bombay from £237 + Taxes
Delhi from £300 + Taxes
Hong Kong from £370 + Taxes
Cairo from £241 + Taxes
Please call us on
020 8866 6006
020 8866 6011
Cheapest tickets Worldwide
United Travel Ltd
428, Rayners Lane, Pinner, Harrow, Middlesex, HA5 5DX

ABBEY TRAINING. NET
• OFF Licence/ Restaurant விபரத்தில் எடுப்பதற்கும் அனைவருக்குமான Personal Licence எடுத்து தருவோம் மற்றும்
• NCPLH CERTIFICATE COURSE
• Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
• உங்கள் விபரம் சமர்ப்பிக்கும் புதிய off licence / restaurant premises licence எடுத்து தருகிறோம்.
• LIFE IN THE UK - பிற்றதனில் சிறு உதவிகளை வழங்குதல்
• எல்லா Course களையும் தருகிறோம் விபரங்களுக்கு நடத்துங்கோ.
38 London Road, Tooting SW17 9HP
தொடர்புகொள்ள: Thavanessan
020 8640 9900 / 07956 913 164 / 07960 665 575

RAJA& CO SOLICITORS
10 Upper Tooting Road, Tooting Bec
London SW17 7PG
Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425
We provide following Legal Services:
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration
We hold Legal Aid Franchise in Immigration & Crime

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
Had an accident – Not your fault
Driver / Passenger – within last 3 years
• Personal Injury Compensation (eg. back, neck & Shoulder pain etc)
• Repair / Total Loss Value of your vehicle
• Loss of Earnings
• Hire Care for Mini Cab Drivers
• Replacement Car = Credit Hire (terms & Conditions apply)
NO WIN - NO FEE
Tel: 020 8665 7667 Fax: 020 8684 7177
Mob: 07950 953 514 Call Free: 0800 032 6798

Mortgagelink
The National Mortgage Network
Why Rent... When You can Buy?
எந்த விதமான Deposit இல்லாமல் வீடு வாங்க வேண்டுமா?
வாடகை வீடுகளில் வசிப்பவர்கள் சொந்தமாக வீடு வாங்கி வாழ விரும்புகிறீர்களா? கவலை வேண்டாம்
தற்போது கிழ்கண்ட இடங்களில் வீடுகள் கையசம் உள்ளன.
Mitcham, Thornton Heath, Peckham, South Norwood, Croydon, Eastdown Park, Streatham, Sydenham, Penge, Catford.
Mob: 07930 626 585 | Tel: 020 8946 5566
Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secure on it.

LEWISHAM GOLD HOUSE
15, Marischal Road, Lewisham, London SE13 5LE
Tel: 020 8463 0608 Ameen: 07946 420 907

Sales • Lettings
Commercial Mortgages
Building - Maintenance & Cleaning Services
Tel: 020 8424 9911 / Fax: 020 8424 9912
Mob: 07961 954 889
RESPONSE PROPERTY SERVICES
69, Headstone Gardens, Harrow, Middx HA2 5PJ
Web: www.responseproperties.co.uk
E-mail: info@ responseproperties.co.uk

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

உங்கள் வீட்டில் மீன்குழம்பு ருசித்த போதெல்லாம்
நினைவிற்கு வந்த பெயர்

கஜன் திருக்குட்டி

இப்போது மீண்டும் புதிய வளத்துடனும்
புதிய பொலிவுடனும் வந்திருக்கிறோம்.

ரவி சந்திரா

உங்கள் தொடர்ந்த
ஆதரவுக்கு நன்றி
கஜன் திருக்குட்டி

RAVE CHANTHIRA
245, Mitcham Lane, Streatham
SW16 6QB
Tel: 020 8696 9393

Platt & Associates - UK Immigration, Nationality & Work Permit Consultants

Platt & Associates Limited is a firm of Immigration, Nationality and Work Permit consultants based in the City of London. All our staff, some ex Home Office, have extensive knowledge and experience of UK Immigration, Nationality and Work Permit Matters. We cover the following areas of UK Immigration Law:

- Permanent Residency - Indefinite Leave to Remain
- Establishment of Business, Investor Status & Sole Representatives
- Highly Skilled Migrrant Programme (HSMP)
- Work Permits
- Working Holiday Makers
- British Citizenship - Naturalisation and Registration
- British Passports - Acquisition and Renewals
- Student applications and extensions
- Marriage, Fiancé and unmarried partner applications
- EEA Association Agreement Status
- European Economic Area (EEA) Family Permits
- Political Asylum applications
- Human Rights matters
- Domestic Worker applications
- Visitor applications and extensions
- United Kingdom Entry Clearance applications from abroad

Call us today for a 'free over the phone assessment' of your case and circumstances on:.

Tel: 020 7953 7235

Platt & Associates Suite 304 The Blackfriars Foundry,
156 Blackfriars Rd, London, SE1 8EN

www.plattassociates.co.uk E-mail: info@plattassociates.co.uk

UAEXCHANGE®

Service is our Currency

World's Trusted Money Transferrer

More than 25 Years in Service
Over 3000 dedicated employees around the globe
Extensive network in Asia, Australia, Middle East & Americas

உலகளாவிய பணமாற்று சேவையில் தனித்துவமானவர்கள்

OUR COMMITMENT

Fast ... Safe... Easy.... Economical...
Best Exchange Rate
Service par excellence

For more information visit or call your nearest UAE Exchange Centre

Whitechapel	Eastham	Southall	Wembley	Croydon	Birmingham
020 7655 4999	020 8503 4234	020 8867 1100	020 8903 7884	0208 253 4440	012 1515 5921

www.uaeexchange.com

"WEAKNESS GONE.. ENERGY ON.."

கண்டிப்பாக ஆண்களுக்கு மட்டும் **FOR MEN ONLY**

HERBAL 1-TOP CAPSULE

ULTIMATE HERBAL APHRODISIAC
AND THE NON-SURGICAL SOLUTION
FOR MALE PROBLEMS &
IMPOTENCE MANAGEMENT
For Rejuvenation & Virility

£ 30

இது உறுதி - இன்றைய இரவு இனிமையானது - இனிவரும் இரவுகளும்

Useful As An Adjuvant For Fatigue & Stress, To Increase Potency And Youthful Vigour Of A Man And To Check Ageing & Seminal Debilities

To Tone up the under-developed penile muscles & nerves for improved performance

MUSCULA MASSAGE OIL FOR MEN "RECHARGE YOUR LIFE"

Mascula Massage Oil Is Special Massage Oil For Men Extracted From Rare & Precious And Time Tested Herbs To Improve Blood Circulation And Strengthen Nerves Of Male Organ. £ 20

Trade/Mail Order : PENTAVOX (U.K.) Ltd.
P.O. Box 409, 46 Mandeville Road, Northolt, Middx UB5 9AJ, TEL : 020 88 33 44 93

புலம்பல்

எப்பிடி புரிஞ்சு கொள்ளுறது?

ஐயா, முன்னாள் ஈரோஸ் உறுப்பினரே, கொஞ்சம் விளங்கிறமாதிரி எழுதுங்கோ.

இறந்த ஈரோஸ் போராளிகளும் மாவீரர் பட்டியலிலை இருக்கினம் மறந்திடாதேங்கோ. எங்களுக்கு கேணல் கரிகரனும் ஒண்டுதான் கோணல் கருணாவும் ஒண்டுதான்.

— ஈழப்பாமரன், சென்டெனிஸ், பரிஸ்

நெத்தியடி

சிறி அண்ணை சும்மா நெத்தியடி மாதிரி இந்தப் பொங்கலுக்கு பிரச்சினை பண்ணுற ஆக்களுக்கு சொல்லிப்போட்டியள் உண்மையாய் சூப்பரோ சூப்பர்.

நான்நினைச்சதை அப்படியே அச்சுப் பிசகாமல் சூப்பரோ சூப்பரா எழுதிட்டியள் வாழ்த்துக்கள்.

அண்ணை நீங்கள் இந்தமுறை சிரிக்க சிரிக்க எழுத இல்லை எண்டு சின்னக் கோவம் நான் நினைச்சதை எழுதிப்போட்டிங்கள் என்ட உடனை போட்டுதண்ணை நீங்கள் எங்க இருந்தாலும் நல்லா இருக்கோணும் அண்ணை.

— கவிதா / ஹவுன்சிலோ

சபாஷ்

அன்புள்ள சேயோனுக்கு,

மதங்கொத்திகளிடம் கவனமாயிருக்க வேண்டுகிறேன் என்னும் சேயோனின் கட்டுரை மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதுகிறேன்.

சேயோனின் மற்றைய கட்டுரைகளையும் மிகவும் உன்னிப்பாகப் படிப்பதுண்டு. ஆயினும் இந்தக் கட்டுரை எங்கள் சமூகத்தைக் கொத்திக் கிழிப்பதற்குக் கங்கணம் கட்டி நிற்கும் ஓநாய்களுக்கு ஒரு எச்சரிக்கையாயிருக்கட்டும். அத்துடன் எங்கள் சமுதாயத்தைத் தட்டி எழுப்புவதற்க ஒரு உந்துகோலாய் இருக்கட்டும்.

சைவ மன்றங்கள், சைவ மாநாடுகள் நடத்தும் நிறுவனங்கள் இத்தகைய துரோகத்தை நிறுத்துவதற்கு எத்தகையமுயற்சிகளும் இதுவரை செய்ததாகத் தெரியவில்லை.

சேயோனின் போற்றுதற்குரிய கட்டுரை எல்லோரையும் விழித்தெழச் செய்யும் என நம்புகிறேன். உங்கள் பணி தொடரட்டும்.

எழுமின் விழிமின் எடுத்த இலட்சியம் கைகூடும்வரை உழைமின்

— இரத்தினசபாபதி

என்ன ஜோக் இது?

பேப்பரைதிறந்தால்உள்ளுக்கைசிறிலங்கன் ஏயர் லைன்ஸை புறக்கணியுங்கள் என்று எழுதிறியள். அட்டையிலை சிறிலங்கன் ஏயர் லைன்ஸ் பிளேன்ர படத்தோடை விளம்பரம் போடுறியள். உங்களுக்கே இதிலை தெளிவில்லாட்டி வாசகர்களைப் போட்டு குழப்ப வேண்டாம்.

— மருத்துவர் நாதன்/லண்டன்

முற்றத்து மல்லிகை மணக்காதோ?

ஒரு பேப்பர் எல்லா வயது மக்களாலும் விரும்பிப்படிக்கப்படுகின்ற ஒரு பேப்பர். அதை நாங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு எங்களை வெளிப்படுத்த உபயோகிக்க வேண்டும் அதாவது எங்களது நாடு, கலை, பண்பாடு கலாச்சாரம் என்ற வட்டத்துக்கு நாங்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அப்பதான் நமது என்ற தனித்துவம் காக்கப்படும்.

இந்த வரிசையில் இந்திய சினிமாவுக்கு நீங்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தை ஏன் நமது ஈழத்துக் கலைஞர்களின் கலைப்படைப்புக்களான நாடகங்கள் குறும்படங்கள் திரைப்படங்களுக்கு கொடுக்கக் கூடாது?

இந்திய சினிமாவுக்கு கொடுக்கும் கவுரவத்தை அதற்கும் கொடுத்தீர்கள் என்றால் நம் நாட்டு சினிமாத் துறையும் வளரும் அல்லவா? பொறுப்பானவர்கள் இதனைக் கருத்தில் எடுப்பார்களா?

— ரஞ்சன் / கனடா

நல்லாக் கதை விடுறியள்

சோழியனின் கதை எதிர்பார்த்தது போலவே போகுது. கை மாத்து என்று போட்டு கை நழுவினதைப்பற்றி எழுதிறியளோ?

என்னதான் இருந்தாலும் இப்படி செய்யக் கூடாது. சண்முகம் (அவற்ற கதை எப்படி முடிஞ்சுது எண்டு அறிய ஆசை) இந்த உலகத்துல யாரைத் தான் நம்ப ஏலுது, எல்லாரும் நம்ப வைச்சு கழுத்தறுக்கிற ஆக்கள் தானப்பு உலகத்தில கூட.

அப்புறம் சோழியன் நீங்கள் எழுதும் கதை மிகவும் நன்றாக உள்ளதோடு உங்களின் கதையெழுதும் திறன் வியக்க வைக்கின்றது. பாராட்டுக்கள்.

— சுமதி/ பாரிஸ்

SAAG வெப்சைட்டை காணேல்லை

நம்மட நாட்டிலை ஏதேனும் இராணுவ விசயங்கள் நடந்தால் அதைப்பற்றி இந்தியாவின் முன்னாள் இராணுவ விற்பன்னர்கள் ராமன், ஹரிகரன், சந்திரன் எண்டு சிலர் அலசி ஆராய்ந்து ஒரு வெப்சைட்டிலை எழுதுவினம். அதுக்கு பேர் saag. org.

அண்மைக்காலமாய் இந்த இணைய தள முகவரியை தட்டினால் வேறென்னெல்லாமோ வருது. கொஞ்சக் காலம் பலனா சங்கதியளும் வந்தது. ஆக ஒரு வெப்சைட்டின்ர பாதுகாப்பையே உறுதிப்படுத்த முடியாத இவையள்தான் மிலிற்றரி இன்ரலிஜன்ஸ் எகஸ்பேர்ட்டுகளாம்.

தான் போகமுடியாத மூஞ்சூறு விளக்குமாத்தையும் காவிக் கொண்டு போக வெளிகிட்ட மாதிரி தெரியேல்லையோ?

— சிந்துஜன்/லூட்டன்

இது சரியோ?

வணக்கம் ஒரு பேப்பர் காரன்கள் / காரியள்

அது சரி பிள்ளையள் srilankan பொருட்களைப் பாவிக்கப்படாது என்டு பிரச்சாரம் செய்து கொண்டு இப்படி முன்பக்கத்துல srilankan airlineவிளம்பரம் போடுறியளே?

எனக்கு தெரியும் இதைநீங்கள் வேணுமெண்டு செய்திருக்க மாட்டியள் தவறுதலாகத்தான் நடந்திருக்கு மெண்டு. இருந்தாலும் இதையும் கொஞ்சம் கவனியுங்கோ.

— விசாலாட்சி / பின்னர்

சாயாத கோபுரம்

ஒரு பேப்பர் காரருக்கு வணக்கம்

கொஞ்சக் காலமாய்ச் சாய்ந்து பொயிருந்த இளங்கோவின் சாய்ந்த கோபுரங்கள் தொடர் கடந்த சில இதழ்களில் சூடு பிடித்திருக்கிறது.

குறிப்பாக தாலி தொடர்பாகவும் சேலை தொடர்பாகவும் அவர் ஆதாரத்துடன் கருத்துக்களை முன் வைத்த விதம் பாராட்டுதற்குரியது.

வெறுமனே எழுத்தாற்றலை மட்டுமே வைத்துக் கொண்டு தாம் நினைத்ததை எல்லாம் எழுதும் எழுத்தாளரிடையே தன்னுடைய தொடரை ஆதாரங்களையும் இணைத்து எழுதிச் செல்லுகின்ற பாணியை நான் ரசித்தேன். தொடரட்டும் இளங்கோவின் தொடர். வாழட்டும் ஒரு பேப்பரின் பணி

— பாலா /ஈஸ்ட்ஹாம்

கொழும்புக் கடிதம்

வணக்கம் எல்லாரும் எப்படியிருக்கிறியள்

கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டை விட கொடும் புலி வாழும் காடு நல்லது எண்டு சொல்லறவை. அதின்ரை அர்த்தம் இப்ப தான் விளங்கது.

மனிச உயிர்களையே மதிக்காத ஒரு அரசாங்கத்துக்குக் கீழை நாங்கள் இங்கை படுற அவலங்கள் சொல்லி மாளாது. பொலிஸ் கெடுபிடி ஒரு பக்கம் போட்டு வதைக்குது எண்டால் சாமான்களின்ரை விலை வேறை கழுத்தை நெரிக்குது.

சண்டையிலை அங்கை வெண்டம் இங்கை வெண்டம் எண்ட அரசாங்கத்தின்ரை பிரச்சாரத்தை நம்பி வெற்றிப் பெருமிதத்திலை இருந்த சிங்களச் சனமும் இப்பா எல்லாப் பக்கத்தாலையும் திண்டாடத் தொடங்கிட்டுது.

கிழக்கிலை இருந்து புலியைக் கலைச்சுப் போட்டம் எண்டு றாஜபக்ச சகோதரங்கள் கூத்தாடிச்சினம். இப்ப என்னெண்டால் அம்பாந்தோட்டை, மொனறாகலை, பொலநறுவை எண்டு சிங்கள இடங்களிலை இருந்தே சனம் வெளிக்கிட்டுத் திரியுது.

அந்த ஆத்திரத்திலை தமிழ்ச் சனத்தைக் குண்டு போட்டும் கண்ணி வெடி வைச்சும் அழிச்சுக் கொண்டிருக்கினம். கொழும்பிலை சாடையாத் தட்டுப்பட முன்னமே அறிக்கை விடுற தூதுவர்மார் எல்லாம் மூச்சே விட இல்லை. ஒவ்வொரு நாளும் மனித உரிமையை அப்பட்டமா மீறுற அரசாங்கம் இருக்கு மட்டும் மனித உரிமை பாதுகாக்கப்பட்டாத் தான் ஆச்சரியப் பட வேணுமெண்டு நினைச்சுக் கொண்டு இருக்கினமோ தெரியேல்லை.

இந்த லட்சணத்திலை கோத்தபாய பிரித்தானிய அரசாங்கம் மனித உரிமையை மீறுது எண்டு சொல்லியிருக்கிறார். அதுவும் எதுக்கெண்டால் கள்ளப் பாஸ்போட்டிலை நாட்டுக்குள்ளை வந்த கருணாவையும் மனிசியையும் ஒண்டாச் சேந்து இருக்க விட இல்லையாம். இது தான் மனித உரிமை மீறலாம். இதுக்குச் சிரிக்கிறதோ அழுகிறதோ எண்டு தெரியேல்லை.

தமிழ் ஊடகக்காறரை கொலை செய்யேக்கையும் பிடிச்சக் கொண்டு போய் சித்திரவதை செய்யேக்கையும் அனேகமான சிங்கள ஊடகக் காறர் வாயைத் திறக்கேல்லை. ஆனால் ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு கடைசியா மனிசரையே கடிச்ச கதையா இப்ப அரசாங்கத்தின்ரை ரூபவாஹினிக் காறரையே போட்டு வாட்டி எடுக்கினம்.

தன்ரை செய்தியைப் போட இல்லை எண்டு போய் சண்டித்தனம் காட்டின அமைச்சருக்கு எதிரா ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்திட்டு இப்ப அடிவாங்கின ஆளையே வீட்டுக்கு அனுப்பிப் போட்டினம். இதெல்லாம் எங்கை போய் முடியப் போகுதோ தெரியேல்லை.

சரி அடுத்த கடித்திலை மிச்சங்களை எழுதிறன்

கொழும்பான்

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, FEBRUARY 01, 2008, ISSUE 87

காலாவதியான தீர்வுத் திட்டம்

யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து ஒருதலைப் பட்சமாக விலகிக் கொண்ட சிறிலங்கா அரசு சர்வதேச நாடுகளின் கண்டனங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அவசர அவசரமாக சிறிலங்கா அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தனக்கேற்ற வகையில் தீர்வுத்திட்டமொன்றை வெளியிட்டுள்ளது. மாகாண சபைகள் மூலம் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதே அந்த தீர்வுத் திட்டத்தின் உள்ளடக்கமாக இருக்கிறது.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டுக் கொண்ட இந்த அறுபது வருட காலத்தில் ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளை விளங்கிக் கொண்டு அவர்களுடன் முறையான அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ளவில்லை. இருப்பினும் முன்னர் சிங்கள தரப்பு நடைமுறைப் படுத்துவதாக அறிவித்த குறைந்த பட்சமான தீர்வுத் திட்டங்களைக் கூட தமிழர்கள் நன்றியுடன் வரவேற்றிருக்கிறார்கள்.

82ல் ஜே.ஆர். ஜயவர்தனாவால், அமைக்கப்பட்ட மாவட்ட சபைகள், 87ல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்ட மாகாண சபைகள் போன்ற அதிகாரப் பகிர்வு திட்டங்களை தமிழ் மக்களிடையே இருந்த மிதவாதத் தலைவர்களும் கணிசமானளவு பொதுமக்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரை பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், நிலமை இப்போது மாறியிருக்கிறது.

பின்னோக்கிய நகர்வாக முன்வைக்கப்பட்டிருக்கும் மாகாணசபைத் திட்டத்தை தமிழ் மக்கள் கவனத்தில் எடுக்கப் போவதில்லை. பதவி ஆசையில் சிங்கள அரசுடன் சேர்ந்தோடிக் கொண்டிருக்கும் ஒரு சில தமிழர்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம்.

அதிகாரப் பகிர்வு திட்டமொன்றை முன்வைக்க வேண்டும் என சிறிலங்காவை வலியுறுத்தி வந்த மேற்குலக நாடுகளும் இத்தீர்வு திட்டத்தினையிட்டு திருப்தியடையவில்லை. சிறிலங்காவின் முதன்மை எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இடதுசாரி முன்னணி, மேலக மக்கள் முன்னணி போன்ற கட்சிகளும் இத்தீர்வுத்திட்டத்தை ஆதரிக்கவில்லை.

தமிழ் ஒட்டுக் குழுக்களும், இலங்கை தொழிலாளர் கொங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்ற மகிந்த அரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ள அமைப்புகள் மட்டுமே, இத்தீர்வுத்திட்டத்தை வரவேற்றிருக்கின்றன. இந்த வரிசையில் இந்தியாவையும் சேர்த்துக் கொள்ளலாம். மேற்கண்ட அமைப்புக்கள் இந்தியாவின் செல்வாக்குக்கு உட்பட்டவை என்பதனால் இங்கு இந்தியாவின் ஆதரவு சற்று அதிகமாகவே வெளிப்படுகிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அமுலாக்கலில் கரிசனை செலுத்தாத இந்தியா தமிழ் மக்களிற்கு எந்த விதத்திலும் திருப்திப் படுத்தாத ஒரு தீர்வுத் திட்டத்தை ஆதரித்து நிற்பதானது அவ் ஒப்பந்தத்தை எதிர்த்தவர்களின் நிலைப்பாட்டை நியாப்படுத்துவதாக அமைகிறது.

ஒரு பேப்பர்

வணக்கம்!

ஒரு புறம் குளிர் வாட்டினாலும், பேப்பரை நேரத்துக்கு உங்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் விசைப்பலகையை தொடும் போது பேப்பரை படித்து விமர்சிக்கப் போகின்ற அல்லது மகிழ்வடையப் போகின்ற உங்கள் முகங்களே தெரிவதால் வேறெதுதும் தெரிவதில்லை.

அண்மைக் காலமாக ஒரு பேப்பர் பற்றிய விமர்சனங்கள் அதிகரித்துள்ளமை தெரியுது. இப்பத்தான் நாங்கள் பரந்த வாசகர் பரப்பை அடைந்திருக்கிறம் என்பது மகிழ்ச்சி தரும் விடயமே. ஒரே ஒரு கவலை, அந்த விமர்சனங்களை எங்களுக்கு அனுப்பினால் அதனை நாங்கள் பிரசுரித்து மற்ற வர்களையும் வாசிக்க வைக்கலாம்.

அடிக்கடி சொல்லிற சங்கதிதான், திரும்பவும் நினைப்பூட்டிறம், நீங்கள் ஒரு பேப்பர் ருக்கு ஆக்கங்களை அனுப்பும் போது அவை எந்த விதமான திருத்தங்களும் இன்றி பிரசுரிக்கப்பட வேண்டும் என எதிர்பார்த்தால் எமது ஆசிரியர் குழுவுடன் தொடர்பு கொண்டு, எழுதப் போகிற விசயம், ஆக்கங்களின் (வார்த்தைக் கணக்கில்) அளவு போன்ற விடயங்களை அறிந்து அதற்கேற்ப எழுதி அனுப்புங்கோ. தருவதை அப்படியே பிரசுரிப்பதற்கு, நாங்கள் ஒரு பதிப்பகத்தை நடாத்தவில்லை என்பதை தயவாய் உங்களது கவனத்துக்கு கொண்டு வருகிறம். இதுகள் சரிவராது எண்டிற ஆக்கள் எங்களை விட்டுங்கோ, பிளீஸ்.

இந்த பேப்பரிலை 'சைவமும் தமிழும்' என்ற தலைப்பிலை இளங்கோ எழுதியிருக்கிறார் அவரது கருத்துகள் பற்றிய உங்கட எதிர்வினையளை எதிர்பார்க்கிறோம். அதை விட்டு விட்டு நீங்கள் எல்லாம் சைவத்தின் காவலர்களாக மாறி இளங்கோவையும் ஒரு பேப்பர் ரையும் திட்டித் தீர்க்காதேங்கோ. எங்களிலையும் கனபேர் பிறப்பாலை சைவம்தான்.

எமது இணையத்தளத்தில் மீளவும் PDF வடிவத்தில் ஒரு பேப்பர் ரை பார்வையிட வசதி செய்யப்பட்டுள்ளது. கொஞ்சகாலத்துக்கு இதையும் ஒசியாய் விடலாம் என எண்ணுகிறோம்.

சிறிலங்கன் எயர்லைன்சில பிரயாணம் செய்யாதீங்கோ எண்டு உள்ளுக்கு எழுதிறியள் அட்டையிலை அதிலை பறவுங்கோ எண்டு விளம்பரம் போடுறியள் ஏனிந்த முரண்பாடு எண்டு கனபேர் எங்களை கேட்கினம். உண்மைதான நாங்கள் விளம்பரதாரர் விசயத்திலை அளவுக்கு அதிகமாய் மூக்கை நீட்டுறதில்லை என்பதாலை இந்த முரண்பாடு ஏற்படுகிறது. இருந்தாலும் சிறிலங்கா அரசாங்கத்துக்கு வருமானத்தை கொடுக்கிற அலுவல்களில் நாங்கள் ஈடுபடுதிறதில்லை எண்டு சொல்லிற வர்த்தகர்களுக்கு விளம்பர விடயத்தில் சலுகை காட்டுவதற்கு நாம் தயாராய் உள்ளோம் என்பதை சொல்லி வைக்கிறம்.

ரீன் பேப்பரில் எழுதுபவர்கள் சற்று ஆர்வக் குறைவாய் இருக்கிறார்கள் அவர்களை நீங்கள் ஊக்கப்படுத்துவதில்லை எண்டு குறைப்படுகிறார்கள். தாங்கள் கொஞ்சம் வேறுபட்ட கருத்துக்களை எழுதினால் தங்களை திட்டித் தீர்க்கிற நீங்கள் மற்றயபடி அவர்கள் எழுதிறதுகளை கண்டு கொள்ளிறதில்லை என பதே அவர்களது முறைப்பாடு. அவர்களது கருத்துக்களையும் உள்வாங்கி வளரும் சமுதாயத்தை தட்டிக் கொடுக்க வேணும். அதுக்காக அவர்கள் கிறுக்கிறது எல்லாத்தையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேணும் எண்டில்லை. எதுக்கும் அவர்கள் தமிழ் சமூகத்திற்கு என்னத்தை சொல்ல விரும்புகிறார்கள் என்பதை ஒரு பேப்பர் மூலமாய் சொல்லச் சொல்லி உங்கட குமருகளுக்கும் சொல்லி விடுங்கள்.

மீண்டும் சந்திப்போம்.

ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்

EDITORIAL

State Terrorism and Tamils

The world is made up, as Captain Segura in Graham Greene's 1958 novel Our Man in Havana puts it, of two classes: the torturable and the untorturable. "There are people," Segura explained, "who expect to be tortured and others who would be outraged by the idea." Then – so Greene thought – Catholics, particularly Latin American Catholics, were more torturable than Protestants.

Now, in Sri Lanka, Tamils hold that distinction. They are imprisoned in a nationwide network of legal and illegal detention centres. In this institutional and outsourced imprisonment coordinated by the Government of Sri Lanka (GOSL) and knitted together by the Sri Lankan Armed Forces and paramilitary operatives they are systematically tortured.

GOSL deploys Orwellian "Special Removal Units" to kidnap Tamils suspect of any political activity from anywhere in Sri Lanka to these centres. This act of kidnapping is essentially "extraordinary rendition," a hauntingly apt phrase recently reinvented by the West. "To render" means not just to hand over, but to extract the essence of a thing, as well as to hand out a verdict and "give in return or retribution" – good descriptions of what happens during torture sessions.

The majority of these kidnapped Tamils never return home.

Thus in 2008, after peace talks, lectures on what Tamils can and should aspire to, promises of democracy, human rights and the rule of law, threats of war and annihilation, our people in our Homeland are facing again, the unholy trinity of GOSL-sponsored terrorism: death squads, disappearances, and torture.

State sponsored terrorism is not new for us. In the decades after Greene wrote Our Man in Havana, Tamils coined an equally resonant word to describe the terror that had come to reign over most of our homeland- the "disappeared" Tamils.

Throughout the Eelam Wars and especially during Mrs Kumaratunge-Kadirgama's regime, thousands of Tamil civilians 'disappeared'. And now reports indicate at least another thousand Tamils have 'disappeared' in the last twelve months.

The disappeared leave behind families and friends who spend their energies dealing with corrupt politicians and security officers and later labyrinthine bureaucracies, only to be met with silence or told that their missing relative has probably gone to a foreign country, joined the Tamil Tigers or run away with a lover.

The victims are often not the most politically active, but the most popular like school teachers and journalism students. These community leaders are generally chosen to ensure that their sudden absence would generate a chilling ripple effect among the local Tamil community.

Like rendition, disappearances can not be carried out without a synchronised, sophisticated, and politically underwritten infrastructure in democratic Sri Lanka. Every one knows this, including the International Community.

> Generate a chilling ripple effect among the local Tamil community.

Modern history defines death squads as clandestine paramilitary units, nominally independent from established security agencies yet able to draw on the intelligence and logistical capabilities of those agencies. These are the building blocks of GOSL's anti Tamil state terror. Further, the point of death squads is not just to eliminate those thought to be working with the enemy, but to keep potential Tamil community leaders in a constant state of fear and anxiety.

Torture is the animating spirit of this triad, the un-holiest of this unholy trinity. During the previous Eelam Wars, the Sri Lankan security forces killed or 'disappeared' thousands of Tamils – but tortured tens of thousands more. During the last twelve months the fear of torture and rape by the Sri Lankan Security Forces has became a way of life in the Tamil Northeast. Torture, even more than the disappearances, is meant not so much to get one person to talk as to get everybody else to shut up.

The International Community are fully aware of the use of death squads, disappearances, and torture as part of the GOSL war against Tamils.

Cynics among us say that the use of death squads, disappearances, and torture as part of counter insurgency training was imparted to the GOSL security forces by the International Community long ago. They point to a large body of evidence for this and specifically the work of Naomi Klein and Alfred McCoy.

Naomi Klein and Alfred McCoy documented in their recent books that the latest counter insurgency field manuals used in various pro Western countries were compiled using information gathered from CIA-commissioned mind control and electric-shock experiments conducted in the 1950s. According to these books "before all else, you must be efficient," said U.S. police adviser Dan Mitrione, assassinated by Uruguay's revolutionary Tupamaros in 1970 for training security forces in the finer points of torture. "You must cause only the damage that is strictly necessary, not a bit more." Mitrione taught by demonstration, reportedly torturing to death a number of homeless people kidnapped off the streets of Montevideo. "We must control our tempers in any case," he said. "You have to act with the efficiency and cleanliness of a surgeon and with the perfection of an artist."

Florencio Caballero, escaped from Honduras' notorious Battalion 316 into exile in Canada in 1986, and testified that U.S. instructors urged him to inflict psychological, not "physical," pain "to study the fears and weakness of a prisoner." Force the victim to "stand up," the Americans reportedly taught Caballero, "don't let him sleep, keep him naked and in isolation, put rats and cockroaches in his cell, give him bad food, serve him dead animals, throw cold water on him, change the temperature."

This probably sounds all too horribly familiar to many Tamils and to any mental health professional who has treated a Tamil torture victim.

We can only hope that another generation will not have to suffer this fate.

நம்பகத் தன்மையான அதிகாரப் பகிர்வையே இலங்கையிடமிருந்து சர்வதேசம் எதிர்பார்க்கிறது 13ஆவது திருத்த அமுலாக்கத்தை அல்ல என்கின்றனர் இராஜதந்திரிகள்

நம்பகத்தன்மை மிக்க அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஒன்றையே (Credible Power Sharing Proposal) சர்வதேச சமூகம் இன்றைய நிலையில் இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்க்கின்றது. அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் திட்டம் பற்றிய அறிவிப்பை அல்ல.

கொழும்பில் சர்வதேச சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இராஜதந்திரிகள் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கின்றனர். இலங்கையில் சிவில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள தரப்புகளுக்கு இடையில் சமர சம் செய்யும் முயற்சியில் சர்வதேச சமூகம் கடந்த ஏழு, எட்டு ஆண்டுகளாக சம்பந்தப்பட்டிருக்கின்றது.

இந்த வகையில் இப் பிரச்சினையை அமைதி வழியில் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இரு தரப்புகளுமே எடுக்க வேண்டும் என சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது என் றும் இராஜந்திரிகள் சுட்டிக்காட்டியிருக்கின் றனர்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ வழி முறையில் தீர்வு காண முடியாது என் பதே சர்வதேச சமூகத்தின் ஒரே நிலைப்பாடாகும்.

அதிகாரப் பகிர்வின் மூலம் அனைவரா லும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை அமைதி வழியில் பெற இரு தரப்புகளும் விடாது முயற்சிக்க வேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

இதை மீறி, இராணுவ வழியிலான தீர்வில் சம்பந்தப்பட்ட தரப்புகள் முனைப்புக் காட்டுவது சர்வதேச சமூகத்தைப் பெரும் விசனத்துக்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

பேச்சு மூலம் அமைதித் தீர்வை எட்டு வதாயின் அதற்கான யோசனைத் திட்டம் ஒன்று அவசியம். அத்தகைய யோசனைத் திட்டம் ஒன்றின் அடிப்படையில் இரு தரப்புகளும் பேச்சு மேசைக்குச் சென்று தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதையே சர்வதேச சமூகம் தனது திட்டமாக மனதில் கொண்டுள்ளது. அத்தகைய சமரச முயற்சிகளை ஊக்குவித்து, முன்னெடுப்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கவும் சர்வதேசம் காத்துத் தயாராக இருக்கின்றது.

இரு தரப்புகளும் பேச்சு மேசைக்குச் சென்று தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதையே சர்வதேச சமூகம் தனது திட்டமாக மனதில் கொண்டுள்ளது.

எனவே, இப்பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காணப்பட வேண்டுமானால் சிறுபான்மையின ருக்கு நியாயமான அதிகாரங்களைப் பகிர்ந்த ளிக்கும் நம்பகத்தன்மையுடைய அதிகாரப்பகிர்வுத் திட்டம் ஒன்றை அரசுதரப்பு முன்மொழியவேண்டும் என சர்வதேச சமூகம் உரிமையுடன் எதிர்பார்க் கின்றது.

ஏற்கனவே நாட்டின் சட்டத்தில் உள்ள ஒன்றை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதன் மூலம் அமைதித் தீர்வை எட்டிவிடலாம் என்ற இலங்கை அரசின் கருத்தை சர்வதேச சமூகம் நம்பகத் தயாராக இல்லை.

அதனால்தான் அத்தகைய தனது உத்தியை இலங்கை அறிவித்த போதிலும் அதற்கு ஆதரவான குரலையோ அல்லது அச் செயற்பாட்டை வரவேற் கும் அறிவிப்பையோ சர்வதேச சமூகம் விடுக்க வில்லை.

இந்தியா மட்டுமே இந்நடவடிக்கையை அதிகாரப் பகிர்வுக்கான முதல் நடவடிக்கை என்று மட்டும் குறிப்பிட்டு வர வேற்புத் தெரிவித்தது.

சர்வதேச சமூகம், நம்பகத் தன்மை யான அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதையே இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்க்கின் றது என்ற விடயத்தை இணைத் தலைமை நாடுகளும் வெளிப்படையாகத் தெரிவிக் கத் தயாராகியுள்ளன. அத்தகைய அறிவிப்பை விடுப்பதற்கான பொருத்தமான சந்தர்ப்பத்தை அவை பார்த்துக் காத்திருக்கின்றன. இவ்வாறு இலங்கைப் பிரச்சினை விவகாரத்தில் ஈடுபாடு காட்டும் நாடுகளின் முக்கிய இராஜதந்திரிகள் உதயனுக் குத் தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் ஒட்டுமொத்த கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத் தும் ஆவணங்கள், அறிக்கைகள், அறிவிப்புகள் பல்வேறு வடிவுகளில் இனி வெளிவரும் என எதிர் பார்க்கலாம் என்றும் அவர்கள் கூறினர்.

- உதயன்

வெல்லும் நாள்

வெகுதூரம் இல்லை

வெற்றி அன்றி

வேறோர் சொல்

இல்லை.

13th amendment, the problem today not the solution

By Dr. Vickramabahu Karunaratne

After going through series of elaborate and far reaching discussions on united state of regions, federalism, internal self determination etc., etc., we have come back to the 13 th amendment.

The 13th Amendment is nothing more than one step forward and ten steps back! True, it was a step forward 20 years ago, when not even parity of languages considered seriously. The 13th amendment and associated changes, at least nominally, introduced parity of languages, autonomy to the Tamil homeland, and abrogation of statelessness. Of course nothing substantial happened to resolve the Tamil national problem, but introduction of all these concepts into the constitution is a victory that one must not underestimate.

The roots of the 13th amendment go back to the All Party Conference called by the late President Jayewardene. It is an all party conference (APC) to which all registered, non proscribed parties were invited.

I participated as a member of the new Sama Samaja party delegation. There were very powerful political figures in the assembly. Dr Colvin, Peter Keunaman, Vijaya , Kumar Ponnambalam, Amirthalingam and TULF leaders, Ashrof, Thondaman Sr., and many others. The government was represented by; in addition to the President, Gamini, Lalith, Hameed and others. At that time I got opportunities to participate in common seminars where Gamini and Lalith too attended.

Our Position

I found them to be sharp and witty with wisdom to listen carefully to opposite opinion. They were able to counter my arguments from their own position with clear analytic statements. At least, I was able to clarify and consolidate my own ideas by debating with them. In the assembly Hameed came out as a brilliant star, always guiding the assembly to the point of discussion. In that assembly we fought for two things.

May be he believes that his masters at Indra- prasasthi will be happy to hear that, and continue to help his military answer to the Tamil national problem.

Firstly, if the APC is seeking a political solution to the Tamil national problem then devolution should be based on nationality. Hence the Tamil homeland should be identified. Secondly, that any draft document prepared by the APC, should be first presented to the representatives of the Tamil speaking people, including the militant armed organizations, before taking any further action.

JR and MR

JR was willing to consider these suggestions seriously but he was tied down by the very forces he represented. It may not be an overstatement to say that in the history of Sri Lanka, JR will have a special place comparable to that of Bismarck of Germany.

Within two years he has become an arch reactionary Sinhala chauvinist.

This man, an arch reactionary that ruthlessly put us behind bars, threw us out of jobs and threatened with death for no reason except for blatant class interest, in 1986 turned round to compromise with the working-class forces to discuss seriously to resolve the Tamil national problem.

Until 85 my party was banned, we were in hiding to escape death, few months later I was seated face to face with JR, my class enemy, discussing the way out for the Tamil speaking people!

Today the present President MR , who never bothered even to participate in the in the APC of President JR, after twenty years has barged into the APRC of Minister Tissa, screaming that JRs 13th amendment is the golden solution to Tamil grievances.

May be he believes that his masters at Indra- prasasthi will be happy to hear that, and continue to help his military answer to the Tamil national problem.

Whether one applies the uthpatha-thithi-banga rule of Buddha or the negation of the negation rule of Hegel, the inevitable truth is that the 13 th amendment has become today the problem, and not the solution.

In the past when he was in the parliament, President MR was considered by many to be a friend of the proletariat. Within two years he has become an arch reactionary Sinhala chauvinist.

May be Mahinda wants to recreate the Ramayana to become a modern day Aryan Rama? He expects the Hanuman of Indra-prasasthi to help him to annihilate the Dravidian army of Prabha, to install a sub ruler for the Tamil province. May be Minister Douglas is the modern Vibishana in waiting! But the sad truth is that the dream of the trio Mahinda, Champika and Wimal is a bigger myth than Ramayana.

No nation can be subjugated in modern times unless the oppressed people themselves abandon the wish for freedom, liberty and self rule. Gandhi, the saint of Indian independence said that few decades ago.

The Tamils are fighting a bloody battle against a military solution and at the same time hunger, fear and anarchy are taking over the country. While this misery is going on JVP leaders are waiting till Mahinda compromises with those who are demanding a political solution.

That will be the opening for them, not to fight against the misery and destitution, but to make use of such condition to establish the dictatorship of the chauvinist grave diggers.

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

லண்டன்
சேயோன் - அ.இரவி
மணி - அகிலன்

கனடா
தயா - பொன்.விவேகானந்தன்

பாரிஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன் - சாந்தி

சுவிஸ்
ரேமன் : சந்துரு

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
பாலா

விளம்பரம்
கௌரி - சிந்து

அச்சு
குமார் (ஜெர்மனி)

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 8640 4604
020 8286 9327
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277

தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3L J
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

வெல்லும் காலம் வெகுதூரம் இல்லை

போர்க்களம் இப்போது இன்னும் சூடு பிடித்தி ருக்கிறது. அதை புலம் பெயர் தேசமொன்றில் இருந்து கொண்டு கைதட்டி ஆர்ப்பரித்து சொல்வதில் தயக்கமாக இருக்கிறது. சொல்கி றோமோ இல்லையோ யதார்த்தம் அதுதான். இவ்வேளையில் எங்கள் பங்கு என்ன? நாங்கள் யாது செய்ய வேண்டும் எனச் சிந்திப்பது பயனுடையது.

நான் ஒன்று சொல்வேன். எதையும் ஏன் என்று கேளாமல், ஏதுக்கும் குறுக்கே நில்லாமல், எவற்றையும் விமர்சனம் செய்யாமல் நடப்பது என்னவென்று பார்ப்பபோம். நல்லதே நடக்கிறது என்று நம்புவோம். தலைவரை நம்புவோம். தளபதிகளை, போராளிகளை நம்புவோம்.

தாயகம் காப்போருக்கும் தாயகத்தை நேசிக் கும் எங்களுக்கும் இடையில் ஆயிரம் ஆயிரம் மைல்கள் இருக்கின்றன. உலகம் சுருங்கி விட்டது என்பார்கள். அது எங்கு? பிரச்சினை ஏதும் நடவாத, இலத்திரனியல் சாதனங்கள் இலகுவாக நடமாடக் கூடிய இடங்களில்தான் உலகம் சுருங்கிவிட்டது. போர் நிகழும் தேசம் யாவற்றிலும் போரின் வெப்பத்தால் உலகம் இன்னும் விரிந்து விட்டது. ஏதும் செய்தி நம் காதை எட்டாத் தொலைவில் இருக்கிறது நம் தேசம். ஆகவே அனைத்தையும் இட்டு அவதானமாக இருப்போம். கவனமாகக் காது கொடுப்போம்.

நமது தேச விடுதலை எதிரிகளால் சூழப்பட்டிருக்கிறது. எதிரி என்றால் ஒருவன் இல்லை. இருவர் இல்லை, பல்வேறு விதமாக, பல்வேறு வடிவில், பல்வேறு தலைகளுடன், பல் வேறு முகங்களுடன் எதிரிகள் எங்களை நோக்கி அடியெடுக்கிறார்கள். நெருங்கி வருகி றார்கள். நெருங்குகிறார்கள். மிக மிகக் கவன மாக இருக்க வேண்டிய தருணம் இது.

இந்த எதிரிகள் கோடி கோடியாகக் காசைக் கொட்டுகிறார்கள். ஆயுதங்களைக் கொட்டுகி றார்கள். சும்மா ஒரு கதைக்குச் சொல்வதென் றால் எங்கள் தமிழ்ச்செல்வனைக் காவு கொண்ட குண்டின் பெறுமதி ஏழாயிரம் பவுண்ட்ஸாம்.

கொட்டிய காசு வெறும் சாக்கில் கட்டி வைக்கவா இருக்கின்றது? அத்தனையும் நீராக தீயாக புயலாகச் சீறிப்பெருகும். இண்டு இடுக்கு எதையும் விடாது. அப்படிப்போகும் வழியெல்லாம் எங்களுக்குப் புரியும் என்றல்ல. புரிந்தவை சில, புரியாதவை பல. இதையும் சும்மா ஒரு கதையாச் சொல்லுகிறேன். டக்ளஸ் என்ற அந்த எலும்பு பொறுக்கி நாய் அடிக்கடி பிரான்ஸ் வருகிறார்.

சற்று மாறுதலுக்காக

எழுதுவது: சேயோன்

அங்கு 'அப்படி இப்படி' என்று அல்லாடிக் கொண்டு திரிகின்ற, கொஞ்சம் சத்தம் போடத் தெரிந்த சிலரை விலைக்கு வாங்கி, நரிவேலைகள் பலவற்றுக்கு வளையம் போட்டு வைத்திருக்குது இந்தப் பொறுக்கி நாய். இந்த நரிக்கும்பல் என்ன செய்யும்? வஞ்சனையில்லாமல் வீசின பணத்துக்கு சில வஞ்சகங்கள் புரியும். நமது தேச விடுதலைப் போரில் அது எப்படியோ சில பாதகங்களைத் தரும்.

இந்திய அரசும் நாலு பேரை அழைத்துப் பேசியிருக்கிறது. அந்த நாலு நாய்களும் யார் தெரியுமா, கூத்தணிச்சங்கரி, புள்ளொட்சித்து, ஈப்பீச்சிறீதரன். ஈப்பீடீப்பீமகேஸ்

இந்தியா இவர்களுக்கு என்ன சொல்லியிருக்கும்? நல்ல பிள்ளைகளா, சமர்த்தா, இந்தியாங்கிள் சொல்லிற எல்லாத் துக்கும் தலையாட்டிக் கொண்டிருங்கோ. நான் பிள்ளைகளுக்கு ரொபி, சொக்கிலேட் எல்லாம் தருவன், மகிந்தாப்பெரியப்பா என்ன சொன் னாலும் கேளுங்கோ என்று பால் போச்சியையும் வாயிலை சொருகி அனுப்பிவிட இதுகள் சப்புக் கொட்டிக் கொண்டு வந்து கொழும்பிலை இறங்குதுகள்.

இவையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என் றால் இதுதான் நிலைமை. இதுதான் யதார்த்தம். இந்த இடத்தில் நாங்கள் என்ன செய்யப் போகின்றோம்?

ஏன்? எப்படி? என்ன? என்றெல்லாம் கேட்டு ஆய்க்கினை கொடுக்கப் போகின்றோமா? சும்மா வாயில்வந்தபடியெல்லாம் கதைகள் பேசப்போகி றோமா? புதுவை இரத்தினதுரை இயற்றி கண்ணன் இசையமைத்து பொன் சுந்தரலிங்கம் பாடிய பாடலின் ஒரு வரி ஞாபகம் வருகிறது

'நாவுக்கு இதமாகக கதைப்பாயா – இல்லை
நானுமோர் புலியென்று வருவாயா'

இந்திய அரசும் நாலு பேரை அழைத்துப் பேசியிருக்கிறது. அந்த நாலு நாய்களும் யார் தெரியுமா, கூத்தணிச்சங்கரி, புள்ளொட்சித்து, ஈப்பீச்சிறீதரன். ஈப்பீடீப்பீமகேஸ்

இந்த நாவுக்கு இதமாகக் கதைப்பதிலும் இரண்டுவகை இருக்கிறது. ஒன்று 'என்ன இன்னும் பாயிறாங்கள் இல்லை. நித்திரை கொள்ளு றாங்களோ?' இந்த மாதிரி கதைப்பது ஒருவகை.

மற்றவகை இப்படி 'அங்கை சாப்பாடில்லாமல் சனம் கஷ்ரப்படுதாம் சும்மா சண்டை சண்டை என்டு பிடிச்சு சனங்களை அழிக்கிறாங்கள் சனம் குழறக் குழற பிள்ளைகளைப் படையில சேர்க்கிறாங்களாம் அப்பாவிச் சிங்களச் சன ங்களை ஏன் சாக்காட்டுறாங்கள்' இன்னும் இன்னும்...

இவை யாவற்றுக்கும் என்னிடம் பதில்கள் இருக்கின்றன. இங்கு அவற்றை தவிர்க்கிறேன். என்றாலும் இரண்டு வசனம் சொல்கிறேன்.

மேலை நாடுகளிலும் ஒரு வயதிற்கு வந்தவுடன் கட்டாய இராணுவ சேவை இருக்கிறது. இரண்டாவது வசனம் சிங்கள மாவட்டங்களில் விழுகின்ற அடிகள் இன்னொரு யுத்த தந்திரம் அவ்வளவுதான்.

எது எப்படியோ, இறுதியாகச் சொல்வது இதைத்தான். நாம் தலைவரை நம்புவோம். அவர் சரியானதைத்தான் செய்கிறார். நாம் செய்ய வேண்டியது நம்புவதும் நம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்வதுமேயாகும். இருந்து பாருங்கள் வெல்லும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

தீய நட்பு

நல்ல நிலையில் உள்ளவர்களைத்தேடி பலரும் வருவர். இவர்களில் சிலர் தம் சுயநலத்திற்காக தம்மை நண்பர்களாகக் காட்டிக் கொள்வர். இவர்களின் நட்டைப் பேணுவது நன்மை பயக்காது. இவர்களுடைய நட்பு மானுக்கு வேடன் வலைவிரித்தலை ஒக்கும். ஆதலின் இவர்களுடைய நட்பை வளர விடுவதிலும் பார்க்க தடுத்து விடுதலே நன்மை பயக்கும். (குறள் 811)

ஏனெனில் இவ்வாறாக சுயநலம் கருதி மற்ற வர்களுடைய நட்பைத் தேடிக் கொள்பவர்கள். மரம் பழுத்தவுடன் மரத்தைத் தேடி வரும் வெளவால்களைப் போன்றவர்கள்.

பழம் முடிந்தவுடன் மரத்தைவிட்டு விலகிவிடும் பட்சிகள் போல ஒருவன் தன் செல்வத்தை இழந்த நேரத்தில் அவனைவிட்டு அகன்று விடுவர். இப்படியானோரின் நட்பு இருந்தாலென்ன. இல்லாவிட்டாலும் என்ன? (குறள் 812)

தமது நலன் கருதியே நட்புக் கொள்பவர்கள் விலை மகளிருக்கும் கள்வருக்கும் ஒப்பான வர்கள். இன்பம் உகரவரும் ஆண்மகனிடமிருந்து என்ன பெறலாம் என்பதிலேயே கருத்தாயிருப்பார். அவர்களுக்கு அந்த ஆடவனிடத்திலும் அன்பு கிடையாது. அவனில் அக்கறை கிடையாது. அவனிடமிருந்து என்ன இடைக்கும் என்பதிலிலேயே குறியாக இருப்பார்.

கள்வர்களும் இதே வகையினரே. வீட்டு உரிமையாளர் கவனக்குறைவாக இருக்கும் நேரத்தில் அவரிடமிருந்து களவாடுவர். எப்போது வீட்டிற்கு தாழ்ப்பாள் போடாது இருக்கிறான் என்று பார்த்திருந்து களவாடுவர். தம் நலம் மட்டும் நாடுவார். நட்பும் இத்தகையதே. (குறள் 813)

இவருடைய நட்பு மிகவும் அபாயகரமானது. இக் கட்டான வேளைகளில் கைகொடுப்பதற்குப் பதிலாக கீழே தள்ளி ஏறி மிதிப்பர். போருக்குச் செல்லும் வீரன் ஒருவன் தான் ஏறிச்செல்லும் குதிரை போர்க்களத்தில் தான் சண்டை செய்வதற்கு உதவும் என எதிர்பார்ப்பான். அது நல்ல போர்ப்பயிற்சி பெற்ற குதிரையாக இருக்கும் என எதிர்பார்ப்பான்.

வள்ளுவர் காட்டும் வழி

எழுதுவது: இராம. கே. நாதன்

ஆனால் அதற்குப் பதிலாக போர்க்களத்தில் அக்குதிரை அவ்வீரனை எகிறிக்குதித்து கீழே தள்ளி அவனை ஏறி மிதிக்கும் குதிரையாக மாறிவிட்டால் அதனால் அவனுக்கு ஆபத்தே விளையும். அதே போன்று ஆபத்திற்கு உதவிசெய்யாத நண்பனால் ஒருவனுக்கு என்ன பயன்? (குறள் 814).

ஒரு நல்ல நண்பன் அன்புடையவனாக இருத்தல் மட்டுமன்றி. அறிவாளியாக, தன்னை நண்பனாகக் கொண்டவனின் நல்வாழ்விற்கும் பாதுகாவலான இருத்தல் வேண்டும். எனவே நண்பனின் ஆபத்திற்குதவாத சிறுமைக் குணம் கொண்டிருக்கும் நட்பைப் பெறுவதிலும் பார்க்க அதைப் பெறாமல் இருப்பதே சிறந்தது. (குறள் 815).

அன்பு என்ற பெயரால் ஒரு அறிவற்றவனுடன் நட்புக் கொள்வதை விட ஒரு அறிவாளியினுடைய கையே மேல். ஏனெனில் ஒரு அறிவற்ற மூடன் தனது நண்பனை மிகவும் ஆபத்தான. இக்கட்டான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்க வைத்து விடுவான். ஆனால் ஒரு அறிவுள்ளவர் பகைவனாக இருந்தாலும் கூட நீதி நியாயத்துடன் நடந்து கொள்வர். (குறள் 816)

சிரித்துப் பேசி மகிழ்வதற்காக மாத்திரமே நட்புக்கொண்டால் அதனால் ஒரு பயனும் இல்லை. பொழுது போக்கு, கேளிக்கை முதலியவற்றில் ஒருவன் நாட்டம் கொள்வானே யாகில் அவனது கடமைகளிலிருந்து தவற அது காரணமாகிவிடும். அல்லது தவறான பாதையில் செல்லத் தூண்டும்.

ஒரு நல்ல நண்பன் அன்புடையவனாக இருத்தல் மட்டுமன்றி. அறிவாளியாக, தன்னை நண்பனாகக் கொண்டவனின் நல்வாழ்விற்கும் பாதுகாவலான இருத்தல் வேண்டும்.

இந்தச் செய்கைகள் ஒருவனது பகைவருக்கு சாதகமான நிலையை உண்டாக்கும். அவர்களால் ஊறுவிளைவிக்க உதவும். ஆகையால் வெறுமனே சிரித்துப் பேசி கேளிக்கைகளில் ஈடுபட மாத்திரம் நண்பர்களைத் தேடிக்கொள்வது தீது. (குறள் 817)

ஒரு நல்ல நண்பன் நம்பத்தகுந்தவனாக இருத்தல் வேண்டும். அவனிடம் ஒப்படைக்கும் பொறுப்பை செவ்வனே செய்யும் ஆவல் அவனிடம் இருக்க வேண்டும். தனது தோல்விக்கு பொய்க்காரணம் கூறும் நேர்மையற்றவனாக இருத்தல் தகாது. அத்தகைய நண்பர்களை சிறிது சிறிதாக நீக்கிவிடலே சிறந்தது. (குறள் 818)

நண்பர்கள் நேர்மையாளர்களாக இருத்தல் வேண்டும். 'உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுபர்களது உறவு' கலவாது இருத்தல் வேண்டும். என்னும் கருத்தே வலியுறுத்தப் படுகிறது. ஏனெனில் அத்தகைய நண்பர்களால் கனவிலும் நினைத்துப் பார்க்கமுடியாத துன்பங்கள் உண்டாகும். (குறள் 819)

சிலர் நண்பர்கள்போல் பழகுவார்கள். ஒருவருடைய அந்நியோன்னியமான செய்திகளை அறிந்து கொள்வர். அதன்பின் பிறரிடத்தில் போய் தம் நண்பர்களைப் பற்றி அவதூறு பேசுவர். இழித்தும் பழித்தும் பேசுவர். இத்தகையோரின் நட்பு எக்காலத்தும் தம்மை அணுகாதபடி ஒருவர் காத்துக்கொள்ளுதல் வேண்டும்.

தேசியத் தலைவருக்கு வைக்கப்படும் குறி - பின்னணியும் உண்மை நிலையும்

80களின் தொடக்கத்தில் தேசியத் தலைவர் அவர்கள் ஒரு முறை பொதுமக்கள் பிரயாணம் செய்யும் பேருந்து ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்தார். போராட்டம் ஆரம்பமாகிய கால கட்டம் அது. 'பிரபாகரன்' என்ற பெயர் அப்பொழுதுதான் மெது மெதுவாக பிரபல்யமாகிக் கொண்டிருந்தது. பிரபாகரன் என்பவர் எப்படி இருப்பார் என்பதைக் கூட சரியாக அறிந்திராத சிறிலங்காவின் காவல்துறை தேசியத் தலைவரை தேடி அலைந்து கொண்டிருந்தது.

தேசியத் தலைவர் பேருந்து ஒன்றில் பயணிக்கும் விடயம் சிறிலங்கா காவல்துறைக்கு தெரிந்து விட்டது. எந்தப் பேருந்தில் பயணிக்கிறார், என்ன உடை அணிந்திருக்கிறார் என்பதை எல்லாம் சரியாகத் தெரிந்து கொண்ட காவல்துறை பேருந்தில் ஏறி தேசியத்தலைவரை தேடியது. தேசியத் தலைவரின் இருக்கைக்கு முன்னால் அவரைப் போன்ற உடை யணிந்திருந்த ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் தான் பிரபர்கரன் என்று தவறுதலாக எண்ணிய சிறிலங்காவின் காவல்துறை அவரைக் கைது செய்து கொண்டு சென்றது.

இது அன்றையகாலத்தில் போராளிகள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்ட ஒரு செய்தி.

இந்திய இராணுவத்தினரோடு நடந்த சண்டைகளிலும் தேசியத் தலைவரை இந்தியப் படையினர் பலமுறை நெருங்கியிருக்கிறார்கள். எத்தனையோ முறை தேசியத் தலைவர் அருகில் நிற்பது தெரியாமல் இந்திய இராணுவம் கடந்து சென்றிருக்கிறது.

சிறிலங்காப் படையின் வான்தாக்குதலில் வீரச் சாவடைந்த பிரிகேடியர் தமிழ்செல்வன் சில ஆண்டுகளுக்கு முன்பு மலேசியாவில் இருந்து வெளிவரும் ஊடகம் ஒன்றிற்கு ஒரு பேட்டியை வழங்கியிருந்தார். அதிலே அவர் கேட்பவர் மனம் பதைபதைக்கக் கூடிய ஒரு விடயத்தை சாதரணமாக வெளிப்படுத்தினார்.

இந்திய இராணுவம் தேசியத் தலைவரை இலக்கு வைத்து பெரும் தாக்குதல்களை முடுக்கி விட்டிருந்தது. இந்த நிலையில் தேசியத் தலைவர் பிரிகேடியர் தமிழ்செல்வனுக்கு ஒரு உத்தரவை வழங்கினார். எதிரியிடம் உயிரோடு அகப்படக் கூடாது என்ற உறுதியான முடிவில் இருந்த தேசியத் தலைவர், இன்னும் ஒரு முடிவையும் எடுத்திருந்தார். தன்னுடைய உடலையும் எதிரிகைப்பற்றக் கூடாது என்பதுதான் அது.

அதன்படி எதிரியிடம் கிடைக்காதவாறு தன்னுடைய உடலை முற்று முழுதாக எரித்து விட வேண்டும் என்பதுதான் தேசியத் தலைவர் தமிழ் செல்வனுக்கு வழங்கிய உத்தரவு. அதன் பிறகு அந்த உத்தரவின் படி தேசியத்தலைவர் செல்கின்ற இடத்திற்கு எல்லாம் தமிழ்செல்வனும் ஒரு பெற் றோல் கலனுடன் சென்று வந்தார்.

இதை நினைத்துப் பார்க்கின்ற போதே மனம் சிலிர்க்கின்றது. தேசியத் தலைவரின் இந்த உத்தர விற்கு காரணம் போராட்டத்தை தக்க வைப்பது தான். தனக்குப் பின்பும் விடுதலை பெறும் வரை போராட்டம் தொடர வேண்டும் என்பதில் தேசியத் தலைவர் உறுதியாக இருந்தார்.

எதிரியிடம் அகப்படும் நிலையில் பலமுறை இருந்த தேசியத் தலைவர் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணத்தால் எதிரியிடம் சிக்காது தப்பினார். எதிரியின் கவனக்குறைவைப் பயன் படுத்தி சில முறையும், தன்னுடைய மதியூகத்தால் சில முறையும், சண்டைகள் செய்து பல முறையும் தேசியத் தலைவர் எதிரிகளிடம் இருந்து தப்பித்துக் கொண்டார்.

இன்றைக்கு தேசியத் தலைவர் நிற்கும் பக்கமே நெருங்க முடியாத அளவிற்கு விடுதலைப் புலிகள் பெரும் பலத்தோடு நிற்கிறார்கள். வேறு வழியில் லாத எதிரிகளும் கற்பனைகளில் தேசியத் தலை வரை சாகடித்து இன்பம் காண்கின்றனர். இப்படி தேசியத் தலைவரை கற்பனையில் சாகடிக்கும் பழக்கம் எதிரிகளுக்கு எப்பொழுது ஏற்பட்டது என்பது சரியாகத் தெரியவில்லை.

1986ஆம் ஆண்டில் கொழும்பில் இருந்து வெளி வரும் 'சண்' பத்திரிகை ஒரு செய்தியை வெளியிட்டது. விடுதலைப் புலிகள் சென்று கொண் டிருந்த ஒரு படகை சிறிலங்கா கடற்படை தாக்கி மூழ்கடித்ததாகவும், அதில் இருந்த அனைவரும் இறந்து விட்டார்கள் என்றும் அப் பத்திரிகையின் செய்தி கூறியது. செய்தி அத்துடன் முடிந்து விடவில்லை. உடல்கள் அனைத்தும் கடலில் மூழ்கிவிட்டதாகவும், ஆனால் கடலில் மிதந்த ஒரு அடையாள அட்டையை கடற்படையினர் மீட்டிருப்பதாகவும், அந்த அடையாள அட்டையில் 'வேலுப்பிள்ளை பிரபாகரன்' என்ற பெயர் இருந்த தாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்திருந்தது.

அரசியல் அலசல்

அலசுபவர்: வி.சபேசன்

அநேகமாக இதுதான் ஆரம்பமாக இருக்க வேண்டும். அதன் பிறகும் எதிரிகள் தேசியத் தலைவரை பல முறை தமது கற்பனையில் சாகடித்து விட்டார்கள்.

இந்தியப் படையினரின் காலத்தில் தேசியத் தலைவரின் உடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ள இடத்தை எல்லாம் சொன்னார்கள். சுனாமி வந்த பொழுது உடல் வைக்கப்படும் பேழையின் நிறத்தையும் பெறுமதியையும் சொன்னார்கள். கடந்த நவம்பரின் போது தேசியத் தலைவர் காயம் என்று கதை கதையாக சொன்னார்கள். அதன் பிறகு தேசியத் தலைவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார்கள். இடையில் அவருடைய மனைவியையும் இந்தியா அனுப்பி வைத்தார்கள். சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் தேசியத் தலைவரை தென்னாபிரிக்காவிற்கும் அனுப்பி வைத்திருந்தார்கள்.

இப்படி எதிரிகள் காணும் கனவிற்கு எந்த ஒரு வரைமுறையும் இருப்பது இல்லை. கனவுகள் என்றவுடனேயே அவைகள் விதிகளுக்குள் உட்பட வேண்டிய அவசியம் இல்லாமலும் போய்விடுகிறது.

கடந்த வாரம் புதன் கிழமை தேசியத் தலைவர் தங்கியிருந்த முகாமை தாக்கி அழித்து விட்டதாக சிறிலங்கா அரசு செய்தி ஒன்றைப் பரப்பியது. இம் முறை இலக்குத் தவறவில்லை என்ற செய்தி படையினர் மத்தியில் உலாவந்து அது சிங்கள மக்கள் மத்தியிலும் பரவியது. பல சிங்களவர்கள் வெடி கொளுத்தியும், பால்சோறு பொங்கியும், மது அருந்தியும் உற்சாகமாகக் கொண்டாடினார்கள். கடைசியில் அப்படி எதுவும் நடைபெறவில்லை என்று தெரிந்து ஏமாற்றம் அடைந்தார்கள்.

தேசியத் தலைவரை இலக்கு வைக்கும் முயற்சியில் சிங்கள அரசு தற்பொழுது தீவிரம் காட்டுவது போல் தெரிந்தாலும், இம் முயற்சி பல ஆண்டுகளாகவே நடைபெற்று வருகின்ற ஒன்று. இன்னும் சொல்லப் போனால் பேச்சுவார்த்தைக் காலங்களிலும் இதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன என்பதுதான் உண்மை. அப்பொழுது மிக ரகசியமான முறையில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்பொழுது வெளிப்படையாக அறிவித்து விட்டு முயற்சி செய்கிறார்கள். அதுதான் வித்தியாசம்.

இம் முயற்சிக்கு சில வல்லரசு நாடுகளின் ஆதரவும் உள்ளது என்பது இதில் வெளிப் படையாக அறிவிக்கப்படாத ஒரு செய்தி.

இந்த வல்லரசு நாடுகள் தேசியத் தலைவரை அகற்றுவதன் மூலம் தமிழர் போராட்டத்தை இல்லா மல் செய்து விடலாம் என்று நம்புகின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டம் தேசியத் தலைவரை சுற்றி பின்னப்பட்டுள்ளதாக கருதுகின்ற இந்த நாடுகள் தேசியத் தலைவரை அகற்றும் நடவடிக் கைக்கு அனைத்து ஆதரவுகளையும் வழங்கி வருகின்றன.

இன்றைக்கு சிறிலங்காவிற்கு வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப உதவிகள் மிக நவீனமானவை. மிக இரகசியமான முறையில் வழங்கப்படுகின்ற இந்த உதவிகள் சிறிலங்காவிற்கு தன்னுடைய இலக்கை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கையை கொடுத்துள்ளது.

ஆனால் இந்த வல்லரசு நாடுகள் சில விடயங் களை வெகு இலகுவாக மறந்து விடுகின்றன. தலைமைகளை அழிப்பதால் மக்கள் போராட்டம் அழிந்து போய்விடுவது இல்லை. மத்திய கிழக்கில் இஸ்ரேலும் வான் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் மூலம் ஹமாஸ் இயக்கத்தின் தலைமையை அழித்தது. ஆனால் ஹமாஸ் இயக்கம் மேலும் வீறு கொண்டு எழுந்தது. மக்கள் ஆதரவோடு பாலஸ்தீன நிர்வாகத்தையும் கைப்பற்றியது.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக வியட் நாமிய மக்கள் போராடிய போது, விடுதலைப் போராட்டத்தை வழி நடத்திய ஹோசிமிங் போராட்டம் முடிவு பெறும் முன்பே இயற்கை மரணம் அடைந்தார். அதன் பிறகும் ஆறு வருடங் கள் வியட்நாம் மக்கள் போராடி அமெரிக்கப் படையினரை விரட்டி அடித்தார்கள்.

இந்த வல்லரசு நாடுகள் தங்களுடைய சொந்த அனுபவங்களை ஒரு முறை மீட்டிப் பார்த்தாலே சில விடயங்களை புரிந்து கொள்ள முடியும்.

வரலாறுகள் சொல்கின்ற செய்திகளை கவனத் தில் எடுக்காது தேசியத் தலைவரை குறி வைப் பதற்கு பல ஆயிரம் கோடிகளை சிறிலங்கா அரசு விரயம் செய்து வருகின்றது.

தன்னுடைய அறிக்கைகளின் மூலம் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை கலவரப்படுத்தி சோர்வடையச் செய்யும் விடயத்தில் சிறிலங்கா அரசு குறிப்பிடத்தக்க வெற்றியை பெற்றுள்ளது

'நான் பிரபாகரனின் தலையைக் கோரியிருக் கிறேன்', 'பிரபாகரனின் தலை என்னுடைய காலில் வீழ்ந்த பின்புதான் போர் நிற்கும்' என்று சொன்ன வர்களும் இந்த நேரத்தில் தவிர்க்க முடியாதபடி நினைவில் வருகின்றார்கள். இப்படிச் சொன்ன வர்களின் கதையை வரலாறு பின்பு எப்படி எழுதியது என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

இங்கே சுட்டிக்காட்டப்படக் கூடிய விடயம் இன்னும் ஒன்று இருக்கிறது. 'வன்னியில் இருந்து எமக்கு உறுதியான தகவல்கள் கிடைக்கின்றன, எம்மால் தேசியத் தலைவரை இலக்கு வைக்க முடியும்' என்று அறிக்கை விடுகின்ற சிங்களத் தளபதிகளையும், பசில் ராஜபக்சவையும் ஏற்றிக் கொண்டு சென்ற உலங்குவானூர்தியை இலக்கு வைத்து விடுதலைப் புலிகள் கடும் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

உலங்கு வானூர்தி ஐந்து நிமிடங்கள் தாமத மானதாலேயே சிறிலங்கா அரச, இராணுவ உயர் மட்டக் குழுவினர் தப்பிப் பிழைத்தனர். இந்தத் தாக்குதல் யாரைப் பற்றி யாருக்கு உறுதியானதும் சரியானதுமான தகவல்கள் கிடைக்கின்றன என்ற செய்தியை சொல்கிறது.

அதே வேளை தேசியத் தலைவரை இலக்கு வைத்துள்ளதாக சிறிலங்கா அரச தரப்பு வெளியிடும் அறிக்கைகள் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் மத்தியில் ஒருவித கலவரத்தை ஏற்படுத்தி உள்ளதை இங்கே மறுக்க முடியாது. இதற்கு முக்கிய காரணம் எம்முடைய பரப்புரையின் பலவீனம்தான். தன்னுடைய அறிக்கைகளின் மூலம் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை கலவரப்படுத்தி சோர்வடையச் செய்யும் விடயத்தில் சிறிலங்கா அரசு குறிப்பிடத்தக்க வெற்றியை பெற்றுள்ளது என்பதை ஒத்துக் கொண்டுதான் ஆகவேண்டும்.

சிறிலங்கா அரசின் இந்தப் பரப்புரையை எதிர் கொள்வதற்கு இன்னமும் சரியான சொற்களை தேட வேண்டிய நிலையில்தான் நாம் நிற்கின் றோம். பரப்புரையின் வடிவத்தை நாம் முற்று முழுதாகவே மாற்ற வேண்டுமோ என்ற கேள்வியை இன்றைய நிலை எழுப்புகிறது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் ஒன்றை சிந்திக்க வேண்டும். தேசியத் தலைவரை தாம் இலக்கு வைத்துள்ளதாக சிறிலங்கா அரசு வெளியிடும் அறிக்கைகள் புலம்பெயர்ந்து தமிழ் மக்களை கலவரப்படுத்துவதை புரிந்து கொள்ள முடிகிறது. தேசியத் தலைவர் மீது பற்றும் தேசியத் தலைவரின் காலத்தில் தமிழீழம் பெற வேண்டும் என்ற உறுதியும் நியாயமானவை. ஆனால் அதற்காக போதுமானவைகளை நாம் இதுவரை செய்தோமா என்ற கேள்வியை எமக்குள்ளும் ஒரு முறை எழுப்புவோம்.

தோளுக்கு வீரம் உண்டு
தோற்காத மனமும் உண்டு

ஒரு பேப்பர் ORU PAPER

கடலுக்குள் கண்ணிவெடி

ரவிக்குமார் எம்.எல்.ஏ
(யூனியர் விகடனில்)

'வெள்ளி நிலாவே விளக்காய் எரியும் கடல்தான் எங்கள் வீடு' என்று வாழும் மீனவ மக்களின் பிழைப்பில் இப்போது நெருப்பை அள்ளிப்போட்டிருக்கிறது இலங்கை அரசு.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் பகுதியில் கச்சத் தீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையே கடலில் கண்ணிவெடிகளை இலங்கைக் கடற்படை இப்போது மிதக்க விட்டிருக்கிறது.

பாதுகாப்பு நோக்கத்தில் செய்யப்பட்டதாக அதை இலங்கை அரசு வர்ணித்தாலும், உண்மையில் தமிழக மீனவர்களைப் படுகொலை செய்யவும் பயமுறுத்தவும்தான் இந்தக் காரியத்தை இலங்கைக் கடற்படை மேற்கொண்டிருக்கிறது என மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சில நாட்களுக்கு முன்புதான் இலங்கை அரசு தமிழர் பிரச்னைக்கு சமாதானத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருப்பதாக அறிவித்தது. அனைத்துக் கட்சிப் பிரதிதிகள் குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை ராஜபக்ஷே அரசு ஏற்றுக்கொண்டுவிட்டதாகவும் செய்திகள் வந்தன.

கடந்த பதினெட்டு மாதங்களாக அறுபத்து மூன்று முறை கூடிப்பேசி, வெறும் மூன்று பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை அந்த அனைத்துக் கட்சிக்குழு சமர்ப்பித்து இருந்தது.

அதிலும்கூடப் புதிதாக எதுவும் இல்லை. 1987–ம் ஆண்டு போடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் வழிகாட்டு தலின்படி இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட பதின்மூன்றாவது சட்டத்திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் அனைத்துக் கட்சிக் குழுவின் 'அரிய' ஆலோசனையாகும்.

மாகாணக் கவுன்சில்களை அமைக்கவும் அவற்றுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற பேச்சுக்கள் பலமாக அடிபட்டன.

இந்தப் பிரதிநிதிகள் குழுவில் இலங்கையின் முக்கிய எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும் (யு.என்.பி.), ஜனதா விமுக்தி பெரமுனாவும் (ஜே.வி.பி.) கலந்து கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டணிக் கட்சியினரும் அதில் பங்கேற்கவில்லை.

பாதுகாப்பு நோக்கத்திற்காக கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டதாக இலங்கை அரசுவர்ணித்தாலும், உண்மையில் தமிழக மீனவர்களைப் படுகொலை செய்யவும் பயமுறுத்தவும் தான் இந்தக் காரியம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

இப்படி பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகளால் புறக்கணிக்கப்பட்ட அந்தக் குழுவின் பரிந்துரைகளை இலங்கையில் எவரும் மதிக்கவில்லையென்பதே உண்மை.

போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தன்னிச்சையாக முறித்துக் கொண்ட ராஜபக்சவின் கொடுநெறிப் போக்கை உலக நாடுகள் கண்டித்து வந்த வேளையில், அதிலிருந்து தப்பிப்பதற்காக ராஜபக்ச ஆடும் நாடகம் தான் இது என்று எல்லோருக்குமே தெரிந்துவிட்டது.

அதனால்தான், சிங்கள அரசின் சமாதானத் திட்டத்தை எவரும் 'சீரியஸாக' எடுத்துக் கொள்ளவில்லை. இந்தச் சூழ்நிலையில்தான் இந்தக் கண்ணிவெடி சமாசாரம் இப்போது வெளியே தெரிய வந்திருக்கிறது.

1974–ம் ஆண்டு யூன் மாதம் 28-ம் தேதி அன்று இந்திய பிரதமராக இருந்த இந்திரா காந்தியும் இலங்கை பிரதமராக இருந்த சிறீமாவோ பண்டாரநாயகாவும் செய்து கொண்ட ஒப்பந்தம்தான் முதன்முதலாக வங்கக்கடலில் இந்திய-இலங்கைக் கடல் எல்லையை வரையறுத்த நடவடிக்கையாகும்.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவும் இலங்கையும் தமது எல்லைக்கு உட்பட்ட பகுதிகளின் மீது முழுமையான உரிமையைப் பெற்றன. அந்த நாடுகளின் கப்பல்கள் ஒன்று மற்றொன்றின் எல்லைக்குள் சென்று வரும் உரிமை தொடர்ந்து காக்கப்படும் எனக் கூறிய அந்த ஒப்பந்தத்தின் பிரிவு ஐந்தில், 'இந்திய மீனவர்களும், யாத்ரீகர்களும் கச்சத்தீவுக்கு வழக்கம்போல சென்று வரலாம். அதற்கு இலங்கையிடம் அனுமதி பெறத்தேவையில்லை' எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

1974-க்குப் பிறகு 1976-ம் ஆண்டு மார்ச் மாதம் இருபத்து மூன்றாம் நாள் இலங்கையும் இந்தியாவும் அடுத்து ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. மன்னார் வளைகுடாப் பகுதியில் கடல் எல்லையை வரையறுக்கும் ஒப்பந்தம்தான் அது. இந்தியா சார்பில் கேவல்சிங்கும், இலங்கைக்காக டபிள்யூ..டி. ஜெயசிங்கேவும் அந்த ஒப்பத்தத்தில் கையெழுத்திட்டிருந்தனர்.

இந்த இரண்டு ஒப்பந்தங்களிலோ, இவற்றுக்குப் பிறகு அதே ஆண்டு நவம்பர் 22-ம் தேதி கையெழுத்தான இலங்கை, இந்தியா, மாலத்தீவு ஆகியவற்றுக்கிடையேயான முச்சந்தியை வரையறுக்கும் ஒப்பத்தத்திலோ கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கக் கூடாது என்று சொல்லப் படவில்லை. இந்த ஒப்பந்தங்களுக்குப் பிறகு பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதங்களில் தான் கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துத் தந்தார்கள் என்று கூறப்படுகிறது.

ஆனால், தமிழக மீனவர்கள் கச்சத்தீவுக்குச் சென்று ஓய்வெடுக்கவும், அங்கே தமது வலைகளை உலர்த்தவும், அங்கே இருக்கும் புனித அந்தோனியார் கோயில் திருவிழாவுக்குச் செல்லவும் தொடர்ந்து உரிமை பெற்றிருந்தார்கள்.

தமிழக மீனவர்கள் சிறைப் பிடிக்கப் படுவதும், அவர்களது மீன்களும், வலைகளும், படகுகளும் இலங்கைக் கடற்படையால் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்கதையாகவே உள்ளன.

1983-ம் ஆண்டுவரை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அவர்கள் மீன்பிடித் தொழிலைச் செய்து வந்தனர். 83-ல் ஏற்பட்ட இனக் கலவரத்தைத் தொடர்ந்து கச்சத்தீவு பகுதியில் மீன்பிடிப்பதற்கு இலங்கை அரசு தடை விதித்தது. அந்தத் தடை 2003 வரை தொடர்ந்தது.

தமிழக மீனவர்கள் சிறைப் பிடிக்கப் படுவதும், அவர்களது மீன்களும், வலைகளும், படகுகளும் இலங்கைக் கடற்படையால் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்கதையாயின. நூற்றுக்கணக்கான தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அப்படித் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படும்போதெல்லாம் இந்திய அரசு இலங்கையைக் கண்டிக்கக்கூட முன்வருவதில்லை என்பது வேதனைக்குரிய செய்தியாகும்.

(தொடர்ச்சி 10ம் பக்கத்தில்)

வீட்டு விலை வீழ்கிறது. விபரமறிய...

அமெரிக்காவின் சரிந்தால் அகிலம் சாயுமா?



தே. ரவிசங்கர்
(ஒரு பேப்பருக்காக)

கடந்த திங்களன்று (ஜனவரி 21) அமெரிக்க பங்குச்சந்தையில் ஏற்பட்ட வீழ்ச்சி, அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய. மற்றும் ஆசிய பங்குச்சந்தைகளில் ஏற்பட்ட விலைச் சரிவு போன்ற செய்திகள் ஊடகங்களை ஆக்கிரமித்திருந்தன. பங்கு பரிமாற்ற மையங்களின் (stock exchange) அகன்ற திரைகளை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த தரகர்களை எங்கள் வீட்டு தொலைக்காட்சி திரைகளிலும் பார்க்கக் கூடியதாக இருந்தது.

இது பங்குச்சந்தை விவகாரம், கொஞ்சம் பெரிய இடத்துச் சங்கதி, இதையிட்டு அன்றாடம் காய்ச்சிகளாய் இருக்கும் நாம் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும் என்று சிலர் அங்கலாய்க்கலாம். எல்லோரையும் பாதிக்கக் கூடியதான பல விடயங்கள் இதனுடன் சேர்ந்தே யிருப்பதால் அவற்றை விளக்குவதற்காக எழுந்ததுதான் இந்தக் கட்டுரை.

தேக்க நிலையில் உள்ள அமெரிக்கா பொருளாதாரத்தையிட்டான கவலைதான் பங்குச் சந்தையின் சரிவுக்கு முக்கிய காரணியாய் அமைந்திருக்கிறது என அவதானிகளால் உறுதியாக நம்பப்படுகிறது.

பொருளாதார வளர்ச்சியில் தாழ்வு ஏற்பட்டு பெரும் வர்த்தக நிறுவனங்கள் அவதிப்பட்டால், அவற்றின் பங்குகளை வாங்குவதில் ஆர்வம் குறைந்து காணப்படுவது இயல்பானதுதான். இந்நிலையில் அமெரிக்காவின் பொருளாதார நிலையை சிறிதளவாவது நிமிர்த்துவதற்கான தேவை உணரப்பட்டு, அமெரிக்க மத்திய நிதியமான (Federal Reserve) வட்டி விகிதத்தை உடனடியாகவே முக்கால் விழுக்காட்டால் குறைத்து 3.5 சதவீதமாக ஆக்கியது.

இது ஓரளவுக்கு பங்குகளின் விலையை பழைய நிலைக்கு உயர்த்த உதவியது எனினும் அமெரிக்காவின் பொருளாதார சரிவை நிரந்தரமாக நிமித்த இந்த ஏற்பாடு போதுமானதாகவில்லை.

சரிந்து செல்லும் அமெரிக்க பொருளாதார நிலை பற்றி இப்பொழுது வெளிப்படையாக தெரிய வந்துள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தனது வருடாந்த உரையில் இது பற்றி குறிப்பிட்டிருக்கிறார். இது குறுகியகாலத்திற்கு நீடிக்கப்போகிறது என்பதனையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. வரிக்குறைப்பு உட்பட சில நிவாரணங்களையும் அவர் அறிவித்திருக்கிறார். அதனைத் தொடர்ந்து நேற்று (ஜனவரி 31) அமெரிக்க மத்திய நிதியம் வட்டித்தொகையை மேலும் அரை விழுக்காடு குறைத்து 3 சதவீதத்துக்கு கொண்டு வந்துள்ளது. 10 நாட்களில் 1.25 வட்டி வீதம் குறைக்கப்பட்டது அமெரிக்கா எதிர் நோக்கும் பொருளாதார நெருக்கடியை வெளிப்படுத்துகிறது.

பணச்சந்தை தொடர்பான சரியான மதிப்பீட்டுடன் வர்த்தக நிறுவனங்கள் குறிப்பாக வங்கிகள், நிதி நிறுவனங்கள் செயற்படவில்லை என்பதே இந்நிலைமைக்கான முதன்மைக் காரணியாக பொருளாதார வல்லுனர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

குறிப்பாக Sub Prime mortgage எனப்படும் வீடு வாங்குவதற்கு கொடுக்கப்படும் ஈட்டுக் கடன் விடயத்தில், அளவுக்கதிகமான தளர்ச்சி காண்பிக்கப்பட்டுள்ளது. இது வருமானத்தை சரியாக உறுதிப்படுத்த முடியாதவர்கள், போதிய வருமானம் இல்லாதவர்கள், முன்னர் கடன் பெற்று உரியகாலத்தில் செலுத்தா மையால்முறையாக கடன்பெறமுடியாதவர்கள் போன்றவர்களுக்கு அதிக வட்டியுடன் வழங்கப்படும் ஈட்டுக் கடன். கடன்பெறுவோர் வட்டியை செலுத்த தவறும் அபாயம் அதிகமாக இருப்பினும் நிதி நிறுவனங்கள் அதையிட்டு சட்டை செய்யாது இவ்விதம் கடன் வழங்கப்படுகிறது.

'போதிய வருமானமில்லையா, கடன் அறிக்கை (Credit score) சரியில்லையா, கவலை வேண்டாம் 100 சத வீதம் மோற்கேஜ் பெற்றுத் தருகிறோம்' என வீட்டு முகவர்கள் விளம்பரப்படுத்துவதை பார்த்திருப்பீர்கள். வழமையாக இவ்விதம் கடன் பெற முடியாதவர்களுக்கு எப்படி இந்த முகவர்கள் கடன் பெற்று கொடுக்கிறார்கள் என நீங்கள் ஆச்சரியப் பட்டிருக்கக்கூடும். இனி இவ்விதம் கடன் பெறுவது இயலாத காரியமாகி விடக் கூடும்.

அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி தேக்கமடைந்த போது, வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துச் செல்ல, இவ்விதம் கடன் பெற்றவர்கள் பெற்ற கடனுக்கு வட்டி செலுத்த முடியாமல் போய்விட்டது. இதனால் கடன் வழங்கிய வங்கிகளின் நிலைமை பிரச்சினைக்கு உள்ளானது. பல வங்கிகளும் இவ்விதம் கடன் வழங்கியிருந்தமையால் பணச்சந்தையில் கடன் பெற்றுக் கொள்வதில் நெருக்கடி நிலை ஏற்பட்டது.

சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வங்கிகளுக்கிடையிலான இந்த நிதி நெருக்கடியில் பிரித்தானியாவில் வீட்டுக்கடன்களை வழங்கி வந்த வங்கிகளில் ஒன்றான Northern Rock ன் பங்குகள் சரிந்து போனதும் அந்த வங்கியில் பணத்தை வைப்பிலிட்டவர்கள் தமது பணத்தை மீளப் பெற முண்டியடித்துக் கொண்டு நின்ற தையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். பிரித்தானிய அரசு தலையிட்டு நிலைமையை சீர் செய்தாலும் அந்த வங்கியின் எதிர்காலம் இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளது..

அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடி என்பது அந்நாட்டின் உள்நாட்டு விவகாரம் என்பதனால் அதையிட்டு மற்ற நாடுகள் ஏன் சிரத்தை கொள்ள வேண்டும் என்ற கேள்வி எழலாம்.

இங்கேதான் சிக்கலே உள்ளது அமெரிக்காவின் பொருளாதார பலத்தில் மற்றய நாடுகளும் தங்கியிருப்பதால். அமெரிக்க பொருளாதார வளர்ச்சியில் ஏற்படும் வீழ்ச்சி மற்றைய நாடுகளையும் வெகுவாகப் பாதிக்கும் என பொருளாதார நிபுணர்களால் எதிர்வு கூறப்படுகிறது. அதற்கான விளக்கங்களும் அவர்களால் வழங்கப்பட்டுள்ளன.

ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரத்தில் தேய்மானம் ஏற்படும்போது உற்பத்தி வீழ்ச்சி, அதனால் தொழில் இழப்பு என அங்குள்ள மக்கள் பாதிப்புக்கு உள்ளாவார்கள். இது அவர்களது நுகர்ச்சி முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.



இதன் விளைவாக அமெரிக்காவிற்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளும், வர்த்தக சேவையினை வழங்கி வரும் நாடுகளும் வெகுவாகப் பாதிப்படையும்.

உதாரணமாக சிறிலங்காவின் ஏற்றுமதியில் 30 விழுக்காடு வட அமெரிக்காவை சென்றடைகிறது. இதில் ஏற்படும் வீழ்ச்சி சிறிலங்காவின் வருமானத்திலும் சரிவை ஏற்படுத்தும்.

ஐரோப்பா – பிரித்தானியா

அமெரிக்க பொருளாதாரத்தின் பாதிப்பு அதனுடன் வர்த்தக உறவுகளைப்பேணும் பிரித்தானியா உட்பட்ட ஐரோப்பிய நாடுகளிலும் உணரக் கூடியதாகவிருக்கும். ஏற்கனவே பிரித்தானியாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் 15 வருடத்திற்கு முன்பிருந்த அளவுக்கு குறைந்து காணப்படுவதனால் பொருளாதார தேக்க நிலை அடுத்த இரண்டுவருடங்களுக்கு தொடர வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் படுகிறது.

பிரித்தானியாவில் கடந்தபத்து வருடங்களாக ஏறிக் கொண்டிருந்த வீட்டு விலை இவ்வருடம் 5 விழுக்காடு குறையும் எனவும் அடுத்த வருடம் மேலும் 9 விழுக்காடு குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் வட்டி வீதத்தினை மேலும் தளர்த்தும்படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சிலவாரங்களுக்கு முன்னர்தான் இங்கிலாந்து மத்திய வங்கி வட்டி வீதத்தை கால் விழுக்காடு குறைத்திருந்தது. ஈட்டு கடன் வழங்குவதில் வங்கிகள் மிகுந்த அவதானத்துடன் செயற்படும் என்பதால் புதிதாக வீடு வாங்குவதற்கு கடன் பெறுவதிலும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும்.

அடுத்த வருடத்தில் தொழில் இழப்புக்கள் ஏற்படக்கூடும் என அச்சம் தெரிவிக்கும் பொருளாதார நிபுணர்கள் லண்டனில் நிதித்துறை சார்ந்த தொழில்களிலிருப் பவர்களில் 10,000 - 20,000 வேலை இழப்பர் என்றும் கணிப்பிடுகிறார்கள். இதுபோன்று மற்றைய தொழில்துறைகளிலும் வேலை இழப்புக்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதாரத்தில் பெருவளர்ச்சி கண்டுவரும் சீனா, இந்தியா போன்றநாடுகளின் வர்த்தக தலைவர்கள் உலகளாவிய ரீதியில் ஏற்படப்போகும் பொருளாதாரச் சரிவால் தாங்கள் பாதிப்படையப் போவதில்லை எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சுவிற்சலாந்து டவோஸ் நகரில் நடைபெறும் உலக வர்த்தக மாநாட்டிலும் நாடுகளின் பொருளாதாரம் பற்றிய அச்சம் எதிரொலித்திருக்கிறது.

பொருளாதார வீழ்ச்சி பற்றி வடஅமெரிக்க, மேற்கு ஐரோப்பிய வர்த்தக பிரமுகர்கள் அவநம்பிக்கை தெரிவித்திருக்க ரஷ்சியா, சீனா, இந்தியா போன்ற நாடுகளின் வர்த்தக பிரமுகர்கள் தங்கள் வர்த்தக நிறுவனங்கள் இவ்வாண்டும் வளர்ச்சியை கொண்டிருக்கும் என உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்நிலையானது மேற்குலகிடமிருக்கும் பொருளாதார ஆதிக்கமானது இந்நாடுகளை நோக்கி நகர்த்தப்படுவதற்கான அறிகுறி என அமெரிக்காவைச் சேர்ந்த கோடிஸ்வர முதலீட்டாளரான ஜோர்ஜ் சோரஸ் தெரிவித்துள்ளார்.



INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய **LIFE IN THE UK** பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **07908 866 300**

கடலுக்குள் ...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை தமிழக மீனவர்களை துப்பாக்கியால் சுட்டவர்கள் இப்போதோ கண்ணிவெடிகளை மிதக்க விட்டு விட்டார்கள்.

கடல் கண்ணிவெடி என்பது நிலத்தில் பயன் படுத்துவதை விடவும் சக்தி வாய்ந்ததாகும். 'டார்பிடோக்கள்'என அழைக்கப்பட்ட பழைய காலத்து கடல் கண்ணிவெடிகள் பதினாறாம் நூற்றாண்டிலேயே புழக்கத்துக்கு வந்து விட்டன.

கடல் கண்ணி வெடிகள் நீண்ட காலத்துக்கு நீடித்திருக்கக் கூடியவை என்கிறார்கள். முதலாம் உலகப் போரின் போது பாரசீக வளைகுடாவில் ஈரானால் மிதக்க விடப்பட்ட கடல் கண்ணிவெடி, 1988-ம் ஆண்டில் அமெரிக்கக் கப்பல் ஒன்றைத் தாக்கி பலத்த சேதத்தை ஏற்படுத்தியதே 'நீண்ட ஆயுளுக்கான' உதாரணம் ஆகும்.

கடல் கண்ணிவெடிகளில் இப்போது பலரகங்கள் வந்து விட்டன. இலக்கைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும்படி அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. கடலில் வெவ்வேறு ஆழங்களில் அவற்றை மிதக்கவிட முடியும். கடல் கண்ணிவெடி போடப்பட்டிருப்பதை எளிதாகக் கண்டறிய முடியாது. எனவே, அப்பாவி மீனவர்கள் அதில் சிக்கிக் கொள்ள வாய்ப்பு அதிகம். அதனால்தான் இலங்கைக் கடற்படை கண்ணிவெடி போட்ட செய்தி தெரிந்ததற்குப் பிறகு தமிழக மீனவர்கள் தொழிலுக்கே போகவில்லை.

யுத்தகாலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து சர்வதேச அளவில் பல்வேறு ஒப்பந்தங்கள் இருக்கின்றன. ஆனால், கடல் கண்ணிவெடிகளை எப்படிக் கையாள வேண்டும் என்பதை 1907-ம் ஆண்டு இயற்றப்பட்ட 'ஹாக் கன்வென்ஷன்' மட்டும்தான் வரையறுத்துள்ளது. அது இப்போது அவ்வளவாகப் பயன்படுவதில்லை. எனவே, 1994-ம் ஆண்டு 'சான் ரெமோ கையேடு' என ஒன்றை நிபுணர்கள் தயாரித்தார்கள். அதில் கடல் கண்ணிவெடிகளைக் கையாளுவது பற்றிய வழிகாட்டுதல்கள் தரப்பட்டுள்ளன.

'பொதுவான கடல் பகுதிகளில் கண்ணி வெடிகளை போடக் கூடாது. சர்வதேச கடல் பகுதியிலோ, பொதுவான கடல் பகுதியிலோ கப்பல்கள் செல்வதை தடுக்கக்கூடாது, அதோடு கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதற்கு வழி ஏற்படுத்தித் தரவேண்டும். அப்படி, வழி ஏற்படுத்தித் தராதுபோனால் கடல் கண்ணிவெடிகளை எவரும் மிதக்கவிட அனுமதி கிடையாது' என 'சான் ரெமோ கையேடு' குறிப்பிட்டுள்ளது.

இப்போது இலங்கை அரசு செய்திருக்கும் காரியம், மேலே சொல்லப்பட்ட சர்வதேச விதிகளுக்குப் புறம்பானதாகும். எனவே, இலங்கை அரசு உடனடியாகக் கடல் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடல் கண்ணி வெடிகளைக் கண்டறிவதற்கு இப்போது நவீன கருவிகள் வந்து விட்டன. ஆனால், அவை மிகவும் செலவு பிடிக்கக் கூடிய வையாகும். சோனார் (Sonar) கருவி பொருத்தப் பட்ட கப்பலை கண்ணிவெடி போடப்பட்டுள்ள இடத்தை நோக்கிச் செலுத்தி அந்த வெடிகள் எங்கு உள்ளன என்பதை ஆராயலாம்.

மற்றொரு நடைமுறை - ஹெலிகாப்டரில் அந்தக்கருவியைப்பொருத்தி, அதைக்கண்ணி வெடி போடப்பட்டிருக்கும் கடற்பரப்பில் இழுத்துச் செல்வதாகும். இப்போது ரோபோக் களை இப்படியான வேலையில் பயன்படுத்து கிறார்கள். எப்படியானாலும் அதற்கு ஆகும் செலவு மிகமிக அதிகம்.

கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளைத் தீர்ப்ப தற்காக இந்திய-இலங்கை அரசுகள் சில நடவடிக்கைகளை எடுத்தன. 'கூட்டு நடவடிக் கைக் குழு' என ஒரு குழு அமைக்கப்பட்டு அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகளும் நடந்தன.

2006-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கொழும்புவில் நடந்த 'கூட்டு நடவடிக்கைக் குழு' கூட்டத்தில் சில முடிவுகளும் எடுக்கப் பட்டன.

தனது குடிமக்களின் மீது அக்கறையிருந்தால், தமது இறையாண்மையைக் காப்பாற்ற வேண்டும் என எண்ணினால் இந்தச் செயலை இந்திய அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும்.

சர்வதேச எல்லையிலிருந்து ஐந்து கடல் மைல் வரையிலான தூரத்துக்குள் சென்று மீன் பிடித்த மீனவர்களைக் கைது செய்வ தில்லை எனவும், இரு நாடுகளின் சிறை களிலும் வாடிக்கொண்டிருக்கும் மீன வர்களை விடுவிப்பது எனவும் அந்த 'கூட்டு நடவடிக்கைக் குழு' முடிவெடுத்தது.

அதற்கு மாறாக இப்போது கண்ணி வெடிகளைப் போட்டிருப்பது மேலே கண்ட கூட்டு நடவடிக்கைக் குழுவின் முடிவுகளை இலங்கை அரசு மதிக்கவில்லை என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

சேது கால்வாய் திட்டம் சுற்றுச் சூழலுக்குக் கேடுவிளைவிக்கும் என்ற அச்சம் தமக்கு ஏற்பட்டிருப்பதாக இலங்கை அரசு கூறியிருப் பதையும், இப்போது கண்ணிவெடி போடப் பட்டுள்ள நடவடிக்கையையும் இணைத்துப் பார்த்தால், சேதுக்கால்வாய் திட்டத்தை ஒரேயடியாக ஒழிப்பதற்காகத்தான் இலங்கை அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

இப்படி சர்வதேச நெறிமுறைகளுக்கும், தானே கையெழுத்திட்ட ஒப்பந்தங்களுக்கும் எதிராகச் செயல்பட்டுவரும் ராஜபக்ச அரசின் நடவடிக்கைகளை 'போர்க்காலக் குற்றச் செயல்களாகக்' (War Crimes) கருதுவதில் தவறில்லை.

இந்தக் காரணங்களின் அடிப்படையில் சர்வதேச சமூகம் இலங்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியா வலியுறுத்த வேண்டும். தனது குடிமக்களின் மீது அக்கறையிருந்தால், தமது இறை யாண்மையைக் காப்பாற்ற வேண்டும் என எண்ணினால் இதைச் செய்வதற்கு இந்தியா தயங்கக்கூடாது.

இலங்கை கடற்படை கண்ணிவெடிகளைப் போட்டுவிட்டு செய்தி அனுப்பியதும், இந்திய கடற்படை அதிகாரிகளோ நமது மீனவர்களைத் தடுத்து நிறுத்தி கைது செய்கிறார்கள்.

இலங்கைக் கடற்படை போட்டிருப்பது என்ன வகையான கண்ணிவெடி? அது நீரின் ஓட்டத்தில் இந்தியப் பகுதிக்குள் வரக்கூடிய ஆபத்து இருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மையா?

அந்தக் கண்ணிவெடிகளை மனிதநடமாட்டம் இல்லாத பகுதியில்தான் போட்டிருக்கிறோம் எனச் சொல்கிறது இலங்கைக் கடற்படை. அப்படி இருக்கும்போது ஏன் தமிழக மீன வர்களை இந்தியகடற்படையினர் கைதுசெய்ய வேண்டும்? இது போன்ற கேள்விகளுக்கு நமது அதிகாரிகள் பதிலெதையும் இதுவரையில் கூறவில்லை.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற் படை துப்பாக்கி சூடு நடத்தியபோது வெகுண்டெழுந்த முதல்வர் கலைஞர், 'மீன வர்களின் கைகள் இனி மீன்களை மட்டுமே பிடித்துக் கொண்டிருக்காது' என எச்சரித்தார்.

இலங்கை அரசு மட்டுமல்ல... இந்திய அரசும் அந்த உணர்வைப் புரிந்து கொள்ள வேண்டும்.

RISING SUN

RISING SUN

TRADITIONAL SRI LANKAN RESTAURANT & BAR

HOPPER GET-TOGETHER

Sri Lankan Menu with Hoppers, all the varieties,

"You mention, we serve".



அழகான அமைப்பு இதமான இடம்
அருமையான சூழல் அன்பான உபசரிப்பு
உறவினர் நண்பர்களை கூட்டி வாருங்கள்
உறவும் நட்பும் இன்னும் பெருகும்.

Please book early to avoid disappointment.
Take-away available.

Free car park.
Just two-minutes walk from Sudbury Hill tube-station.

Bar Open all 7 days of week, (12pm-till late)

Buffet £7.50

Fridays & Saturdays
from 5.00 pm till late,
Sundays
from 12.30 after-noon to 10.00 pm

Call 020 8422 2575 / 07784 430 704
www.risingsunhotels.com
138 Greenford Road, Sudburry Hill, Harrow. HA1 3QL

விடுதலைப் புலிகளால் யாழ்குடாவை மீட்க முடியுமா?

நிலவன்
(முரசத்தில்)

கடந்த 18.12.2007 அன்று விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து ஒரு அறிக்கை வெளியாகி இருந்து. மனித உரிமைகள் விவகாரங்களுக்கான பேச்சாளர் செல்வி அந்த அறிக்கையை தயாரித்திருந்தார். சர்வதேச சமூகத்தைக் குறி வைத்து வரையப்பட்டிருந்த அந்த அறிக்கையில், யாழ்குடாவில் தமிழ் மக்களை சிங்கள அரசாங்கம் அடைத்து கொடுமைப்படுத்தி வருவது பற்றி விரிவாக எழுதப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள 5 லட்சம் மக்களை உலகத்தின் பிற்பகுதிகளோடு இணைக்கக் கூடிய ஏ-9 பாதையை சிறிலங்கா அரசாங்கம் மூடிவைத்துள்ளதானது, அனைத்துலகச் சட்டங்களை மீறும் ஒரு செயல் என்று அந்த அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

யாழ் குடாவில் உள்ள மக்களின் மோசமான மனிதாபிமான நிலமை பற்றி விபரித்துள்ள அந்த அறிக்கையில், தற்போது யாழ். பொது மக்கள் தங்களது அவசர மருத்துவ சிகிச்சைகளுக்கென எதுவித தரைவழிப்பாதையும் கிடையாது. சிறிலங்கா கடற்படையால் இயக்கப்படும் 'பயணிகள்' கப்பல் என்பதுதான் ஒரே வழியாக உள்ளது. யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையே இந்தப்பயணிகள் கப்பல் ஒவ்வொரு முறையும் செல்லும்போது பொதுமக்களை விட சிறிலங்கா இராணுவத்தினரே பெருமளவில் அதில் பயணம் மேற்கொள்கின்றனர் என்றெல்லாம் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. சிறிலங்கா அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை எப்படி சர்வதேச சட்டங்களை மீறும்படியாக அமைந்திருக்கின்றது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது.

'ஜெனீவா 4 ஆம் மாநாட்டு சரத்துக்களை மீறி சிறிலங்கா அரசாங்கம் ஏ-9 பாதையை மூடியதன் மூலம், 5 லட்சம் பொதுமக்கள் இந்த உலகத்தின் தொடர்புகளிலிருந்து துண்டித்துள்ளனர்.'

'ஐ.நா. பாதுகாப்பு சபையின் 1612 ஆம் சரத்தின் கீழ் சிறார்களுக்கான மனிதாபிமான தேவைகள் மறுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இராணுவத்தினரின் நகர்வுக்காக பொதுமக்களை பயன்படுத்துவது என்பது ஜெனீவா நான்காம் மாநாட்டுச் சரத்தை மீறுவதாகும்' என்றும் விடுதலைப் புலிகள் வெளியிட்டிருந்த அந்த விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இரகசிய எச்சரிக்கை:

இந்த அறிக்கை விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட சில மணி நேரங்களில், சிறிலங்காவின் போரியல் வல்லுனர்கள் ஒரு இரகசிய எச்சரிக்கையை சிறிலங்கா அரசாங்கத்திற்கு விடுத்திருந்தார்கள்.

யாழ் குடா மீது விடுதலைப் புலிகள் மேற்கொள்ள இருக்கும் ஒரு விடுவிப்புத் தாக்குதலுக்கான முன்னெச்சரிக்கையாகவே புலிகளின் இந்த அறிக்கை அமைந்துள்ளதாக, போரியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருந்தார்கள். விடுதலைப் புலிகள் தாம் மேற்கொள்ள இருக்கும் தாக்குதலை நியாயப்படுத்தும் வகையில் இது போன்ற அறிக்கைகளை முன்னதாகவே விடுப்பது வழக்கம். அரசாங்கம் புலிகளின் இந்த அறிக்கையை ஒரு முன்னெச்சரிக்கையாகவே எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

யாழ்குடாவில் சிறிலங்கா படைகளின் கொடுமைகளில் இருந்து தமது உறவுகளை மீட்பதாக நியாயப்படுத்திக்கொண்டு யாழ் குடா மீது மீட்பு நடவடிக்கை ஒன்றை புலிகள் மேற் கொள்ளும் சாத்தியம் இருப்பதாகவும் படைத்துறை ஆய்வாளர்கள் சுட்டிக் காண்பித்துள்ளார்கள். சர்வதேச சட்டதிட்டங்களை சுட்டிக் காண்பித்து, புலிகள் குறிப்பிட்டது இதனால்தான். தனது மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவரும் இந்த விடயம் பற்றிப் பேசியிருந்தார். எனவே யாழ் குடா மீதான தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் வெகு சீக்கிரம் நடாத்தும் சாத்தியம் இருப்பதாக போரியல் வல்லுனர்கள் சிறிலங்கா அரசை எச்சரித்திருந்தார்கள். குறைந்த பட்சம் யாழ் குடாவில் இருந்து படையினரையும், பயணிகளையும் ஏற்றிக்கொண்டு வரும் கப்பலாவது, விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும், ஆய்வாளர்கள் எச்சரித்திருந்தார்கள்.

புலிகளால் முடியுமா?

இதனைத்தொடர்ந்து கொழும்பில் சிறிலங்கா பாதுகாப்பு உயரதிகாரிகள் மத்தியில் ஒரு அவசரக் கூட்டம் நடைபெற்றது. யாழ் குடா மீது தாக்குதல் நடாத்தி புலிகளால் வெற்றி பெற முடியுமா என்று அந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது. பல வாதிப் பிரதிவாதங்கள் அந்தக் கூட்டத்தில் இடம்பெற்றன.

ஒரு முக்கியமான விடயம் அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதாவது, தற்போதுள்ள சூழ்நிலையில், விடுதலைப் புலிகளால் யாழ் குடா மீது பாரிய படையெடுப்பை மேற்கொள்ள முடியாது என்று அந்தக் கூட்டத்தில் சிறிலங்கா படைத்துறைத் தளபதி சரத் பொன்சேகாவினால் அடித்துக் கூறப்பட்டது.

யாழ் குடா மீது தாக்குதல் நடாத்தும் அளவிற்கு புலிகளிடம் பலம் கிடையாது என்று, அவர் தனது வாதத்தை அங்கு முன் வைத்திருந்தார். யாழ் குடாவில் நிலை கொண்டுள்ள 40 ஆயிரத்திற்கும் அதிகமான சிறிலங்காப் படை வீரர்களைச் சமாளித்து யாழ் குடாவை வெற்றி கொள்ளும் அளவிற்கு புலிகளிடம் தற்பொழுது ஆட்பலமோ அல்லது ஆயுத பலமோ இல்லை என்றும் அவர் அடித்துக் கூறினார். விடுதலைப் புலிகளின் மனோ பலம் தற்பொழுது மிகவும் குறைந்தே காணப்படுகின்றது என்று சுட்டிக் காண்பித்த அவர், சிறிலங்காப் படையினர் தற்பொழுது புலிகளை ஒரு தற்காப்பு நிலைக்குள்ளேயே (Defensive Position) வைத்திருப்பதாகவும், இதனால் புலிகளால் ஒரு பாரிய முன்னேற்றத் தாக்குதலை (Offensive Attack) மேற்கொள்ள முடியாது என்றும் கூறியிருந்தார்.

இந்த விடயம் பற்றித் தான் இன்றைய இந்தப் பத்தியில் நாம் பார்க்க இருக்கின்றோம்.

யாழ் குடா மீது தாக்குதல் நடாத்தும் அளவிற்கு விடுதலைப் புலிகள் வசம் பலம் இருக்கின்றதா? யாழ் குடாவில் நிலை கொண்டுள்ள சிறிலங்காப் படையினருடன் மோதும் அளவிற்கு புலிகளிடம் ஆட்பலம் இருக்கின்றதா? ஆயுத பலம் இருக்கின்றதா? மன்னாரிலும், மணலாற்றிலும், வன்னியின் பல முனைகளிலும் புலிகள் தற்காப்புச் சமரையே நடாத்திக்கொண்டு இருக்கையில், யாழ் குடாவில் ஒரு பாரிய முன்னேற்றத் தாக்குதலை புலிகளால் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியுமா? போன்ற கேள்விகளுக்கான பதிலைத் தான் பார்க்க இருக்கின்றோம்.

யாழ் குடா மீட்புத் தாக்குதல்

மேலே எழுப்பப்பட்டுள்ள கேள்விகளுக்கான நேரடிப் பதில் கிடைப்பது கஷ்டம். விடுதலைப் புலிகளின் ஆட்பலம் பற்றிய விபரமோ அல்லது அவர்களிடம் உள்ள ஆயுதங்களின் பட்டியலோ யாருக்குமே தெரியாது. புலிகளின் யுத்த தந்திரம் பற்றியும், அவர்களது போரியல் திட்டங்கள் பற்றியும் அவர்களது முக்கிய தளபதிகளுக்குக் கூட கடைசி நேரத்தில்தான் தெரியவரும். எனவே இவை பற்றி வெளியே யாருக்கும் தெரியச் சந்தர்ப்பம் இல்லை. ஆனால், விடுதலைப் புலிகளினுடைய கடந்த காலச் செயற்பாடுகள், அவர்கள் பற்றி வெளியாகிக்கொண்டிருக்கின்ற செய்திகள் என்பனவற்றில் இருந்து, யதார்த்த நிலையை ஓரளவு ஊகித்துக்கொள்ள முடியும்.

யாழ்குடா மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தும் வல்லமையைப் பெற்றிருக்கிறார்களா என்று பார்ப்பதற்கு, சுமார் ஒரு வருட காலத்திற்கு முந்திய ஒரு சம்பவத்தைப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். கடந்த 2006ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் விடுதலைப் புலிகள் ஒரு பாரிய சமரை சிறிலங்காப் படைகள் மீது தொடுத்திருந்தார்கள். முதலில் 01.08.2007 அன்று விடுதலைப் புலிகளின் ஒரு அணி, கிழக்கின் மூதூர் பிரதேசம் மீது ஒரு தாக்குதலை மேற்கொண்டு அந்தப் பிராந்தியத்தையே தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தது. நூற்றுக்கணக்கான போராளிகள் சரை சாரையாக விரைந்து, சிறிலங்கா படையினரின் அனைத்து பாதுகாப்பு நிலைகளையும் கைப்பற்றி இருந்தார்கள். கொல்லப்பட்ட சிறிலங்காப் படையினரது 40 இற்கும் அதிகமான உடலங்களை கைப்பற்றி ஒப்படைக்கும் அளவிற்கு இந்த தாக்குதல் புலிகளுக்கு வெற்றிகரமாக அமைந்திருந்தது.

அதேவேளை, மூதூர் தாக்குதலுக்குச் சமாந்திரமாக, 11.08.2006 அன்று யாழ் குடாவிலும் புலிகள் ஒரு பாரிய தாக்குதலை மேற்கொண்டிருந்தார்கள். விடுதலைப் புலிகளின் ஒரு அணி முகமாலை முன்னரங்க நிலைகளை அழித்தொழித்துக்கொண்டு முன்னேறியது. இதற்குச் சமாந்திரமாக, விடுதலைப் புலிகளின் ஈரூடகப் படையணி (Marines) அல்லைப்பிட்டி, மற்றும்மண்டைதீவு போன்ற பிரதேசங்களில் இருந்த சிறிலங்கா படையினரின் ஆட்டிலறித் தளங்களைக் கைப்பற்றி, யாழ் குடா மீதான ஒரு முற்றுகைச் சமரை மேற்கொண்டிருந்தது.

யாழ் குடாவிற்கான சிறிலங்காப் படைகளின் கட்டளைத் தலமையகமான பலாலி தளம் மீது 11.08.2006 அன்று விடுதலைப் புலிகளின் விமானம் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டிருந்தது. அன்றிலிருந்து, விடுதலைப் புலிகள் பலாலித் தளம் மீது தொடர்சியாக ஆட்டிலறித் தாக்குதலை மேற்கொண்டிருந்தார்கள்.

இவை இடம்பெற்றுக்கொண்டிருந்த அதே நேரம், திருகோணமலையின் பிரிகேட் தலைமையகம் மீதும், திருகோணமலைத் துறைமுகம் மீதும் புலிகள் தொடர்ச்சியாக ஆட்டிலறித் தாக்குதலை மேற்கொள்ள ஆரம்பித்தார்கள். வடபகுதிக்கான கடல் பிராந்தியம் கடற்புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தது. கடற்புலிகளின் படகுகள் வட கடலை முற்றாகவே ஆக்கிரமித்திருந்தன.

உண்மையிலேயே ஒரு அருமையான முற்றுகைச் சமரை அந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் ஆரம்பித்திருந்தார்கள். யாழ்குடாவின் பிரதான வாயில் வழியாக புலிகளின் ஒரு பாரிய படையெடுப்பு நடைபெறும்போது, யாழ் குடாவின் தென்மேற்கில் உள்ள தீவுப் பகுதிகள் ஊடாக புலிகளின் மற்றொரு அணி நகர்வினை மேற்கொண்டு இருக்கையில், யாழ் குடாவின் உள்ளேயும் பல முனைகளில் புலிகளின் அணிகள் பரவலாக சிறிலங்காப் படையினர் மீது தாக்குதலைத் தொடங்கியிருந்தன.

யாழ் குடாவிற்கான வழங்கல்கள் புலிகளால் முற்றாகவே தடுக்கப்பட்டிருந்தன. பலாலி, காங்கேசன்துறை மீதான புலிகளின் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்கள், மற்றும் வட கடல் பிரந்தியம் மீதான கடல் புலிகளின் ஆதிக்கம் என்பனவற்றின் மூலம் யாழ் குடாவை புலிகள் ஒரு முழுமையான முற்றுகைக்குள் கொண்டு வந்திருந்தார்கள். யாழ் குடாவினுள் முற்றுகைக்குள்ளாகியிருந்த சிறிலங்காப் படையினருக்கு உதவிகளும் கிடைக்காதபடி, திருகோணமலைத் துறைமுகம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில், கிழக்கே மட்டக்களப்பையும் மீட்கும்படியான தயார் நிலையில் விடுதலைப் புலிகளின் அணிகள் வைக்கப்பட்டிருந்தன.

ஆனால், சர்வதேச அழுத்தம் உட்பட, பல்வேறு காரணங்களினால் விடுதலைப் புலிகள் தமது யாழ்குடா முற்றுகையைக் கைவிட்டு, தமது பழைய நிலைகளுக்குத் திரும்பியிருந்தார்கள்.

புலிகளின் அணிகள் எங்கே?

இந்த இடத்தில் சில உண்மைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

4 வருட சமாதானம் முடிந்து, யுத்தம் என்ற நிலை வந்த பொழுது, யாழ் குடாவையும், திருகோணமலையையும், மட்டக்களப்பையும் ஒரே நேரத்தில் மீட்கும் பலத்துடன் விடுதலைப் புலிகள் இருந்திருக்கின்றார்கள் என்கின்ற உண்மையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி 20ம் பக்கத்தில்)

SRI SIVASAKTHI ASTROLOGICAL CENTRE

Pandit Laxsmana Shastry
Specialist Astrologer

அகிலன் எண்டர்பிரைசஸ்
(Near Lakshmis Jewellers)
274 High Street North,
Easthamn, London E12 6SA.

Tel: **07939 095 099**
07507 089 785

உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை தீமைகள், பற்றிய விபரங்களைக் கூறுவார்.

இவரை ஒருமுறை சந்தியுங்கள். கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி, வியாபாரம், திருமணம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை காதல் கலியாணம், விசா பார்த்து சொல்லப்படும். நிலம், வீடு, யோகம் அதிஸ்ட நம்பர்கள் கோர்ட் வழக்குகள், எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய், பிசாசு கண்திருட்டி, பரிகாரம் செய்வார்.

உடன் சந்தியுங்கள்.

Opening Hours; **9.30 am-8.30pm**-7days

He speaks English, Tamil, Telegu, Malayalam, Kannada and Hindi.

அனைத்து தமிழ் உள்ளங்களுக்கும் உளம் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

Sovereignty, North-East Merger and Independence

By: P Varothayasingham

Sovereignty

1. Tamils in Eelam have always voted for Tamil political parties and elected Tamil representatives. No Singhala political party has ever had any significant support in Tamil homeland, unlike in Scotland where the Labour Party has 45% support, still there is a separate Parliament for Scots). So Tamil Eelam has never been a constituent part of Singhala Sri Lanka, and the Tamils must have their own separate Parliament..

2. Parliamentary Sovereignty is a common law tradition which only applies in UK due to UK's long period of political development. With no single document which can be called UK's constitution, Parliament is supreme and it can make or unmake any law. If UK adopts a written constitution (draft written constitution legitimised by a constitutional referendum) then Parliament will have to comply with the provisions of the constitution.

3. In all other countries it is the people who are sovereign, not Parliament which is only an elected body. So Sri Lanka's National Assembly is not a sovereign body. Delhi Parliament is also not a sovereign body. They are merely elected bodies and not supreme in their own right.

4. In 1972 the Singhalese lawfully abolished the Soulbury Constitution (under which Ceylon was granted independence in 1948). But they failed to legitimise the new draft constitutions (in 1972 and 1977) by referendums. These drafts were produced by Singhala MPs but they were not approved by Tamil MPs, so they are not even approved drafts. So the island of Ceylon has had no constitution since 1972 and the Singhalese have been working to documents which have no legal status, they are rubbish!

5. Whilst the island of Ceylon was under no constitution, the Tamils, in 1977, voted for separation and independence. The Sri Lankan National Assembly has no power to override this decision because it is not a sovereign body (see paragraph 3 above).

6. The next logical step for the Tamils should have been a referendum, restricted to the Tamils, on independence. This was not in fact necessary because of 1 above, ie Tamil Eelam was never a constituent part of Singhala Sri Lanka. Besides, in the 1977 general election ALL 18 Tamil constituencies voted for independence, which was effectively a referendum giving the consent of the Tamils authorising separation and independence.

Power and Authority

7. Authority is power exercised with general approval of the people, say, following a general election. Power is getting things done by people even if they do not wish to obey. People submit to authority because they accept its legitimacy, to power out of fear for the consequences of not so doing. A government needs both authority and power. The invading forces in Eelam have power but no authority. A government in exile may have the authority but no power. In diplomacy a legitimate government which has authority is called 'de jure' government. A government that does not have authority but is nonetheless effectively in control is called a 'de facto' government.

North-East Merger

8 In the joint Northern-Eastern provincial council election held in November 1988, in the Eastern province the Tamils won 17 seats and the Tamil Muslims won 17 seats. The Singhalese won just one seat. The provincial council election was for the merger of the Northern and Eastern provinces. The merger was to be confirmed by a referendum but it was never held as it was not considered necessary due to the overwhelming Tamil victory. The people in the Eastern province exercised their sovereign authority and voted for the merger. The Colombo government has no authority to de-merge east from the north, neither does the unelected judiciary from Singhala Sri-Lanka.

UK may recognise a new state but it does not recognise regimes. Eelam may be recognised once the Tamils agree on a democratic constitution. The government formed from the elected representatives will then be recognised. The UK Institute of Public Policy Research has produced a draft written constitution for UK. This could a starting point for drafting the constitution for Tamil Eelam.

Indian Constitution and Indian Unity

9. In Canada the state of Quebec is French speaking as opposed to the rest of the states which speak English. The major political party in Quebec wanting separation won power in state parliament and took their case to the Supreme Court of Canada (which is Canada's highest constitutional court). In1998 the 9 judges of the Canada's highest court gave a unanimous 78-page judgement on the province of Quebec's drive for separation from Canada. The Supreme Court's historic ruling stated that:

"The province of Quebec does not have the right either under the Canadian Constitution or international law, to separate unilaterally from the rest of the country. But the rest of Canada must negotiate if Quebeckers vote fair and square to leave."

The Canadian Supreme Court also held that the Quebeckers did have the right to hold a referendum and if there was 'a clear majority vote on a clear question in favour of secession' then 'the other provinces and the federal government would have no basis to deny the right of Quebeckers to pursue secession'.

We can transpose this on Tamil Nadu. If in Tamil Nadu state election a political party won more than 50% seats on a manifesto for independence or on a manifesto which had independence as the larger agenda among other goodies) then that party, having won control the state government, can call for a referendum on separation. If more than 50% voted for separation in the referendum then Tamil Nadu will be recognised as an independent country.

So the rest of India must negotiate if the people of Tamil Nadu people vote fair and square to leave India!

Indian unity cannot be guaranteed by undermining the emergence of independent Tamil Eelam. India needs to reform its own constitution to make it fully federal for long term stability. The good news is that the Indian government has appointed a commission to review its constitution.

Coexistence between the Government and the TMVP

Half Head

The government after signing a Memorandom of Understanding with the Pilleyan group plans to contest local council elections in the east jointly with the outfit under the betel leaf symbol. Yet, it's not a long time since the government has vehemently denied any dealings with these people when it was accused of turning a blind eye to atrocities committed by the outfit. On the other hand, not only Sinhala opposition parties like the UNP but also the government Tamil coalition partners like EPDP and EPRLF have come out with strong criticism against the marauding role this group plays in the east.

The most logical reason for the government to be in virulent opposition to the LTTE is the undemocratic, armed existence of the latter. But to use another armed gang to combat this evil can hardly be endorsed in a democratic system. Any government using the services of an extremist group to further its own political interests would willingly or unwillingly have to let its own principles be tarnished by the extremist needs in the end.

The government protected Karuna and lavishly enjoyed the fruits of his atrocities against the Tamils, not in the least to usher in a better environment but to wipe out the menace of the LTTE presence from the east, resulting in the end having to discard him for a worse replacement, the logical outcome being the most ferocious Pilleyan group coming to the fore.

Not only in the east but also in the south Rajapakse regime is increasingly relying on extremist forces for its day-to-day survival. As witnessed in the aftermath of the last budget vote the government had to satisfy Sinhala Buddhist demands of the extremist JVP and the JHU in abrogating the Cease Fire Agreement even at the cost of earning international condemnation.

And now, to prove that the east is in full control the government has to go for unwarranted local council elections at the behest of the Pilleyan outfit that is steadfast in its reliance in using white terror as an effective tool in a smoldering political environment as prevails in the east. What is evident here is the fact that any solution to the ethnic question would tend to be further discolored by the political wishes of the perpetrators than the ethnic needs of the victims. In the south this leads to keeping all solutions within the parameters of the 13th amendment while in the east it is the farce of local council polls.

Liberating the east could not mean anything less than having a democratic space for the minorities to live in a peaceful atmosphere. But the present government's haste in holding polls in the east does not seem to have had any regard for such requirement. Nor was it any wish on the part of the government to furnish the east with any local council administration to manage their affaires on their own. The only reason behind the decision to hold local polls seems to be the futile determination of the government to show to the outside world that everything in the east has come to a happy ending as a result of the military victory, which at the same time could serve as a precedent for the north in the future.

However, as has been proved everywhere in the world, freedom is not something that can be imposed from above at the whim of a ruling class. Freedom is perceived and celebrated by none other than the people themselves. It is not improbable for a government or an armed gang to suppress the real wishes of a people for some time by way of spurious polls, but not for long.

lankadissent.com

நேர்மை, திறமை, பொறுமை. அதுதான் பொன் சிவா!

Mortgages – Re-mortgages – Commercial Loans

Mortgages

Re-mortgages

Business Loans for Shops

Petrol Station & Hotels

Call **Pon Siva**

Tel: **020 8683 1313**
Mob: **07958 953 199**
Fax: **020 8684 0444**

Portland Estate Agents UK Ltd
9 St. James Road
Croydon, Surrey, CR0 2SB.

SPOTLIGHT

By: Charles Somasundrum

PART - II

Make History

Jonathan Steele said, in a recent column in the Guardian, that '*In eight years the Palestinians have seen the bald eagle of enlightened US power denigrate into a phoney, biased, cynical lame duck.*' He also said that Bush's recent comment about Gaza was '*one of history's most extraordinary examples of tunnel vision'*. Many will agree with this view of Mr Steele. I believe however, that Mr Steels, like many others, may have been lost in the cloud that obscures '***the clique***' who really own and run America.

Richard K. Moore has propounded a theory in 'Global Research' of 30.12.07 that is very interesting and plausible. He claims that this clique, that is said to comprise a number of shadowy figures of the standing of the Rockefellers, came into being with the passing of the Federal Reserve Act in 1913, which set up the Federal Reserve Bank in America (the equivalent of today's Central Bank in most countries). He believes that these same people, who funded Woodrow Wilson's presidential campaign, were able to sneak in the Federal Reserve Act during the Christmas of 1913.

The tentacles of this clique, according to Moore, reach into the highest echelons of the American Intelligence community and the Pentagon. The following observation from Richard K. Moore serves to demonstrate the power of the clique, through its more recent activity. '*So our clique slyly figured, why not put someone up who is obviously a fool, right through his whole little soul, so that the public will believe they are struggling against the foolishness of one man, and have no understanding of what's really going on. Bush being clueless on all matters apart from golf, looting, cocaine and womanizing, would need to be kept away from any role in running the White House. Hence the need for Cheney* (the current vice president), *the shadow real president, who leaves all the photo ops. to Bush, who stays out of the public eye himself, and who carries the Black Armageddon Box with him everywhere he goes, something only official presidents have done in the past.*'

The 'Black Box', for those who may not be aware, is an attaché case like box that is personally carried at all times by a senior American military officer who follows the president at all times. It is this box that has the wherewithal to give the signal that will unleash nuclear war on the world and blow it to smithereens. This military officer, usually a general, is even said to sit outside the president's bedroom with it. The need for the wise decision to leave the Black Box in the charge of the vice president is understood by those of us who are aware of the infamous 'Pretzel incident' involving Bush.

In the light of Mr Moore's comments, it is not difficult to identify the many instances when the public, usually the American public, have been fooled time and time again. A recent instance was when Barack Obama won Democrat, Iowa Primary against most poll predictions, with Hillary Clinton coming third! It was a stark reminder to Hillary as to who it was that pulled the strings. Of course, she was back on track at the New Hampshire Primary with a narrow over Obama in Nevada. She had however, been given a short sharp shock early in her campaign, that she will not easily forget. Obama, for all his excellent qualities is not 'acceptable' to the clique. America in general, is not ready as yet, for a 'black' president.

We can be sure that whoever wins, American policy will not change. Of course there will be cosmetic changes, like closing down Cheney's (not Bush's) Guantanamo 'torture chamber' and the ending of overt, rendition flights. In reality, the secret American prisons, already scattered around the world in tame and docile countries will continue, as will also, covert 'rendition' flights. There will always be docile rulers; Dictators or corrupt governments who are willing do the dirty work. A few million dollars that go into certain private pockets can do wonders. There are plenty of gaping pockets in the corrupt government of Sri Lanka!

Those of us, who hoped that an 'intelligent' American president would be willing to take a deep look at American world policy, will be in for a disappointment. Eelam Tamils, who had hopes that with a change in president, American foreign policy would become more liberal and history orientated, must brace themselves. There is hope however. The small clique that runs America will soon find, that their areas of control have become too extensive to control – even at home. This is the lesson that 'world conquerors' like Alexander the Great; Napoleon and Hitler learnt by bitter experience.

Tamils of Eelam will need to continue our fight for independence. History is on our side and is full of instances when suppressed nations have risen to take their rightful place in the world. The Sinhala government of Sri Lanka have yet to learn that a nation can never be suppressed. The Tamil freedom fighters have the example of the American War of Independence and the part played by George Washington in it, when he fought the British for America's freedom. It is possible, that today's Americans may have forgotten this war or perhaps are merely ignorant, as in many other matters, of how America became free of British control. They may even be unaware of the fact that America was, at one time, a British 'plantation colony'!

Bush is just a sorry figure, merely a blip on the screen. He will however, still be there for the next 361 days, according to the 'Bush countdown calendar' (as I write this), to cause more 'toe curling' embarrassment to the American public – but then, they voted him their president not once but twice, didn't they?

We have to Protect Only Two Tamils, Sangaree and Douglas, says 'Ugly Gota'



Following are excerpts of Gotabhaya Rajapakse, Sri Lankan Defence secretary and a brother of Mahinda Percy Rajapakse.

"MP Maheswaran had business engagements with LTTE and finally got killed by them. The investigations and DNA tests have definitely proved it. If the suspect was not caught, that killing could also go to the account of the Government"

"Mano Ganeshan also need no security since he has links with LTTE. Only two Tamil leaders are spared. They are Ananda Sangaree and Douglas Devananda. We have to protect them somehow," he says.

"Only a brother of a President can handle a situation like this. It should be put into the constitution that a President's brother should be appointed the Defense Secretary," says Gotabhaya Rajapakse.

He says in the interview that the decapitation of will demolish the LTTE stating that several LTTE heads like Pottu Amman, Susai should be eliminated.

In response to a question by the newspaper if the Government is highlighting the military operations to cover the people's problems, the Defense Secretary accuses the state media for incompetence.

When asked if the Media Center for National Security (MCNS) claims that scores of Tamil Tigers are killed daily, he says that information prove that there are 10 to 15 funerals in Vanni each day. "Photos of those who were killed in Muhamalai are being handed over to the families now although bodies are not given. Kilinochchi and other hospitals are filled with injured."

When Lankadeepa asks about the allegation if Defense Secretary Gotabhaya Rajapakse, another state official, wieldss more powers than the other officials, Rajapakse says, "What is wrong? I have not misused power. I have used my powers to strengthen the police and armed forces. They work like this because of the super powers I have."

"Likes of state officials nearing to retire and cannot decide to attack cannot do this job. I can talk to the President at any hour and discuss anything."

What kind of assistance he expect from the international community, asks Lankadeepa and Gotabhaya Rajapakse says that international community is trying to give the LTTE more chances and to extend the problem. "They pressure the Government and not the terrorists. The countries that banned LTTE should sustain LTTE's fundraising and arms deals as well. Instead, they work against the Government elected by people. It looks like they have some other objectives."

Gotabhaya Rajapakse says that the LTTE has to be banned and he does not know why it is not done. He says that the cabinet is responsible eventually for that.

Commenting on media; he says that today some journalists write to show off causing heavy damage. "Weapons are not the important in a war. The man behind the weapon is the important. His mentality needs to be built up rightly. Journalism should not target to break up their mentality. Newspapers that are published because they have money and to make the nephew President are not in journalism," he says.

"The opposition leader who named me 'Ugly Gota' before the diplomats later asks for security from me. What is the meaning of this? "he asks.

When asked if the media no supportive, Rajapakse says that no military information such as what kinds and numbers of weapons and what were purchased were not necessary for the public. He says that he will not allow to publish them if he has power. He says that he has proposed the President to bring a censor with stern punishments.

Rajapakse says that criminal defamation laws are needed to be re-introduced.



ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் **அர்ஜூனா ராஜூ குருஜி ஜெங்கம்மா**

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.

07951 631 883 / 020 8470 5209

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

Kerala Ayurvedic Health Clinic (Near Wembley)

1 Odean Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex UB6 0NA
5 mins walk from Sudbury Town - Piccadly Line



- ▲ Massage Therapies by experienced and highly skilled therapists
- ▲ Treatment is designed around your individual health needs
- ▲ Safe and effective Ayurveda supplements/ medicines for your needs
- ▲ Only natural medicines are used
- ▲ No side effects at all
- ▲ Wide range of therapies

- ▲ Arthritis
- ▲ Frozen Shoulder
- ▲ High Blood Pressure
- ▲ Pulled Muscles
- ▲ High Cholesterol
- ▲ Trapped Nerve
- ▲ Paralytic Conditions
- ▲ Certain Skin Conditions
- ▲ Stress and Strain
- ▲ Back Pain
- ▲ Whiplash
- ▲ Obesity
- ▲ Joint Pain
- ▲ Digestive Disorders
- ▲ Diabetes
- ▲ Sleeplessness
- ▲ Stiffness
- ▲ Migraine

www.kahc.co.uk

FREE Consultation

Authentic and Effective Kerala Ayurvedic Treatments
Qualified and Registered Ayurvedic Physicians
Affordable Prices

* Providing Free Steam Bath, Shower, Towels, Shampoo etc.,
* Male and Female therapists available
* Can speak in Hindi Tamil or English & Malayalam
* Free Parking



உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுற்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்.....

20%
Discount as Summer Special

Call 020 8902 1104 / 020 8902 1707

With Complements From

Mint Financial Services Limited

Rama & Company
Independent Financial Advisers

Rama

Rama & Company is an appointed representative of MINT FINANCIAL SERVICES LIMITED, which is authorised and regulated by the Financial Services Authority.

3 The Orchard, Wickford, Essex, SS12 0HB. England

Tel: (01268) 766624 Mobile: (07956) 369557 Fax: (01268) 561805
Email: rama@mintzone.com

மகிந்தவின் கழுத்தை இறுக்கும் போரும் தீர்வும்

இதயச்சந்திரன்
(ஒரு பேப்பருக்காக)

சர்வதேச அரங்கில், தமது ஒருதலைபட்ச போர்நிறுத்த ஒப்பந்த முறிப்பினால், இராஜ தந்திர பின்னடைவை எதிர்கொள்ளும் மகிந்த அரசு, அதை சரி செய்து நிமிர்த்த, தீர்வுத்திட்ட நாடகத்தை முன்னெடுத்துள்ளது.

23ஆம் திகதி வெளியிடப்படவிருந்த அரசியல் தீர்வு குறித்து விவாதிப்பதற்கு, 22ஆம் திகதியன்று, சம்பந்தப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களை மகிந்தர் சந்தித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைத் தவிர ஏனைய தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள், திஸ்ஸ விதாரண சமர்ப்பித்த திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

போதுமான அதிகாரங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லையென மலையகத் தமிழ்க் கட்சிகளும், மகிந்த சிந்தனையின் அடிப்படையில் அமையாமல், அதிகப்படியான அதிகாரங்களை இத்திட்டம் வழங்குகிறதென ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற பேரினவாதக் கட்சிகளும், பிளவுண்டு நின்றதால், முடிவொன்றும் எட்டப்படாமல் பின் போடப்பட்டது மகிந்தரின் தீர்வு நாடகம்.

ஏற்கனவே சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 13வது திருத்த இணைப்பினை, புதிதாக அறிமுகப்படுத்துவது போன்று முன்வைக்க வேண்டிய அவசியமில்லையென்பதே மலையகக் கட்சிகளின் வாதமாகவிருந்தது.

விதாரணயின் திட்டத்தில், காவல்துறை, காணி உரிமை, நெடுஞ்சாலைப் பராமரிப்பு பற்றிய முக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லையென்பதால் மலையக கட்சிகள் எதிர்த்தன.

இந்த அடிப்படை விடயங்கள் கூட இணைக்கப்படாமல், விதாரண முன் வைத்த திட்டமானது, மிதமிஞ்சிய அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு வழங்கப் போவதாக பேரினவாதிகள் நிராகரித்த விடயம், மாவட்ட சபையினையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்பதை உணர்த்துகிறது.

வடக்கிற்கு இடைக்கால சபையும், கிழக்கிற்கு உள்ளூராட்சி சபைகளை அமைப்பதற்கும் அரசியல் முலாமொன்று மகிந்தருக்கு தேவைப்பட்டது.

அதை நிறைவேற்றுவதற்கு 13வது இணைப்புச் சட்டமென்று தலைப்பிட்டு, மகிந்த சிந்தனையை உட்புகுத்துவதே அரசின் திட்டம்.

இதை உணராமல், வட - கிழக்கு இணைந்த தாயகக் கோட்பாட்டை, சர்வகட்சி கூட்டத்தில் கலந்து கொள்ளும் எந்தவொரு தமிழ்க் கட்சிகளும் வலியுறுத்தவில்லையென்பதே மிகவும் சோகமாகக் கருதப்படுகிறது.

ஏனெனில் அடிப்படைப் பிரச்சினை பற்றி பேசாமல், மகிந்த சிந்தனைக்கு ஒத்து ஊதும் பணியே அவர்களின் அரசியல் கடமையாகிவிட்டது.

இந்தியாவால் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்க்க முடியுமெனக் கூறி, சிறீலங்கா அரசிற்கு ஆயுதங்கள் வழங்குவதை நியாயப்படுத்தும் தமிழ்த் தலைவர்கள், மகிந்தரின் 13வது புதிய சட்டத்தை உயர்த்திப் பிடிப்பதன் தாற்பரியம் புரிகிறது.

அதிகாரப் பரவலாக்கத்தையும், நிர்வாகப் பரவலாக்கத்தையும் ஒன்றாகப் போட்டு குழப்பும் அரசியல் உத்தியினையே, நீண்டகாலமாக சிங்களம் பிரயோகிக்கின்றது.

ஆயினும் இந்த தலைவர்களுக்கு விளங்காத விடயமொன்று உண்டு.

அதாவது தமிழர் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளாமல், ஒற்றையாட்சி அரசியல் யாப்பினை மாற்றாமல், முன்வைக்கப்படும் எத்தகைய அற்புதமான தீர்வுப் பொதிகளும், நிர்வாகப் பரவலாக்கம் என்கிற வரையறைக்குள் மட்டுமே அடக்கப்படும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஊடாக வரையப்பட்ட தீர்வுகள் யாவும், மாறாநிலை கொண்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பில், பின்னிணைப்புகளாகவே சேர்ந்துள்ளன.

அவையாவும் தமிழர் தலைமையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வல்ல என்பதையும் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

ஏனெனில் அதிகாரப் பரவலாக்கத்தையும், நிர்வாகப் பரவலாக்கத்தையும் ஒன்றாகப் போட்டு குழப்பும் அரசியல் உத்தியினையே, நீண்டகாலமாக சிங்களம் பிரயோகிக்கின்றது.

அதேவேளை சர்வகட்சி (அரசசார்பு) பிரதிநிதிகளால் உருவாக்கப்படும் தீர்வுத்திட்டமென அழுத்திக் கூறியவாறு, நடைமுறையிலுள்ள அரசியல் அமைப்பு வரையறைக்குள் இருந்து, நிர்வாகப் பரவலாக்கத்தை மேற் கொள்ளும் நிகழ்ச்சி நிரலே மகிந்தரின் சூழ்ச்சித் திட்டமாகும்.

மகிந்தரின் சர்வகட்சி கூட்டுக்குள், தமிழ்க் கூட்டமைப்பு, யு.என்.பி, ஜே.வி.பி போன்ற பலம் வாய்ந்த கட்சிகள் உள்ளடக்கப்படவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

சர்வகட்சிப் பிரதிநிதிகளின் தீர்வுத் திட்டமென தொடர்ச்சியாக அழுத்திக் கூறுவதன் சூட்சுமத்தை சர்வதேச நாடுகளைத் தமது தீர்வுப் பொறிக்குள் கொண்டு வருவதற்கு, மகிந்தர் வகுக்கும் அரசியல் வலைப்பின்னலின் அடிப்படையில் புரியப்படலாம்.

ஏற்கனவே 13வது இணைப்புச் சட்ட அடிப்படையில் அரசியல் தீர்வுத் திட்டத்தை செயற்படுத்தப் போகிறேனெனக் கூறுவதனூடாக, இந்தியாவை தனது பொறிக்குள் வீழ்த்தியுள்ளது சிங்களம்.

அதேவேளை, விடுதலைப் புலிகளுடன் எதுவித பேச்சுவார்த்தையும் இனிக் கிடையாது, அவர்களை போர் மூலம் அழித்தொழிப்பதே தமது முதற் பணியெனக் கூறுவதன் மூலம், சர்வதேச நாடுகளின் பங்காற்றலை அகற்றியுள்ளார் மகிந்தர்.

புலிகளுடன் பேசுதல், ஐ.நா. மனித உரிமைக் கண்காணிப்பகத்தை அமைத்தல் போன்ற இணைத் தலைமைக் சுட்டத்தின் நெருக்கு வாரங்கள் இனிமேல் கருத்தில் கொள்ளப்பட மாட்டாதென்பதே அரசின் அவசரத் தீர்வுத் திட்ட நகர்வுகள் கூறும் செய்தி.

விடுதலைப் புலிகள் மீது, அரச உத்தியோகபூர்வத் தடை விதித்தால், இணைத் தலைமை நாடுகளின் பங்களிப்பு நிச்சயம் பாதிப்படையும்.

அதற்கான பயணத்தையே மகிந்தர் தற்போது ஆரம்பித்துள்ளார். ஒற்றையாட்சியை, ஏற்றுக் கொள்ளும் தமிழ்க் குழுக்களுக்கே இத் தீர்வுவெனவும், விடுதலைப் புலிகளுக்கல்ல இதுவெனவும், அழுத்தம் திருத்தமாகக் கூறுவதிலிருந்து இப்பயண நோக்கத்தை புரிந்து கொள்ளலாம்.

போர் மூலம், விடுதலைப் புலிகளை அழித்தலே, தமிழ் மக்களுக்கு தாம் வழங்கப் போகும் தீர்வென்று உறுதிப்படக் கூறுகிறது சிங்களம்.

'புலித்தடை'யை நிறைவேற்றினால், சர்வதேசத்தின் எதிர்வினைச் செயற்பாடுகள் எவ்வாறு வெளிப்படுமென்பது குறித்து, சிறிது குழப்பத்துள் ஆழ்ந்துள்ள அரசு.

அதாவது ஒப்பந்தக் கிழிப்போடு சீற்ற மடைந்துள்ள இணைத் தலைமை நாடுகள், புலிகளைத் தடைசெய்யும் அடுத்த கட்ட நகர்வினை தாம் மேற் கொள்ளும்போது, புலம் பெயர் நாடுகளில் அமுலில் உள்ள புலிகள் மீதான தடையை அகற்றும் சூழ்நிலை உருவாகலாமென எண்ணுகிறது.

ஆகவே சர்வதேசம் விரும்பும் 'பேச்சுவார்த்தை' என்கிற அழுத்தத்திலிருந்து தப்பிப்பதற்கு, தீர்வுத்திட்டக் காய் நகர்த்தலை இராஜதந்திர உத்தியாக பயன்படுத்த முனைகிறது சிங்களம்.

அதேவேளை விடுதலைப் புலிகள் மீது விதிக்கும் தடையானது, இணைத்தலைமை நாடுகள் பிரயோகிக்கும் அழுத்தங்களிலிருந்து புலிகள் தப்பித்து விடுவார்களென்பதால், போரையும், தீர்வையும் சமாந்தரமாகக் கையாள்வதை மகிந்தர் விரும்புகிறார்.

மகிந்தர் தடைபோடும்வரை, முன்னேறி முயலும் இராணுவத்தைப் பின்தள்ளும் சமரை மட்டுமே, விடுதலைப்புலிகள் மேற்கொள்வார்களென சர்வதேசம் எடைபோடுகிறது.

ஆனாலும் தெற்கில் விரியும் தொடர் தாக்குதல்களை எதிர்கொள்ளும் அரசு, வன்னி முற்றுகைக்கு பயன்படுத்தும் படை வளத்தை, நாடெங்கும் பரவலாக்கி, யுத்தத்தில் தோல்வியுற வாய்ப்புண்டென்றும் அவர்கள் மத்தியில் கருத்து நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

இந்தியாவால் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்க்க முடியுமெனக் கூறி, சிறீலங்கா அரசிற்கு ஆயுதங்கள் வழங்குவதை நியாயப்படுத்தும் தமிழ்த் தலைவர்கள், மகிந்தரின் 13வது புதிய சட்டத்தை உயர்த்திப் பிடிப்பதன் தாற்பரியம் புரிகிறது.

போரிற்கு ஆதரவு வழங்கும் பேரினவாதக் கட்சிகள், தீர்வுத் திட்டத்தை குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டவாறு, ஐ.நா. சபைக்கு எதிரான கடும் போக்கினை வெளிப்படுத்துவதால், இந்தியாவைத் தவிர ஏனைய பிராந்திய நலன் பேணும் வல்லரசுகள், சிறீலங்கா விவகாரத்திலிருந்து தனிமைப்படுத்தப்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.

தற்போது ஆயுதம் வழங்கும் ஒரு வழிப் பாதையை மட்டுமே, மேற்குலகிற்கு திறந்து வைத்துள்ளது சிங்களம்.

அப்பாதையூடாக, மனித உரிமைக் கண்காணிப்பகத்தையோ அல்லது ஹான்சன் பௌவரையோ உள் நுழைய விடாமல் தடுக்க, ஜே.வி.பியைப் பயன்படுத்துகிறது அரசு.

அதேவேளை, மகிந்தரின் அரைகுறைத் தீர்வுப் பாதையில் ஜே.வி.பி விதைக்கும் தடைக் கற்கள், நிலைமையை மேலும் சிக்கலாக்குகிறது.

விடுதலைப் புலிகள் மீதான தடை இறுதி யுத்தத்திற்கு இடையூறாகவுள்ள தடையரணை உடைக்குமென்பதால், அதனை நிறைவேற்றுமாறு ஜே.வி.பி. வலியுறுத்துகிறது.

ஆகவே தடைவிதிக்கு முன்பாக, சர்வதேசத்தை தம்பக்கம் அணிதிரட்ட முயல்கிறார் மகிந்தர்.

தடை விதிப்பதனூடாக சர்வதேசத்தைத் தனிமைப்படுத்த விரும்புகிறது ஜே.வி.பி.

61வது சுதந்திர தின நாள் வரை இந்த கயிறு இழுத்தல் போட்டி தீவிரமாக முன்னெடுக்கப்படும்.

ஆயினும் விடுதலைப் புலிகளின் பாதை, வேறு திசை நோக்கித் திரும்புமென கணிப்பிடலாம்.

Ohm Sri Vanadhurga Sakthi Jothidam
ஓம் ஸ்ரீ வனதுர்க்கா சக்தி ஜோதிடம்
குருஜி கிருஸ்ணா பண்டிதர் சாஸ்திரி

இந்தியாவில் ஸ்ரீகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள அதி பயங்கர வனத்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் காலகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 12 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவர்த்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்து வருகின்றார்.

உத்தியோக பிரச்சினை, குடும்ப உள் விவகாரம், நிதி நிலை விவகாரம், கோர்ட் விவகாரம், எதிரிகள் தொல்லை, விசா பிரச்சினை, வியாபார முன்னேற்றமின்னை, பில்லி சூனியம், மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலமும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்கள் குணப்படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங்களைப் போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்குச் சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சில காலமோ இங்கு வசிப்பார். அதற்குள் நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.

திருமண பொருத்தம் பார்த்துக் குறிப்பு கொடுக்கப்படும்.

Mob: 07506 126 801
07918 808 772

Opening Hours: 9-30 am to 7-30 pm
One Stop Bargain Shop
218 High Street, East Ham, E6 2JA
(Near East Ham, UG Station)

நாங்களும் துரோகிகளா?

ஊரிலை உலகத்திலை நடக்கிற விசயங்களைப் பாத்துப் பாத்து பிறசர் கூடி ஆசுபத்திரியிலை படுத்துக் கிடந்ததிலை கொஞ்ச நாளா உங்களோடை கதைக்க முடியேல்லை.

பிரித்தானிய தமிழர் பேரவையின்ரை அறிக்கை ஒண்டைப் பாத்ததும் உங்களோடை கொஞ்சம் கதைக்க வேணுமெண்ட ஆசையிலை வருத்தத்தோடையும் எழுதுவம் எண்டு வெளிக்கிட்டிருக்கிறன்.

சிங்கள தேசத்தின்ரை தமிழின அழிப்புக்குப் பக்கபலமா இருக்கிற சிங்களப் பொருளாதாரத்துக்கு முண்டு குடுக்கிற வேலையை எல்லாரும் குறிப்பாத் தமிழாக்கள் நிப்பாட்ட வேணும் எண்ட எண்ணத்திலை அதின்ரை முதல் கட்டமா சிறிலங்கா எயார்லைன்ஸைப் புறக்கணியுங்கோ எண்ட கருத்தை அவையள் முன்வைச்சிருக்கினம்.

உந்தச் சிறிலங்கா எயார்லைன்ஸைப் பற்றியும் அவையளின்ரை இனவாத வேலைகளைப் பற்றியும் நான் புதுசாச் சொல்லத் தேவையில்லை.

மூண்டு வருசத்துக்கு முந்தி சுனாமி அடிச்சதும் நாங்கள் துடிச்சுப் போய் உடுப்புகள், மருந்துகள் எண்டு சேத்து அந்தச் சனத்துக்கு அனுப்ப வெளிக்கிட்டம்.

அப்ப Srilankan Airlinesகாரங்கள் அந்தச் சாமான்களைக் கொண்டுபோக மாட்டம் எண்டு சொல்லித் தங்கடை இனவாத முகத்தை வெளிப்படையாவே காட்டினவங்கள்.

உடனை எங்களுக்கெல்லாம் ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. Srilankan Airlinesஜ தமிழர் எல்லாரும் புறக்கணிக்க வேணும் எண்டு கதைச்சனாங்கள். தமிழனுக்கு உதவி போகக்கூடாது எண்டு நினைக்கிற நாசமறுப்பாங்களின்ரை பிளேனிலை என்ரை பிணங் கூடப் போகக் கூடாது எண்டு சபதம் போட்ட ஆக்களும் இருக்கினம். கோயில்கள், தமிழ்க் கடைகள் எல்லாத்திலையும் இதைப் பற்றி நோட்டீஸ் அடிச்சு ஒட்டிக் கிடந்தது.

ஆனா கொஞ்ச நாளுக்குள்ளை எல்லாம் மறந்து போச்சுது. இண்டைக்கு எங்கடை ஆக்கள் கனபேர் அவங்களின்ரை பிளேன்களிலைதான் போய் வருகினம்.

நெஞ்சு பொறுக்குதில்லையே

கொதிப்பவர்: **வித்தகன்**

இதைப்பற்றிக் கேட்டா மற்றப் பிளேனுகளிலை ஏறினா 2 மணித்தியாலம் இடையிலை காத்து நிக்க வேணுமெண்டு மூக்காலை அழுகினம்.

ஊரிலை எங்கடை பிள்ளைகள் வருசக் கணக்கா பங்கருக்கை நிண்டு எல்லைகளைக் காத்துக் கொண்டிருக்குதுகள். உவையளுக்கு ஒரு ரெண்டு மணித்தியாலம் காத்திருக்க ஏலாமல் கிடக்குது. Air Lines காறரும் ஒண்டுக்கு ரெண்டு பிளேனை விட்டு கோடி கோடியாச் சம்பாதிக்கிறான்.

உப்பிடித்தான் எனக்குத் தெரிஞ்ச தமிழுணர்வுள்ள ஒராள் ஒரு நாளும் சிறிலங்கா எயார் லைன்சிலை ஏற மாட்டார். எப்பவும் மற்ற விமான சேவைகளிலை தான் ஏறிப் போவார்.

உதைப் பாத்திட்டு இன்னொராள் "உவர் ஒருத்தர் சிறிலங்கன் எயார் லைன்சிலை ஏறா மல் விட்டால் சிங்களப் பொருளாதாரம் பொசுக் கெண்டு விழத்தானே போகுது" எண்டு நக்கலாச் சொன்னார்.

இப்பிடி வியாக்கியானம் கதைக்கிற ஆக்களாத்தான் எங்களிலை கனபேர் இருக்கிறம்.

உப்பிடி நானொருத்தன் ஏறாட்டிப் சிங்கனவன்ரை பொருளாதாரம் விழுமோ எண்டு கேட்டுக் கேட்டு இங்கிலாந்திலை இருந்து மட்டும் கிட்டத்தட்ட 12 மில்லியன் பவுண்ஸை சிறிலங்கன் எயார்லைன்சிற்கு உழைச்சுக் குடுக்கிறம்.

பார்ட்டிகளிலை கொஞ்சம் ஏத்திப் போட்டு யப்பான் காறன் காசு குடுக்கிறான் அமரிக்காக் காறன் காசு குடுக்கிறான் இதுநியாயமோ அடுக்குமோ எண்டு பேசித் தள்ளிற ஆக்களிட்டை நான் ஒண்டு கேக்கிறன். உங்கடை வசதிக்காக கொஞ்சநேரத்தை மிச்சம் பிடிக்கிறதுக்காக சிறிலங்கன் எயார்லைன்சிலை ஏறி சிங்களவனுக்கு நீங்கள் காசு குடுக்கிறது மட்டும் நியாயமோ?

தாங்கள் வசதியாக இருக்கிறதுக்காகவும் தங்கடை சௌகரியத்துக்காகவும் சிங்களப் படைகளின்ரை எடுபிடிகளா இருக்கிறடக்கிளசு. அநியாய சங்கரி ஆக்களைத் துரோகிகள் துரோகிகள் எண்டு அடிக்கடி சொல்லுற ஆக்களைப் பாத்துக் கேக்கிறன்.

தன்ரை வசதிக்காகவும் சவுகரியத்துக் காகவும் சிங்களவனுக்கு உதவி செய்யிற அவங்கள் துரோகிகள் எண்டால் ஒரு ரெண்டு மணித்தியால சௌகரியத்துக்காக, சிங்களவன்ரை கையிலை காசை அள்ளிக் குடுக்கிற ஆக்களும் துரோகிகள் தானே?

எங்கடை சனம் சண்டைக்குள்ளை அடிப்படை வசதி கூட இல்லாமல் எப்ப கிபீர் வரும் எப்ப மிக் வரும் எண்டு பயந்து கொண்டு இருக்க இங்கை நாங்கள் எப்ப சிறிலங்கன் எயார்லைன்சின்ரை offer வரும் எண்டு பாத்துக் கொண்டிருக்கிறது அநியாயமில்லையோ?

அதே மாதிரி ரிக்கெற் விக்கிறவையளும் நாங்கள் தான் சிறிலங்கன் எயார்லைன்சின்ரை முகவர் எண்டு பெருமையாச் சொல்லிறதையும் விளம்பரம் செய்யிறதையும் விட்டுப் போட்டு நாங்கள் சிறிலங்கன் எயார்லைன்சின்ரை ரிக்கெற் விக்கிற இல்லையெண்டதைப் பெருமையாச் சொல்லுங்கோ.

சரி இண்டைக்கு சிறிலங்கன் எயார் லைன்ஸைப் பற்றி மட்டும் தான் எழுதியிருக்கிறன். ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தக்கு காசள்ளிக் குடுக்கிற கன விசயங்கள் இருக்குப் பாருங்கோ. அதுகளைப் பற்றி இன்னொருக்கா எழுதிறன். இப்ப பொயிட்டு வாறன்.

Your Gateway to British Education

Your Trusted British Education Consultants for Over 9 Years!

We welcome students from both Sri Lanka and India

Enrol **Now** for Jan/Feb/April 2008 In-take

Knowledge Management Systems (Pvt) Ltd

KMS has grown popular over the years, providing friendly and correct guidance to its clients. The key to the success is the trust and goodwill among the different societies, **KMS** serves.

Fully trained staff, provide the necessary guidance, realising your aspirations and needs. This is done in absolute privacy and care that lead to the necessary confidence.

This service is very useful.

Knowledge Management Systems has its officers in **London, Sri Lanka and India.**

Services provided include

- Choosing a Course and Institution
- Application Process
- UK Visa procedures and guidance
- Life in the UK (living, accommodation, part-time work etc)
- Pre-departure assistance
- Assistance on arrival in the UK

SRI LANKA

Knowledge Management System (P)Ltd.,
No. 32, Hampden Lane,
Colombo-06,

Tel: +94 (0)112 236 5530, +94 (0)112 553 106
Fax: +94 (0)112 365 529

Email: *colombo@britishstudylink.com*

UK

Knowledge Management System (P)Ltd,
5 Station Chambers, Station Parade,
London - E61JD

Tel: +44 (0)208 821 0107 Mob: +44 (0)790 503 8050
Fax: +44 (0)208 552 2949

Email: london@britishstudylink.com

INDIA

KMS Educational Consultants (P) Ltd.,
Siena Circle, 14, Second Floor, 29/2, Durai Samy Road,
T.Nagar, Chennai 600017,

Tel: +91 (0)44 6458 6061/62
Mob: +91 (0)99 4167 70 65

Email: chennai@britishstudylink.com

புதியன புகுதல்

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே'

பவணந்தி முனிவர் நன்னூல் இலக்கண நூலில் சொன்ன வரி இது. சொல்லியும் எண்ணூறு ஆண்டுகள் கழிந்து விட்டன. இதனுடன் இன்னொரு தகவலையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். நன்னூல் என்ற இந்த இலக்கண நூல் தோன்றிய காலத்திலேயேதான் ஆங்கில மொழி தோன்றியது. இதை இன்னும் வியாக்கியானப்படுத்திச் சொல்வதென்றால், ஆங்கில மொழி ஆரம்பிக்கிற காலத்திலேயே 'பழையன கழித்து புதியன புகும் காலத்துக்கு' தமிழ் பாய்ந்து விட்டது.

பழைய சங்கதிகள் கழிந்து புதிய புதுமைகள் புகுவது பிழையல்ல. காலத்திற்கு அதுவே ஏற்புடையது என்பதுதான் மேற்சொன்ன வரியின் பொருள். இந்த வரியை மெய்ப்பிப்பதனாலேயே தமிழ் இற்றைவரை தன் சகல சௌபாக்கியங்களுடனும் தலை நிமிர்ந்து நிற்கிறது.

பழையன என்றால் அவை கட்டாயம் கழிய வேண்டும் என்றோ புதியன என்றால் அவை நிச்சயம் புகுந்து விட வேண்டும் என்றோ எதுவும் இல்லை. நின்று பிடிக்க நிமிர்ந்து நிற்க அவை உறுதி செய்யும் என்றால் சில பழையன கழியவே கூடாது. வெறும் சக்கைதான். சாறு அல்ல. அவை புகுந்தால் இன்னும் இடர் தரும் என்னும் பட்சத்தில் புதியன என்பதால் அவற்றைப் புகவிட முடியுமா? எனவே பழையனவோ புதியனவோ அவற்றில் மெய்ப்பொருள் காண்போம். வள்ளுவரும் அதைத்தான் சொல்கிறார்.

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'

யார் 'என்ன சொல்லித் தந்தாலும் அவற்றினிடையே இருக்கக் கூடிய உண்மைப் பொருளை காண்பதுதான் அறிவு.

இவ்வாறெல்லாம் வளம் மிகுந்த மொழி நமது. உலகில் இப்போதிருக்கும் தொன்மையான ஆறு மொழிகளில் ஒன்றாக இருப்பது தமிழ். அவையெல்லாம் நமக்குப் பெருமைதான். தமிழராக பிறந்ததே மிக்க பெருமைக்குரிய விசயம். அந்தப் பெருமையை இன்னும் பேண வேண்டும். தமிழின் வளமை அழியாது வாழவைக்க வேண்டும். அதற்கு ஆவன நாம் செய்ய வேண்டும்.

மாட்டுவண்டில் ஓடும் வேகத்தில் காலம் ஓடவில்லை. இது றொக்கற்றின் வேகம். சாரத்தை உதறிச் சரி செய்து கட்டுவதற்கிடையில் என் இடுப்பில் 'ஜீன்ஸ்' வந்து தொங்கி ஒட்டிக் கொண்டு நிற்கிறது.

தமிழீழத்திலும், இலங்கையிலும், தமிழகத்திலும் இன்னும் அப்பால் சென்று சிங்கப்பூர், மலேசியாவிலும் மாத்திரம் தமிழ் நின்று விடவில்லை. அப்படி நின்றிருந்தால் நம் பிரச்சினை குறைந்து விடும்.

'நாமில்லா நாடுமில்லை
நமக்கென்றோர் நாடுமில்லை'

என்று கவிஞர் காசி.ஆனந்தன் சொன்னதுபோல நாம் எல்லா நாடுகளிலும் நீக்கமறப் பரவி நிறைந்து நிற்கி றோம். தமிழர் நாம் நின்றால் தமிழ்மொழியும் நின்றே யாக வேண்டும். போக கணனியும் யாவர் வீட்டினுள்ளும் புகுந்துள்ளது அல்லவா?

மாட்டுவண்டில் ஓடும் வேகத்தில் காலம் ஓடவில்லை. இது றொக்கற்றின் வேகம். சாரத்தை உதறிச் சரி செய்து கட்டுவதற்கிடையில் என் இடுப்பில் 'ஜீன்ஸ்' வந்து தொங்கி ஒட்டிக் கொண்டு நிற்கிறது. இல்லை என்று நான் ஜீன்ஸை கழட்டி எறிய முடியாது. அப்படி எறிந்தால் சாரமும் இல்லை, ஜீன்சும் இல்லை. அம்மணமாகத்தான் நான் நிற்க வேண்டிவரும். மாற்றத்தை நாம் மனசார ஏற்றுத்தான் ஆக வேண்டும். அல்லது என் மைந்தனுடன் ஓட வேண்டாம், நடக்கக்கூட என்னால் முடியாது போய்விடும்.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

எனவே காலத்துடன் நாம் ஓட வேண்டும். கணனியுடன் நாம் ஓட வேண்டும். தமிழை கைவிடாமல், தமிழைத் தழுவிக் கொண்டு, தமிழை மாற்றிக் கொண்டு, உலகப் பந்தயத்தில் நாமும் ஓட வேண்டும். ஓடி வெற்றி இலக்கை நாம் அடைதல் வேண்டும்.

சமீபத்தில் ஓர் தகவலை நான் வாசித்தேன். ஆங்கில மொழிக்கு அடுத்தபடியாக அதிக இணையத்தளம் கொண்ட மொழியாக தமிழ்தான் இருக்கின்றது. மற்றும்படி கணனிப் பயன்பாட்டிலும் மொழி என்ற வகையில் ஆங்கிலத்திற்கு அடுத்ததாக தமிழ்தான் அதிகம் பயன்படுகிறது. இந்தத்தகவல்கள் என்னை மேலும் உவப்பில் ஆழ்த்துகின்றன. ஆனால் அதை ஒட்டி இன்னொரு தகவலும் சேர்ந்து எனக்கு கசப்பைத் தருகின்றது.

அது என்னவெனில் தமிழ் ஒரு நாட்டை ஆளுகின்ற மொழியாக இல்லாததனால் கணனி உலகில் தமிழுக்குரிய அங்கீகாரம் அளிக்கப்படவில்லை. ஒரு நாட்டில் சுமார் ஒரு கோடிப்பேர் மாத்திரம் பேசும் மொழியாக விளங்குகின்ற சிங்களத்திற்குக் கூட அங்கீ காரம் இருக்கிறது. ஆனால் தொன்மையான மொழி, பரந்துபட்ட பல நாடுகளில் சுமார் எட்டுக் கோடிப்பேர் பேசுகின்ற மொழி பண்பாட்டு இலக்கிய, இலக்கணச் செழுமை மிக்க மொழி என்றெல்லாம் பெருமைமிக்க தமிழ் மொழிக்கு அந்த அங்கீகாரம் இல்லை என்றால் காரணம் என்ன? தமிழ் ஆளும் மொழியாக இல்லை அவ்வளவுதான்.

ஆக நம் மொழி இன்னும் வாழ வேண்டும், வளம் பெற வேண்டுமென்றால் நாம் செய்ய நிறைய இருக்கின்றது. நம் அகத்திலும் புறத்திலும் அதிக மாற்றங்கள் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். அகம் என நான் சொல்ல வருவது நம்மில் நமக்குள் மாற்றங்களை ஏற்படுத்துவது. தமிழர் ஒவ்வொருவரும் பிரக்ஞை பூர்வமாக மாற்றத்தை நோக்கிச் செல்வது. நான் தமிழன் / தமிழச்சி. தமிழ் அழியவிடாது காக்க மேலும் வளம் பெற என்ன செய்தேன் / செய்யப் போகிறேன்? இதை ஒவ்வொருவரும் கேக்க வேண்டும். தம் அயல் மீதும், உறவு மீதும், நட்பு மீதும், குடும்பம் மீதும் இதைத் திணிக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் ஒரு தமிழ்ச் செங்கல்லைக் கொண்டு வந்தாலுமே ஒரு புதிய தமிழ் வீட்டைக் கட்டி விடலாம். இதையே நம் அகத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றம் என்றேன்.

புறத்தில் எப்படி ஒரு மாற்றம் கொண்டு வரவேண்டும் என்பதை புரிந்தோமென்றால் ஒரு வாக்கியம் எனக்குப் போதும். நமக்கு ஒரு நாடு வேண்டும். அதாவது தமிழ் ஆளும் நாடாக அது இருக்க வேண்டும். அப்படி ஒரு நாடு நமக்குக் கிடைத்துவிட்டால் தமிழ் அழியாது, மாற்றம் பெறும், வாழும், வளரும். அதற்கு நாம் ஒன்று திரண்டு ஆவன செய்ய வேண்டும். ஆகும் வழி பார்க்க வேண்டும். செய்வோமா?

பழங்கள்ளு

பண்டைய இலக்கியக் காட்சி

வழுதி

(ஒரு பேப்பருக்காக)

இடாதோ நமக்கிவ்விடர்

அது நாயக்கர் காலம். அதனை கி.பி. 14ஆம் 15ஆம் நூற்றாண்டுகள் என்றும் சொல்லலாம். தமிழ் மக்களின் பொற்காலம் என்று சொல்லப்பட்ட சோழர்காலம் முடிவடைந்து வந்த காலம், நாயக்கர் காலம். தெலுங்கு மன்னர் களான விஜயநகர நாயக்கர் தமிழ் மக்களை ஆண்ட காலம் இந்தக்காலம். இவர்கள் தெலுங்கு மன்னர்களாக இருந்தபடியால் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கவில்லை. அதனால்

'மூவேந்தற்று முடி அற்று

பாவேந்தர் இலவம் பஞ்சாய்ப் பறந்த'

நாயக்கர் காலம் என்று சொல்வர். அதாவது சேர, சோழ, பண்டியர் என்ற மூவேந்தர்களும் இல்லாது போய், தமிழ் மன்னர்களின் முடியும் காணாமல்போய் அதனால் பாவேந்தர்களான புலவர்கள் பஞ்சத்தால் இலவம் பஞ்சாக பறந்த காலம் நாயக்கர் காலம்.

இந்த நாயக்கர் காலப் பாடல் ஒன்றினைத்தான் சென்ற 'பழங்கள்ளு'வில் தந்தேன். அதில் பஞ்சத்தால் பரிதவித்த காளமேகப்புலவரின் பாடல் தந்தேன். பழங்கள்ளில் இந்த முறை தருவது இரட்டையர் பாடல்.

இரட்டையர் என்பது இருவர். உடன்பிறந்த சகோதரர்கள் ஆனவர். அவர்கள் பெயர் தெரியாது. இரட்டையர் என்றே அழைப்பர். ஒருவர் குருடர் மற்றவர் முடவர். இவர்களையும் நாயக்கர் காலப் பஞ்சம் பாடாய்ப்படுத்திக் கொண்டிருந்தது. சோற்றுக்கும், உடுப்புக்கும் என்று இவர்கள் அல்லாடிக் கொண்டு திரிந்தனர். ஊர் ஊராக அலைந்து செல்வந்தர் வீடு ஏறி அவர்களைப் புகழ்ந்து பாடி, பணம் பெற்றனர். உணவை யாசித்தனர்.

இவர்களில் முடவர் நடக்க மாட்டாராகையால் அவர் குருடரின் தோளில் ஏறி இருந்து சுகமாக சவாரி செய்வார். முடவருக்கு கண் தெரியுமாகையால், அவர் தோளில் இருந்தபடி பாதையைக் காட்ட குருடர் முடவரை காவிக் கொண்டு ஊர் ஊராக நடப்பார். முடவருக்கென்ன கல்லு முள்ளுப் பாதையெல்லாம் காட்டுவார். கல்லு இடிக்க, முள்ளு குத்த மேடு பள்ளம் என்று ஏறி இறங்கி நடப்பார் குருடர்.

அப்படி நடக்கையில் குருடர் ஆற்றாமை தாங்காது பாடினார்:

'குன்றும் குழியும் குறுகி வழிநடந்து

சென்று திரிவதென்றும் தீராதோ'

அதாவது மேட்டில் ஏறியும் பள்ளத்தில் இறங்கியும் குறுக்கே சென்றும் திரிவது எப்போதுதான் தீரப்போகிறதோ? கல்லு இடிக்க நடக்கிற குருடருக்குத்தான் அந்த வேதனை புரியும். அந்த வேதனையில் அவர் அவ்வாறு பாடினார். அதனைக் கேட்ட முடவர் தோளில் இருந்தபடியே இரண்டு வரிகளைப்பாடி பாடலை முடித்தார்.

– ஒன்றும்

கொடானை கோவென்றும் காவென்றும் கூறின்

இடாதோ நமக்கிவ்விடர்'

அதாவது ஒன்றும் கொடுக்காதவனை நீதான் அரசன் நீதான் காமதேனு என்று நாங்கள் புளுகிக் கொண்டு திரிந்தால் நமக்கு இந்தத் துன்பம் வரத்தானே செய்யும். இதுவே முடவரின் வாதம். சரி, நாங்கள் முழுமையாகப் பாடலைப் பார்ப்போம்.

'குன்றும் குழியும் குறுகி வழிநடந்து

சென்று திரிவதென்றும் தீராதோ – ஒன்றும்

கொடானை கோவென்றும் காவென்றும் கூறின்

இடாதோ நமக்கிவ்விடர்'

SRI ATHIPARASAKTHI ASTROLOGY CENTRE

Specialist in all kinds of Astrology
Face Reading & Palm Reading

1ST FLOOR 49 HIGH STREET
EAST HAM, LONDON, E6 1SH
(NEAR PRIMARK STORE)
Opening Hours: 10a.m – 7 p.m 7 Days a week

Call:
S.P. SRIRAM GURJI
AADIVASI MUKKIYA
on 07918 808 855 / 01506 933 790

இந்தியாவில் இருந்து முதன் முறையாக வருகை தந்துள்ள **ஆதிவாசி எஸ்.பி. சிறீராம் குருஜி** அவர்கள் ஆதிபராசக்தி அருள் கொண்டு கைரேகை மூலமும் முகநாடி மூலமும் துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, காதல், கைரேகை, திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், விசா, லாட்டரி, தொழில், வியாபாரம், லட்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோட், வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். ஆயுர்வேத மருந்துகள் வழங்கப்படும். கல்லீரல், ஆஸ்த்மா, குடல் புண், நீரிழிவு மற்றும் அனைத்து நோய்களுக்கும் மருந்து வழங்கப்படும்.

முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்களுக்கு சோதிடம் சொன்ன போது

S.P. SRIRAM GURJI
AADIVASI MUKKIYA
Spoken languages: Tamil, Telugu, Hindi, kannada & English.

எதையடா சாதிக்கவில்லை?

பாகம் 43

காலம் உருண்டோடுகிறது. எதிரியோ சவால் விட்டுக் கொண்டிருக்கிறான், ஈழத்தமிழனின் முதுகெலும்பை மிக விரைவில் முறித்து விடுவோமென்று. கடமை எதுவென்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் நாம் சும்மா வழவழா அலட்டலில் ஈடுபட முடியாது. ஈடுபடவும் கூடாது. பத்திரிகையாளர்களா யிருந்தாலென்ன, எழுத்தாளர்களாயிருந்தாலென்ன, புத்திஜீவிகளாயிருந்தாலென்ன, கவிஞர்களாயிருந்தாலென்ன, தேசியப் பற்றுடையவர்களாயிருந்தால் எமது தேசத்தின் மீட்சிக்காகத் தம்மால் முடிந்த பங்களிப்பை ஆற்றவேண்டிய மிக முக்கிய தருணம் இது.

முகிழ்த்தெழுந்து மொட்டாகி, மலராகிப் பூவாகிப் பிஞ்சாகிக் காயாகி இனிக் கனியாகக் காத்திருக்கும் எமது தேசத்தின் விடுதலையை நாம் அறுவடைசெய்ய வேண்டாமா?

அதை இடைநடுவில் உதிர்த்திவிடக் கங்கணம் கட்டிநிற்கும் எதிரியை ஓடஓட விரட்ட வேண்டாமா. எமது முப்படைகளுக்கும் அழிவு நேர்ந்தால் நாம் செத்தோம். பிறகு ஈழத் தமிழன் இலங்கையில் தலைநிமிர்ந்து வாழவே முடியாது. இலங்கையிலென்ன உலகத்திலேயே அவனுக்கு இருப்பில்லை.

எதிரியின் ஆக்கிரமிப்புக்குள் அடங்கி ஒடுங்கி நிற்கும் எமது அன்னை பூமியை அதில் வாழும் எம் சுற்றங்களைப் பார்க்க கட்டுநாயக்கா விமான நிலையத்தினூடாக குனிந்த தலையோடு நாம் செல்லப் போகிறோமா? இல்லை! இல்லவேயில்லை! அது நடக்காது நடக்கவும் கூடாது! நடக்க விடமாட்டோம்! என்று ஒவ்வொரு தமிழனும் உத்வேகம் கொள்ள வேண்டிய நேரமிது.

சோரத்திற் கொள்ளாது, சூதிற்படைக்காது, வீரத்தினால் வெம்போர் வெற்றியினாற் படைத்த எமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை, ராணுவ ஆயுத ஆளணி பலங்களையெல்லாம் மீண்டுமொருதடவை எதிரியின் கைப்பிடிக்குள் சிக்க வைப்பதா?

அலசுவரம்

அலசுபவர்: மட்டைக்களப்பான்

இதற்காகத்தானா நாம் இத்தனை காலமும் எமதுவிடுதலைப்பயிரை வளர்த்தெடுத்தோம்.? அதற்கு நாம் வெறும் தண்ணீரையா விட்டோம்? கண்ணீரால் காத்து எம் மண்ணின் மாவீரர்களின், மைந்தர்களின் குருதியையல்லவா பாய்ச்சினோம்! அவர்களது உடல்களையல்லவா உரமாகப் போட்டோம்!

இருபத்தைந்து ஆண்டுகாலப் போராட்ட வாழ்வில் எதைச்சாதித்தீர்கள் என்று சில புல்லுருவிகள் கேட்கிறார்கள்.

அவர்கள் நமக்குள் இருந்தே நாம் வளர்த்தெடுத்த மரத்தை அரிப்பவர்கள். அவர்களுக்குத் தாங்கள் பெரிய மேதாவிகள் என்ற எண்ணம்.

நவீன விஞ்ஞான சோசலிச வித்துவான்களாகத் தம்மைக் காட்டிக்கொண்டு, தமிழன் எப்போது தடுமாறுவான் என எதிர்பார்த்து, அப்போதெல்லாம் 'நாங்கள் சொன்னோமே சொன்னோமே நமக்கு இது வேண்டாமென்று' என்று கைகொட்டிச் சிரிக்கக் காத்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் தமிழத்தேசியத்தைத் தூக்கிப் பிடித்த இவர்கள் செல்லாக் காசுகளாகிய பின்னர் ஐக்கியம் பேசிப் பிழைப்பு நடத்துகிறார்கள்.

இவர்களைப்பார்த்துஒன்றுகூறுவோம். அடே முட்டாள்களே! எதைச் சாதித்தீர்கள் என்றா கேட்கிறீர்கள். எதையடா சாதிக்கவில்லை. எதைக் குறிக்கோளாகக் கொண்டோமோ அவையெல்லாம் ஒவ்வொன்றாகச் சாதிக்கப் பட்டுத்தானடா வருகின்றன.

குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்புகளாய் நீங்கள்தானே தமிழனின் ராணுவ வலுக் கொண்ட ஏகபிரதிநிதித்துவத்தைக் காட்டிக்கொடுத்துஉங்கள் முட்டாள்தனத்தால் விளையும் பயிரை முளையிலேயே கிள்ளியெறியப் பார்க்கிறீர்கள்.

கைப்பற்றப்பட்டு ஆளப்படும் தாயகப் பிரதேசங்களோடும், தாக்குப் பிடித்து நிற்கும் ராணுவ வலிமையோடும், தன்னிறைவு பெறக்கூடிய பொருளாதார வளங்களோடும், சீராகக் கட்டமைக்கப்பட்ட சட்ட நிர்வாக அலகுகளோடும் எதிரியுடன் பேச்சு மேசையில் ஒத்த கருத்தோடு இருந்து உரிமைக்காக வாதாடக்கூடிய தமிழனின் அரசியல் ராஜதந்திர பலத்தை நீங்களும் தலைவர்களாக வேண்டுமென்னும் உங்கள் சுயநலத்தினால் வலுவற்றதாக்கி நாம் இன்று அவசியமாப் பேணவேண்டிய ஏகப்பிரதிநிதித்துவத்தைச் சீரழிக்கிறீர்களே?

இது நமது தலையில் நாமே மண்ணைத் தூவும் வேலையில்லையா?

வெளிநாடுகளிடம் நமது பலவீனத்தைக் காட்டிக்கொடுக்கும் கீழ்த்தரமான செயலில்லையா?

வெண்ணை திரண்டு வரும் போதெல்லாம் தாழியை உடைத்துக் கெடுக்கும் நயவஞ்சகத்தால் எதைச் சாதிக்கப் போகிறீர்கள். உங்களால் முடியுமா?

இன்றுள்ள நிலையில் எதிரியோடு ஐக்கியம் பேசித் தமிழனின் தேசிய உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க முடியாது. உங்களால் முடியவே முடியாது.

ஆதலால் ஈழத்தமிழர்களாகிய நாம் இந்தச் சாத்தான்களைப் புறமொதுக்கி எமது ஒட்டுமொத்த ஆதரவையும் மண்மீட்புப் போரில் இடையறாது ஈடுபடும் எமது தமிழ்ப் போராளிகளுக்கு வழங்குவோம். தேசியத் தலைமையின் கரத்தைப் பலப்படுத்துவோம்.

புலம்பெயர்ந்த மண்ணில் நாம் சொகுசாக வாழுகிறோம். அங்கே என்ன நடந்தாலென்ன? தாயகம் பறிபோனாலென்ன, அதை அன்னியன் அபகரித்தாலென்ன, குடியேறினாலென்ன, குடும்பம் நடத்தினாலென்ன, நமது மொழி, நமது இனத்தின் அடையாளம், எல்லாமே சுவடழிந்து, சுற்றம் சுயமிழந்து போனால்தான் நமக்கென்ன என்ற மனப்பான்மையை விட்டொழிப்போம்.

இந்தத் தருணத்தில் தமிழன் விழித்துக் கொள்ளாவிடில் இனி ஈழத்தமிழனுக்கு மீட்பேயில்லை. வெளி நாடுகள் உன்னிப்பாக எம்மை அவதானிக்கின்றன. எப்படித் தாக்குப் பிடிக்கப் போகிறார்கள் பார்ப்போமென்று. இந்தப் பரீட்சையில் தேறினால்தான் அங்கீகாரமென்கின்ற அடுத்த புறமோசனைப் பற்றி நாம் சிந்திக்கலாம். அவர்களும் சிந்திப்பார்கள்.

உறுதியோடு உயர்த்தப்பட்ட எமது கரமுஷ்டிகள் இனிச் சோராதிருக்கட்டும்.

இச்செகத்துளோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும் நாம் கையிலெடுத்த எமது சுதந்திரத் தாயகக் கோட்பாட்டைக் கடைசிவரை கைவிடாமல் போராடுவோம். எம் போராட்டம் தாண்டப் போகும் அடுத்த பாய்ச்சலில் வெற்றிபெற ஒத்த கருத்தோடு முன்னின்றுழைப்போம்.

நிதி மிகுந்தவர் பொற்குவைதந்தும், நிதிகுறைந்தவர் காசுகள் தந்தும், அதுவுமற்றவர் ஆதரவுமிக்க வாய்ச்சொல்லருளியும் புலம்பெயர்ந்த மண்ணிலிருந்து சகல உதவிகளும் எமது தேசத்தைச் சென்றடையட்டும்.

வெற்றி எட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே!

வீரமென்றும் வாழ்கவென்றே கொட்டு முரசே!

என்று கூறி இப்பத்தியை நிறைவு செய்கிறேன்.

தொடருவம்.

Dear Home Owners!!!

Are you having problems in selling your property ?
Are the estate agents taking ages to sell your property ?
Has the buyer pulled out from the purchase ?
Are you in arrears in your mortgage ?
Is your property going to be repossessed ?
Then the answer is here .....



FENIX PROPERTY INVESTMENT

Developments, Investments, Trading & Finance...

எங்கள் சேவை உங்கள் பிரச்சனைகளை தீர்ப்பதே!

If you need to sell your property TODAY...
call us on
0203 039 8299

No estate agents fees or charges ★ Your legal costs paid ★ Our discretion assured. Completely confidential service ★ A guaranteed quick and easy sale within your timescales ★ Repossession orders prevented or halted ★ Chain Free sale ★ Fast and efficient service ★ Decision in principle within 48 hours ★ Properties considered in all conditions ★ We operate a BUY and RENT back if required, subject to status ★ Properties considered UK/Nationwide

Fax : 0203 006 8875 / Mobile : 07931 296 748 / email : fipsales@gmail.com

26 York Street, London W1U 6PZ

Decisions are subject to status and conditions.
"The longer you wait the longer will take to sell your property and more will cost you to keep up the repayments".

வாசகர் கழிதம்

ஒன்றாய் செயல்படுவோம்

அன்புடையீர்,

சர்வதேச விடுதலை அமைப்புகளுடன் இணைந்த குரலே, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் அனைவரும் உணருவார்கள்.

பிரித்தானியாவில் வெளிவரும் தினசரி ஆங்கிலப் பத்திரிகையான 'The News Line' பல வருட காலமாக தமிழரின் விடுதலைப் போராட்டம், சிறீலங்காவின் அரச பயங்கரவாதம் சம்பந்தப்பட்ட செய்திகளை பிரசுரித்த வண்ணம் உள்ளனர். வரவேற்கத்தக்கது.

கடந்த சில நாட்காளக தொடர்ந்து முழுப்பக்க செய்திகளாக, ஜனவரி 12,16,19,23,24ம் திகதிகளில் வெளியிடப்பட்டு வருவது பாராட்டத்தக்க செயலாகும். எமதுமக்களின்பேரவலம்பிரித்தானியநாட்டுபிரபலமான பத்திரிகைகளில் வெளிவருவது மிக மிகக் குறைவு. இந்த பத்திரிகைகளில் வெளிவர பல்லாயிரக்கணக்கான பவுண்ஸ்களை செலவு செய்யும் நிலையில் உள்ளது.

சாதாரண பொது மக்களின் ஆதரவுடனேயே, பிரித்தானியாவில் மூன்று தடவைகள் சரித்திரமுக்கியத்துவம் கொண்ட பேரணி 'ஈராக் மீது யுத்தம் வேண்டாம். விடுதலை பலஸ்தீனம்' என்று இலண்டனில் அணிதிரண்டனர். அடியேனும் கலந்து கொண்டேன். வேறு தமிழர்கள் கலந்ததாக காணவில்லை.

இந்த உரிமைக்குரல் பேரணியின் முக்கியத்துவத்தினை, எமது மக்களின் நினைவஞ்சலி (2007) கூட்டத்தில் தோழர் சுபவீரபாண்டியன் அவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்களின் முன் ஓர் உணர்வை ஊட்டினார். நினைவுபடுத்தினார்.

எனவே, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம், மனித உரிமைப் போராட்டம் ஊடக உரிமை, மக்கள் சுதந்திரம், தாயகத்தில் மாணவர் உயிர் அச்சுறுத்தல், படுகொலைகள், காணாமல் போனோர், புதைகுழி படுகொலைகள், பொருளாதாரத்தடை, பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்களின் படுகொலைகளை செய்யும் சிறீலங்கா அரச பயங்கர வாதச் செயல்களை, பிரித்தானியாவில் சகல உரிமைக்குரல், சர்வதேச உரிமைக்குரல் அமைப்புகளுடன், இணைந்து, அவர்களுடன் கைகோர்த்து நின்றாலே எம் தமிழீழ தாயக தமிழரசு மலரும். பிரித்தானிய மக்கள் உணர்வார்கள்.

ஆங்கிலம் தெரியாத பல நாட்டின் பிரமுகர்கள் உணர்வாளர்கள்பிரித்தானிய தொலைக்காட்சிகளிலும், சர்வதேச தொலைக்காட்சிகளிலும் நேரடிப் பேட்டி கொடுத்து வருகின்றனர். தமிழரின் விடுதலை போராட்டத்தை நியாயப்படுத்த வேண்டிய கடமை எமது தமிழ் ஆங்கில பண்டிதர்களின் தலையாய கடமையாகும். அன்றில் இளம் சமுதாயத்தின் கடமை.

தமிழரின் கலைபண்பாட்டுக் கழகத்தின் மூலமாக ஆங்கில கவிதைகள், நாடகங்கள் பிரித்தானிய மக்கள் முன், ஏனைய புலம் பெயர் நாடுகளிலும் அரங்கேற்றப் படவேண்டும். தமிழ் நாடக விற்பன்னர்கள், புகழ்மாலை, பொன்னாடை, கௌரவம் தமிழரின் மத்தியில் பெற்றவர்கள், பிரித்தானியாவில் பல வருட காலமாக வாழ்பவர்கள் ஏதும் முயற்சி எடுத்தார்களோ என்பது தெரியாது. இனியாவது பிரித்தானிய பல்கலைக்கழக மாணவர்களின் முன் அரங்கேற்றப் படவேண்டிய தலையாகிய கடமை தமிழ் மாணவ அமைப்புகளுக்கு உண்டு.

சுனாமி பேரலை அனர்த்தம் 26.12.2004ல் எமது தமிழரின் தாயக மண்ணில் ஏற்படுத்திய பேரழிவை, மிக தத்துருவமாக, ரூட்டிங் சிவயோகம் தமிழ் மாணவர்களினால், நடன ஆசிரியர், சிறந்த குரல் வளம் கொண்ட, தமிழுணர்வாளரான தென் இந்தியக் கலைஞர் துரைசிங்கத்தின் நெறிப்படுத்தலில், ஐந்து நாட்களில் 'தமிழர் தாயக சுனாமி பேரழிவு' என்ற இசை, நாட்டிய, நாடகமாக மேடை ஏற்றப்பட்டது. அடியேன் மீனவனாக நடிக்கும் சந்தர்ப்பம், ஏற்றுக் கொண்டேன்.

ஆனால் தமிழரின் தொலைக்காட்சிகளும், வானொலி களும் பிரித்தானியாவிலிருந்து, ஒரு துளி செய்தியும் வெளிவரவில்லை. ஒரு பேப்பர் சிறு செய்தியாய் வெளியிட்டது.

சுனாமிப் பேரழிவை ஆங்கிலத்தில் ஆங்கிலேயர் முன் மேடையேற்றி இருந்தால், சகல மக்கள், தொலைக்காட்சிகளில் பிரபலமடைந்து இருக்கும் என என் அபிப்பிராயம்.

எனவே சுட்டுவிரல் மாத்திரம் செயல்படாது, தமிழரின் இசைக்கருவிகளை மீட்க பத்து விரல்களும் செயற்படுவதுபோல், நாம் சகல மக்களின் சக்திகளை, திறமைகளையும் பயன்படுத்த வேண்டிய கடமையாகும்.

- ஜ.அ. சிவானந்தம்

சீட்டு சிவலிங்கம் பற்றியது

ஒரு பேப்பர் 74ல் (டிசம்பர் 21 - ஜனவரி 4) பிரசுரிக் கப்பட்ட 'சீட்டு சிவலிங்கம் சிவப்புச் சிவலிங்கமாகிய கதை' என்ற செய்திக்கட்டுரை தொடர்பாக அக்கட்டுரையில் திருமதி. வசந்தி ஞானசம்பந்தன் என குறிப்பிடப்பட்டிருந்தவர் எமக்கு ஆங்கிலத்தில் ஒரு கடித்தத்தை அனுப்பியிருந்தார்..

மேற்படி கட்டுரையில் வசந்தி ஞானசண்முகன் என்ற தனது பெயர் வசந்தி ஞானசம்பந்தன என தவறாக குறிப்பிடப்பட்டிருப்பதாகவும், தான் ஹரோ பகுதியில் வசிப்பதாகவும் தனது முகவரியையும் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி. ஆர். சிவலிங்கம் என்பவருக்கு 7,500 பவுண்ஸ்களை கொடுத்ததாகவும் 25,000 பவுண்ஸ் பணத்தை காசோலையாக சிவலிங்கத்தின் உறவினரிடம் (பெயர் விபரம் தரப்பட்டிருந்தது) கொடுத்ததாகவும் எழுதியிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக வேறும் சிலர் எமது பணிமனையுடன் தொடர்புகொண்டு தாம் இழந்தவைகள் பற்றி எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

தற்போது இவ்விவகாரம் பிரித்தானியாவில் நீதிமன்ற விசாரணையில் உள்ளதால், மேலதிக விபரங்களை பிரசுரிப்பதனை தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம்.

- ஆசிரியர்



நன்றி : தினக்குரல்

குழந்தை பராமளிப்பாளர் தேவை

வீட்டிலிருந்து குழந்தையை பராமரிக்கவும் வீட்டு வேலைகள் செய்யவும் ஆள் தேவை. உணவு தங்குமிட வசதி தகுந்த ஊதியம் தரப்படும்.

தொடர்புகளுக்கு: **01442213479, 07958 561 796, 07960 969 684**

வீடு வாடகைக்கு

மிச்சம் ஸ்டேசனுக்கு அருகாமையில் 2 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு: **07932 671 677**

TUITION

Tuition classes for age 7 to 14, English and Science, Maths classes upto year 8, Tutitons can also be arranged in individual basis, Location: Mitcham, Tooting, Bromley and Lewisham.

For further details please contact **Jaya Siva** on **07956559837**

email: sjayab@yahoo.com

Tuition for G.C.S.E (A/L)

Mathematics, Statistics, Mechanics

Group and Individual classes by experience teacher

Contact : **07896107956**

Restaurant & Take away for sale

Indian Restaurant in Epsom, Upper High Street with 40 covers, 25 years new lease, rent 30,000 including 4 bedrooms kitchen downstairs with 2 store room. Price Negotiable.

Call **Syed Quddus 0794 394 8070** or **01372 723316**

வேலைக்கு ஆள் தேவை

ஊடக நிறுவனம் ஒன்றிற்கு நிர்வாகப் பகுதியில பணி புரிய பெண் ஒருவர் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 020 7043 4316

Web developer

We are looking for Web Developer to join a small dynamic team to spead head web developent projects. You will need demonstrable skill and experience of web development.

Essential skills:

- XHTML
- CSS
- Dreamweaver
- Flash
- Graphic design packages like Adobe photoshop

Knowledge of scripting laniguage is highly desirable.

Please forward your CV to info@orupaper.com

Web developer

We are looking for Web Developer to joiln our small dynamic team to spear head web developent projects. You will need demonstrable skill and experience of web development.

Essential skills:

- XHTML, - CSS, - Dream Weaver, - Flash, - Graphic design packages like Adobe photoshop

Knwledge of scripting language is highly desirable.

Application developer

The ideal candidate should have proven experince in application development in LAMP environment.

Essential skills:

- XHTML, Javascript and AJAX, - MySQL , Postgresql, - Apache - PHP

Knowledge of other progrmming environment is an added advantage.

Send your CV to info@orupaper.com.

It Pays to Advertise in Orupaper

விடுதலைப் புலிகளால் ....

(11ம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை மீதும், மட்டக்களப்பு மீதும் ஒரு மீட்புத் தாக்குதலை நடாத்தியபடி, யாழ் குடா மீது ஒரு பாரிய முற்றுகைத் தாக்குதலை நடாத்தும் அளவிற்கு அந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் வசம் பெரும் எண்ணிக் கையிலான போராளிகள் இருந்திருக்கின் றார்கள் என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அல்லைப்பிட்டி, மண்டை தீவு வழியாகவும், முகமாலை வழியாகவும் புலிகளின் அணிகள் நகர்ந்து பலாலிவரை செல்லும் வரைக்கும், பலாலித் தளம் மீதும், திருகோணமலைத் துறைமுகம் மீதும் தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல்களை நடாத்திக்கொண்டே இருக்கும் அளவிற்கு, விடுதலைப் புலிகள் வசம் எறிகணைகள் கையிருப்பில் இருந்திருக்கின்றன என்கின்ற உண்மையையும் நாம் ஒப்பக்கொண்டுதான் ஆகவேண்டும்.

இவை அனைத்தையும்விட, ஆயிரக் கணக்கான சிறிலங்காப் படையினர் நிலை கொண்டுள்ள பிரதேசங்களை ஆக்கிரமித்து வெற்றி கொண்டு விடலாம் என்ற தற்துணிவு விடுதலைப் புலிகளின் தலைமைக்கும், அதன் தளபதிகளுக்கும், போராளிகளுக்கும் அந்த நேரத்தில் இருந்திருக்கின்றது என்கின்ற உண்மையை நாம் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

சரி, இப்பொழுது நான் எழுப்புகின்ற கேள்விகள் இவைதான்?

சுமார் ஒரு வருட காலத்திற்கு முன்னர் விடு தலைப் புலிகளிடம் இருந்த அந்த தற்துணி விற்கான காரணம் இப்பொழுது இல்லாமல் போயிருக்கின்றதா?.

யாழ் குடா மீது போர் தொடுக்கும் அளவிற்கு அப்பொழுது விடுதலைப் புலிகள் வசம் இருந்த வளங்களில் ஏதாவது தற்பொழுது குறைவடைந்துள்ளதா?

அந்த நேரத்தில் யாழ் குடா மீது தாக்குதலை நடாத்தவதற்கு களம் இறங்கியிருந்த புலி களின் முக்கிய கட்டளைத் தளபதிகளில் யாரை யாவது விடுதலைப் புலிகள் அமைப்பு இழந் திருக்கின்றதா? பாலாலி மீது எறிகணைகள் வீசக்கூடிய தூரத்தில் இருந்து புலிகள் பின்வாங்கி இருக்கின்றார்களா?

அந்த நேரத்தில் வட கடலை ஆக்கிரமித் திருந்த கடற்புலிகளின் பலம் இழக்கப்பட்டி ருக்கின்றதா? பலாலி மீது குண்டு வீசிய வான் புலிகளின் விமானங்கள் ஏதாவது அழிக்கப் பட்டிருக்கின்றதா? நிச்சயமாக இல்லை.

போராளிகளின் தொகை என்று பார்த் தால், அதில் வீழ்ச்சி ஏற்பட்டதற்கான சந்தர்ப் பங்கள் இல்லை என்றுதான் கூறவேண்டும். யாழ் குடா மீதான புலிகளின் அந்த சமரைத் தொடர்ந்து கிழக்கில் மாவில்ஆறு, வாகரை, குடும்பிமலை, கஞ்சிகுடிச்சாறு சண்டைகள் மற்றும் வடக்கில் முகமாலை, மன்னார், மடு தொடர் மோதல்கள் என்று இந்தக் காலப் பகுதியில் பல சண்டைகள் நடைபெற்றிருந்தும், விடுதலைப் புலிகள் தரப்பின் போராளிகளது இழப்பு என்பது சுமார் ஆயிரம் என்ற அளவில் தான் இருக்கின்றது. (கடந்த மாதம் 27ம் திகதி மாவீரர் தினத்தை ஒட்டி விடுதலைப் புலிகளின் மாவீரர் பணிமனை வெளியிட்ட விபரக்கொத்தைப் பார்க்கும்போது இதனை அறிந்துகொள்ள முடிகின்றது.)

ஆனால் இதே காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் சுமார் 25,000 போராளிகளைப் புதிதாகத் தமது அமைப்பில் இணைத்துக் கொண்டுள்ளதாக, தகவல்கள் தெரிவிக் கின்றன.

'வன்னியில் வீட்டுக்கொரு பிள்ளை நாட்டைக் காக்கத் தரவேண்டும்' என்ற புலிகளின் கோரிக்கையின் அடிப்படையில், ஏராளமான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை புலிகள் அமைப்பில் தாமாகவே முன்வந்து இணைத்தி ருக்கின்றார்கள். சில காலத்திற்கு முன்னர் வன்னிக்குச் சென்று வந்த சர்வதேச ஊடக அமைப்பான 'ரொயிட்டர்ஸ்' செய்தி நிறுவனம், வன்னியில் புலிகளால் கட்டியெழுப்பப் பட்டு வருகின்ற பலம் பற்றி பல செய்திகளை ஆதாரத்துடன் வெளியிட்டிருந்தது யாவரும் அறிந்ததே.

இதனை விட, 2006 ஒகஸ்டில் மூதூர் மீது தாக்குதல் நடாத்தி வெற்றிகொண்ட போராளிகள் அனைவருமே தற்பொழுது வன்னியில்தான் நிலை கொண்டிருக்கின் றார்கள். மூதூர் தாக்குதல் காலகட்டத்தில், சமாந்திரமாக மட்டக்களப்பிலும் தாக்கு தலை நடாத்தும் நோக்கில் அங்கு நிலை கொண்டிருந்த தளபதி ஜெயம், தளபதி பானு, தளபதி ரமேஷ், தளபதி கீர்த்தி உட்பட அவர்களது படை அணிகளும் தற்பொழுது வன்னியில்தான் நிலை கொண்டுள்ளன.

எனவே யாழ் குடா மீது ஒரு தாக்குதலை நடாத்தி வெற்றிகொண்டு விடலாம் என்ற தற் துணிவை விடுதலைப்புலிகளுக்கு ஏற்படுத்திய காலகட்டத்தை விட, இன்றைய நிலையில் பல மடங்கு அதிகமான போராளிகளுடன் விடுதலைப் புலிகளின் அணிகள் வன்னியில் நிலைகொண்டு இருக்கின்றது என்பதுதான் உண்மை.

தற்காப்புச் சமர்

இந்த இடத்தில் உங்களிடம் மற்றொரு கேள்வி எழலாம்.

வன்னியின் பல முனைகளில் சிறி லங்காப் படையினர் களங்களைத் திறந் துள்ளார்கள். அங்கெல்லாம் புலிகள் தற் காப்புச் சமர்களை நடாத்தியாகவேண்டி நிர்பந் திக்கப்பட்டிருக்கின்றார்கள். அப்படி இருக்க, புலிகளால் எப்படி ஒரு தாக்குதல் சமரை யாழ் குடா மீது மேற்கொள்ள முடியும் என்று சரத் பொன்சேகா கேட்டது போல் நீங்களும் கேட்கக் கூடும்.

ஜெயசிக்குறு காலத்தை ஞாகப்படுத்திப் பார்த்தால், இதற்கான பதில் கிடைத்துவிடும்.

ஜெயசிக்குறு காலகட்டத்தில், வன்னியில் பல கள முனைகளை சிறிலங்காப் படைகள் திறந்திருந்தன. சிறிலங்கா இராணுவம் புளியங் குளம் வரைக்கும் வந்து குந்திக் கொண்டிருந்தது. ஒட்டுசுட்டானில் வந்து நின்று கொண்டு 'முல்லைத்தீவுக்கா அல்லது புதுக் குடிருப்புக்கா செல்வது' என்று சிறி லங்காப் படைகள் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தன. கனகராயன் குளத்தை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தன. கிளி நொச்சியில் பலமான தளம் அமைத்து நிலை கொண்டபடி, 'மாங்குளத்தை எப்படிக் கைப்பற் றுவது' என்று சிங்களப் படைகள் திட்டமிட்டுக் கொண்டிருந்தன. வன்னிக் கடற்பரப்பால் ஒரு தரையிறக்கத்தை மேற்கொண்டு புலி களின் தலைமையைக் குறிவைக்கவும் திட்ட மிட்டிருந்தன. வானில் இருந்து குண்டுகளைக் கொட்டியும், வன்னியின் பல முனைகளிலும் வான் தரையிறக்கத்தைச் செய்யும் முனைப்புக் களிலும் சிறிலங்காப் படைகள் ஈடுபட்டி ருந்தன.

இப்படி சிங்களப் படைகளால் விரிக்கப் பட்டிருந்த களமுனைகள் அனைத்திலுமே புலிகளின் அணிகள் அன்று தற்காப்புச் சமர்களைத்தான் நடாத்திக்கொண்டிருந்தன.

அத்தனை களமுனைகளுமே மிகவும் முக்கியமான கள முனைகள். ஒரு சிறிய கவலையீனமோ அல்லது பின்னடைவோ கூட பாரிய வெற்றியை எதிரிக்குப் பெற்றுக் கொடுத்துவிடும் என்ற இக்கட்டில் விடுதலைப் புலிகளின் அணிகள் நின்றுகொண்டிருந்தன.

ஆனால் இத்தனை தற்காப்பு சமர்களுக்கு மத்தியிலும், விடுதலைப் புலிகளின் அணிகள் கிளிநொச்சி மீது தாக்குதல் நடாத்தி, அதனை வெற்றிகொண்ட வரலாறு என்றும் ஒன்றிருக்கிற தை நாம் மறந்துவிடக்கூடாது.

ஆகவே, தற்காப்புச் சமர்களுக்கு மத்தி யிலும், அணிகளைத் திரட்டிப், பயிற்சி வழங்கி, ஒரு முற்றுகைச் சமரை வெற்றிகரமாக நடாத்தக் கூடிய ஒரு தலைவரைத்தான் விடுதலைப் புலிகள் அமைப்பு கொண்டிருக்கின்றது.

எனவே யாழ் குடா மீது ஒரு வெற்றிகரமான மீட்புத் தாக்குதலை நடாத்தும் தற்துணிவுடனும், ஆளணி வழங்கல்களுடனும், திறமையான தலைமைத்துவத்துடனும்தான் தற்பொழுதும் விடுதலைப் புலிகள் இருக்கின்றார்கள் என்பது, யாருமே மறுக்க முடியாத ஒரு உண்மை.

Residential Mortgages

&

Commercial Loans

for Business

Contact:

Sri

297 High Street North, Manor Park, London E12 6SL

Tel: **020 8475 0755**

Fax: **020 8470 4755** / Mob: **07803 600 543**

R.S. Finance

Mortgages

Re-Mortgages
(Raising Funds to Start Own Business and Other Needs)
Secured Loans

Loans will be arranged for lease hold and free hold businessess

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fulfil your business loan requirements.

Commercial Loans

Shops
Petrol Stations
Restaurants
Care Homes Etc.

Whatever your needs, Regarding Your Mortgages or Commercial Loans

KIDS ORU

The Twelve Dancing Princesses

There was a king who had twelve beautiful daughters. They slept in twelve beds all in one room and when they went to bed, the doors were shut and locked up. However, every morning their shoes were found to be quite worn through as if they had been danced in all night. Nobody could find out how it happened, or where the princesses had been.

So the king made it known to all the land that if any person could discover the secret and find out where it was that the princesses danced in the night, he would have the one he liked best to take as his wife, and would be king after his death. But whoever tried and did not succeed, after three days and nights, they would be put to death.

A king's son soon came. He was well entertained, and in the evening was taken to the chamber next to the one where the princesses lay in their twelve beds. There he was to sit and watch where they went to dance; and, in order that nothing could happen without him hearing it, the door of his chamber was left open. But the king's son soon fell asleep; and when he awoke in the morning he found that the princesses had all been dancing, for the soles of their shoes were full of holes.

The same thing happened the second and third night and so the king ordered his head to be cut off.

After him came several others; but they all had the same luck, and all lost their lives in the same way.

Now it happened that an old soldier, who had been wounded in battle and could fight no longer, passed through the country where this king reigned, and as he was travelling through a wood, he met an old woman, who asked him where he was going.

'I hardly know where I am going, or what I had better do,' said the soldier; 'but I think I would like to find out where it is that the princesses dance, and then in time I might be a king.'

'Well,' said the old woman, 'that is not a very hard task: only take care not to drink any of the wine which one of the princesses will bring to you in the evening; and as soon as she leaves you pretend to be fast asleep.'

Book review

The Rising Star of Rusty Nail
Author: Lesley M. M. Blume
Pages: 288 - Age Levels: 9-12

Franny Hansen is a ten-year-old piano prodigy living in the small town of Rusty Nail, Minnesota, in 1953. "In reality," notes Franny, "it was little more than a bunch of dusty houses and stores clumped together in the middle of nowhere."

To Franny and her best friend Sandy, however, the tiny town is the "center of the universe." They spend their free time lobbing water bombs off the roof of Franny's apartment, going to movies, and attempting to gain the upper hand over their arch nemesis, the rich and prissy Nancy Orilee.

Soon a new resident arrives, Russian-born Olga Malenkov, world-famous concert pianist. The townsfolk of Rusty Nail, suspicious of anything remotely Russian, refer to the outsider as "the Commie." Franny convinces the woman to give her piano lessons in return for help around the house. Under Madame Malenkov's tutelage, Franny's skill and passion grow.

To Franny's surprise, Madame Malenkov enters her and Nancy into a prestigious state-wide piano contest. Unfortunately for Franny, Nancy's father bribes the judges and Nancy—a mediocre player—takes the prize. Franny is devastated. All is not lost, however, as Franny soon discovers. Life as she knows it is about to change forever.

Although set against the backdrop of the Red Scare and McCarthyism, the story itself is humorous, at times laugh-out-loud funny. Blume has created an action-filled tale that conveys a wonderful sense of place and is peopled with quirky characters.

JOKES

Q. What did the elf use to make him taller?
A. He used elf raising flour.

What did the traffic light say to the car?
Don't look, I'm changing.

Q. What did the elf use to make him taller?
A. He used elf raising flour.

What did the traffic light say to the car?
Don't look, I'm changing.

How do you catch a squirrel?
Climb up a tree and act like a nut.

Teacher: Give me a sentence with the word 'analyze' in it.
Pupil: My sister Anna lies in bed until nine o'clock.

Which soldiers smell of salt and pepper?
Seasoned troopers.

What do you call a girl with the Titanic on her head?
Mandy lifeboats.

Who was the first underwater spy?
James Pond.

Tongue Twisters.

A quick witted cricket critic.

I saw Susie sitting in a shoe shine shop. Where she sits she shines, and where she shines she sits.

A good cook could cook as much cookies as a good cook who could cook cookies

I saw a saw that could out saw any other saw I ever saw.

If you understand, say "understand".
If you don't understand, say "don't understand".
But if you understand and say "don't understand".
How do I understand that you understand? Understand!

நம்மில் பலர் பக்தி, சமயநம்பிக்கை போன்ற வட்டத்திற்குள் வாழ்பவர்கள். பக்தியும் சமய நம்பிக்கையும் உணர்ச்சியின் பாற்பட்டவை. அதன் விளைவாக தன் சமயமே சிறந்தது என்ற கருத்தும் அவர்களுக்கு வந்து விடுகிறது. தங்களின் சமய நூல்களில் கூறப்பட்ட வைகளை எவ்வித ஆய்விற்கும் உட்படுத்தாமல் அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள். அனைத்து சமயத்தினருக்கும் இது பொருந்தும். சமய நூல்கள் மீது விமர்சனங்களை வைத்தால் சீறி விழுவார்கள். அந்த அடிப்படைவாதம்தான் சகிப்புத்தன்மையற்ற வெறியாக ஒரு சிலருக்கு மாறுகிறது. இந்த வட்டத்திற்குள்ளிருந்து விடுபட்டு சமயச் சார்பு அற்று, அறிவுத் தளத்திலிருந்து நாம் சமயங்களை ஆராய்ந்தால் பல உண்மைகளை விளங்கிக் கொள்ள முடியும். நாம் தழுவியிருக்கும் சமயங்களில் உள்ள குறைபாடுகளும் நமக்கு புரியும்.

சைவமும் தமிழும் என்றும் சைவம்தான் தமிழை வளர்த்தது என்றும் நம்மில் பலர் பெருமையாக முழங்குகின்றனர். தமிழின் இனிமையை மாணிக்கவாசகர், சேக்கிழார் போன்ற சைவப் புலவர்கள் தங்கள் பாடல்களில் உணர்த்தியிருக்கின்றனர் என்பது உண்மைதான் ஆனால் அவர்களின் நோக்கம் சைவத்தை உயர்த்தும் பொருட்டு இருந்ததேயன்றி தமிழை உயர்த்தும் பொருட்டு அல்ல. உண்மையில் தமிழ் வளர்ச்சிக்கும் அதன் இலக்கியச் சிறப்பிற்கும் இலக்கணச் செழுமைக்கும் சமணத் துறவிகள் ஆற்றிய பங்கு அளப் பெரியது.

சமணர்கள் படைத்த தமிழ் இலக்கியங்களின் தனிச் சிறப்பிற்கு காரணம் அவைகள் சைவ இலக்கியங்கள் போன்று தனிப்பட்ட சமய உயர்வை வெளிக்காட்டலால் மொழி நலன், சமூக நலன் போன்றவற்றை வெளிக்காட்டி நிற்பதேயாகும்.

சமணம் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளுக்கு முன் தமிழர்களின் சமயம் எது என்பதைப் பார்ப்போம்.

இதுதான் தமிழர்களின் சமயம் என்று நாம் எதனையும் வரையறுத்துக் கூறிவிட முடியாது. ஒவ்வொரு கால கட்டத்திலிலும் அவர்கள் ஒவ்வொன்றை பின்பற்றியிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

கடவுள் மனிதனைப் படைத்தானா இல்லையா என்ற கேள்வி ஒரு புறம் இருக்கட்டும். ஆனால் இத்தனையாயிரம் கடவுள்களையும் மனிதன்தான் படைத்தான் என்பதை மறுக்க முடியாது.

தாங்கள் வாழ்ந்த மரபு, நாகரிகம், பழக்க வழக்கத்திற்கு ஏற்ப அவர்களின் கடவுள்களும் இருந்திருக்கின்றன. சிந்து சமவெளி நாகரிகத்தை எடுத்துக் கொண்டால் அன்றைய சமூகம் தாய்வழிச் சமூகமாக இருந்ததால் பெண் தெய்வ வழிபாடே முதன்மை வகித்தது. தமிழர்களின் மிகத் தொன்மையான வழி பாடாக நாம் இதைக் கருதலாம். பண்டைய தமிழ் இலக்கியங்கள் இதையே கொற்றவை எனக் குறிப்பிடுகின்றன.

இன்று நமக்கு கிடைத்திருக்கும் தமிழ் நூல்களில் மிகவும் தொன்மையான நூலான தொல்காப்பியத்தில் தமிழர்களால் வணங்கப்பட்ட தெய்வங்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. முருகன், கொற்றவை, திருமால், ஞாயிறு போன்ற தெய்வங்களை தமிழர் வழிபட்டனர் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

சாய்ந்த கோபுரங்கள்

எழுதுவது: இளங்கோ

உண்மை என்னவென்றால் அதில் சிவ வழிபாடு எந்த இடத்திலும் இல்லை. தொல்காப்பியத்தில் உள்ள 'சேயோன் மேய மைவரை உலக' என்ற வரியில் வரும் சேயோன் என்ற சொல் சிவனைக் குறிப்பதாகச் சிலர் கருதுகிறார்கள். உண்மையில் அந்த வரி சிவனைக் குறிக்கவில்லை. அது முருகனைக் குறிப்பதாகும். முருகன் சிவனின் மகன்தானே ஆதலால் அவரும் சைவக் கடவுள்தானே என சிலர் நினைக்கலாம் ஆனால் உண்மை அதுவல்ல.

தொல்காப்பியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களைக் குறிப்பிடுகிறது. அதில் குறிஞ்சி நில மக்களின் தலையாய தொழில் வேட்டையாடுவது. அவர்களின் தெய்வமாகவே முருகன் குறிப்பிடப்பட்டிருக்கிறார். பிற்காலத்தில் புனையப்பட்ட புராணங்கள் எங்கிருந்தோ வந்த வாதாபி கணபதிக்கு அவரை தம்பியாக்கியது போல்தான் முருகன் சிவனுக்குப் பிள்ளையாக்கப்பட்டார்.

சிவனைப் பற்றிய குறிப்புகள் முதன் முதலாக கடைச் சங்ககாலத்து நூல்களில் தான் குறிப்பிடப்படுகிறது. இருப்பினும் அப்போது சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு சைவம் என்ற பெயரில் ஒரு சமயம் இயங்கவில்லை.

அடுத்து தமிழர் வழிபாடுகளில் நடுகல் வழிபாடு மிக முக்கிய இடத்தை பிடிக்கின்றது. களத்தில் வீரச் சாவை தழுவிக் கொண்ட மறவர்களின் நினைவாக நடுகல் நடும் வழிபாட்டையே இது குறிக்கிறது. ஆனால் அந்த வழிபாடுகள் சமய பரிபாடைகளாக அடையாளம் காணப்படவில்லை.

சங்க இலக்கியங்களை மிக நுணுக்கமாக ஆராயும் பொழுது பத்துப் பாட்டு நூல்களில் ஒன்றான மதுரைக் காஞ்சியில் கடவுளிகம், வைதீகம், ஆசிவகம் என மூன்று வகையான சமயங்கள் குறிப்பிடப்படுகின்றன. இதில் ஆசிவகம் எனப்படுவது தமிழர்கள் தழுவிய சமயங்களில் மிகத் தொன்மையான சம்யமாக கருதப்படுகிறது. ஆம் சைவத்தை தமிழர்கள் தழுவிக்கொள்ளும் முன்பே ஆசிவகத்தை பெருவாரியான தமிழர்கள் தழுவிக்கொண்டு விட்டார்கள்.

தமிழ் மொழிக்கு புது இரத்தம் பாய்ச்சியவர்கள் சமணத் துறவிகளே. தமிழ் மொழியின் இலக்கணங்களை எல்லாம் வகுத்தவர்களும் அவர்களேதாம்.

கடவுள் மறுப்பு, வருணாசிரம எதிர்ப்பு, வேத எதிர்ப்பு போன்ற கோட்பாடுகளைக் கொண்ட ஒன்றாகவே ஆசிவகம் விளங்கியிருக்கிறது. 'அண்ணலம் பெருந்தவத்து ஆசிவகம்' என சிலப்பதிகாரமும் கூறுகிறது. ஒரு காலத்தில் தமிழர்களால் போற்றித் தழுவப்பட்ட ஆசிவகம் இன்று அழிந்து போய்விட்டது.

தமிழர்களின் மதமாக வருணிக்கப்படும் சைவம் கி.பி. ஏழாம் நூற்றாண்டில்தான் நிறுவனப்படுத்தப்படுகிறது. பெருவாரியான தமிழர்கள் அதற்குப் பின்னர்தான் அதனைத் தழுவிக் கொண்டார்கள்.

ஆசிவகத்திற்குப் பின்னும் சைவத்திற்கு முன்னும் இருந்த இடைப்பட்ட காலத்தில் பெருவாரியான தமிழர்களால் தழுவப்பட்டு மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்த இரு பெரும் சமயங்கள்தாம் பௌத்தமும் சமணமும். பௌத்தத்தையும் சமணத்தையும் பின்னாளில் வந்தவர்கள் மதமாக வரித்துக் கொண்டாலும் உண்மையில் அவை மதங்கள் அல்ல. அவை கடவுளை அடிப்படையாகக் கொள்ளாமல் அன்பை அடிப்படையாகக் கொண்டவை. வன்முறைக்கு எதிரானவை.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பௌத்தமும் சமணமும் தமிழர்கள் மத்தியில் மிகவேகமாகப் பரவியது. மணிமேகலை, குண்டலகேசி போன்றவைகள் தமிழில் தோன்றிய பௌத்த இலக்கியங்களே. தமிழ்க் காப்பியமான மணிகேலைக்கு நிகரான ஒரு பௌத்த நெறிக் காப்பியம் வேறு எந்த மொழிகளிலும் இல்லை எனலாம். பௌத்தத்தைக் காட்டிலும் தமிழோடு மிக அதிகமாக தொடர்புற்றிருந்த ஒன்றாக சமணம் கருதப்படுகிறது.

தமிழர்கள் மத்தியில் சைவம் எழுச்சி பெறத் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை பார்த்தால் அதன் காலம் சுமார் 1400 ஆண்டுகள் ஆனால் அதற்கு முன் சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்களின் தனிப்பெரும் சமயமாக சமணம் விளங்கியிருக்கிறது. தமிழ் மொழிக்கு புது இரத்தம் பாய்ச்சியவர்கள் சமணத் துறவிகளே. தமிழ் மொழியின் இலக்கணங்களை எல்லாம் வகுத்தவர்களும் அவர்கள்தாம். இன்று தமிழர்களால் போற்றப் படும் பெருவாரியான நூல்களைப் படைத்தவர்களும் அவர்களே.

ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள், பதினென் கீழ்க் கணக்கு நூல்கள் போன்ற தமிழ் இலக்கிய கருவூலங்களில் சமணர்களின் பங்குதான் மிக அதிகமாக உள்ளது.

தமிழ் தேசியக் காப்பியம் என மீனாட்சி சுந்தரனார், ம.பொ.சி., அண்ணா, கலைஞர், கழகைலாசபதி மற்றும் பல தமிழறிஞர்களால் போற்றப்பட்ட சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவடிகள் ஒரு சமணத் துறவி. அதே ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியை எழுதிய திருத்தக்க தேவர் ஒரு சமணத் துறவி. இன்று நாம் தமிழ் மொழிக்கு எந்த இலக்கணத்தை பயன் படுத்துகிறோமோ நன்னூல் எனும் அந்த தமிழ் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் ஒரு சமணர். நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என திருக்குறளோடு இணைத்துப் போற்றப்படும் நாலடியாரை எழுதிய நூற்றுவரும் சமணத் துறவிகளே.

ஐம்பெருங் காப்பியங்களைப் போல் ஐஞ் சிறுங்காப்பியங்கள் தமிழில் உள்ளன அவை யாவன உதயணகுமார் காவியம், நாககுமார் காவியம், யசோதா காவியம், சூளாமணி, நீலகேசி. இவை ஐந்தையும் படைத்தவர்கள் சமணர்களே. மேலும் வளையாபதி, ஏலாதி, பழமொழி நானூறு, சிறுபஞ்ச மூலம், பெருங்கதை என அவர்கள் படைத்த தமிழ் இலக்கியங்களின் பட்டியல் நீளுகின்றன.

இவ்வளவு ஏன் தமிழர்களின் மாபெரும் செல்வமான திருக்குறளைப் படைத்த திருவள்ளுவர் தழுவியிதும் சமணமாகத் தான் இருந்திருக்க முடியும் என தமிழாராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சமகால கட்டுரையாளரும் தீவிர இடது சாரி முற்போக்காளராகக் கருதப் படும் அ.மார்க்ஸ் அவர்கள் வள்ளுவர் சமணரே என்று தனது நூலில் நிறுவியுள்ளார். கவிக்கோ அப்துல் ரகுமானும் வள்ளுவர் சமணரே என்பதை அண்மையில் கூறியிருக்கிறார்.

சமணம் தமிழ் மண்ணில் தோன்றிய மார்க்கம் அல்ல. அது தோன்றியது வடநாட்டில்தான். ஆகையால் தமிழ் இலக்கியங்களை படைத்தவர்களும் தமிழ் மண்ணிற்கு அந்நியமானவர்கள் என்று நாயன்மாரால் விதைக்கப்பட்ட கருத்தை நம்புகிறவர்கள் இன்றும் உள்ளனர். அந்தச் சமணர்கள் யாருமிலர் பச்சைத் தமிழர்களே! இன்னும் ஒரு முக்கியமான விடயத்தை நாம் அவதானிக்கலாம். சைவர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்களில் சமணத்திற்கு எதிரான காழ்புணர்ச்சி பல இடங்களில் காணப் படுகிறது. பெரிய புராணத்தில் அது மிக அதிகமாகவே காணப்படுகிறது. சமணத் துறவிகளின் படைப்புக்களிலோ அவை இருக்கவில்லை.

சிலப்பதிகாரத்தை எடுத்துக் கொண்டால் சமயப் பொதுவுடமை அங்கே நிலவுகிறது. தன் சமயத்தை புகழ்ந்து இன்னொரு சமயத்தை இகழும் தன்மை இளங்கோவடிகளிடத்தில் காணப்படவில்லை. சமண சமயத்தைச் சேர்ந்த கண்ணகிக்கு சைவசமயத்தை சேர்ந்த சேரன் செங்குட்டுவன் சிலை எழுப்பினான் அதிலும் தமிழைப் பழித்த கனகன், விசயன் என்ற வடநாட்டு மன்னர்களை போரிட்டு வென்று, இமயத்தில் இருந்து கல்லெடுத்து அதனை தமிழைப் பழித்த தருக்கர்களின் தலையில் சுமக்க வைத்து கண்ணகிக்கு சிலை எழுப்பினான் என்றுசெப்பினைய இளங்கோவடிகள் வருணிக்கும் போது சமய உணர்வுகள் பின் தள்ளப் பட்டு தமிழ் உணர்வே மேலோங்கி நிற்கின்றது.

- தொடரும்

"Specialist advice on all legal matters in a friendly environment"

உங்களுக்கு என்ன இடர் வந்தாலும் சட்டத்துடன் அதனைச் சந்திக்க நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்

RAJ LAW SOLICITORS

Experts in Criminal Defence Service (UK)

M: 07947 647 875 T: 020 8516 7730 / 020 3130 0000

Trident Business Centre, 89, Bickerstetn Road, Tooting Broadway, London SW17 9SH

24 hour police station emergency service

Criminal Defence Service | Community Legal Service

This firm is authorised by the legal services commission to provide free legal advice for you for all types of criminal matters.

- Free 24 Hrs Police Station Attendance
- Magistrates, Crown Court & Court of Appeal Representation
- Terrorism Cases
- Serious Crime, Murder / Attempted Murder, GBH
- Serious Fraud, Money Laundering, Major Sole / Drug Importation
- Sexual Offences including Rape
- HM Customs & Excise Cases
- Appeal & CCRC Cases
- Prison Law Representation

Sponsorship and Power of Attorney

We speak Tamil, French and Mauritian Creole

Immigration Law Specialists

- Fresh Asylum Application / Rule 39 European application
- Entry Clearance / Overseas Appeal
- Student Visa, Extension & Appeal
- Judicial Review & Emergency Injunction Application (24 Hrs)
- Work Permit
- Highly Skilled Migrant Programme
- Family & Other Dependant Relatives Visa
- EU Dependant Visa / Marriage Application
- Investor / Business Visa, Civil Partnership Visa
- Indefinite Leave to Remain under the 5,7,10 & 14 years rules

Property

- We deal with Residential (Flats, House) and Commercial Conveyancing
- Purchase of Off Licence, Restaurants, Groceries, Right to buy

மாறியது தர்மபுரம்

வடக்கில் உருவான முதல் அகதிக்கிராமம் அது. 1958இல் உருவானது சிங்களம் மட்டும் சட்டம் என்ற இனவெறி நாதத்தை தேர்தல் அரங்கில் இசை மீட்டியது பண்டாரநாயக்கா தலைமை. சேனநாயக்கா குடும்பத்தில் இருந்து அரச பீடத்தை இலகுவாக அபகரித்துக் கொண்டதும் பண்டாரநாயக்கா ஊதிய நாதம் இனக்கலவரமாக கொழுந்துவிட்டு எரிய ஆயிரக்கணக்கில் தமிழர்கள் அகதிகளாக வடக்கு நோக்கி ஓடினார்கள்.

கலவர வேகம் கால ஓட்டத்தில் ஆற, பலர் தெற்குக்கு மீண்டனர். ஆனாலும் எல்லாவற்றையும் இழந்த, தீராத பயத்துடன் திரும்ப மறுத்தவர்களுக்கு குறிப்பாக அனுராதபுர பகுதி அகதித்தமிழருக்காக அந்தக் குடியேற்றம் ஆரம்பமானது.

பெயர் · தர்மபுரம், கிளிநொச்சி, முல்லைத்தீவு வீதியில் கண்டாவளை புளியம் பொக்கணைக்கு அப்பால் நெற்றலி ஆற்றங்கரை வரை நீண்ட, முதலாம் யூனிற் முதல் பத்தாம் யூனிற் வரை பரந்த கிராமம். சேவைக்குப் பெயர்பெற்ற அரசாங்க அதிபர் சிறீகாந்தா உருவாக்கிய திட்டம். முன்னால் குடியிருப்பு நிலம். பின்புறம் இரு ஏக்கர் வயற்காணி.

ஆனாலும் தண்ணீர்ப்பிரச்சினை எதிர் பார்த்த பலனைத் தரவில்லை. வருவாய்க்குரிய வயல் நிலம் பயன்படவில்லை. விளைவு பல குடும்பங்கள் வெளியேறின. ஐந்நூறு வரையான குடியிருப்பு முன்னூறு ஆனது. கூலி வேலையாளராகவும் விறகு வெட்டி விற்றும் சீவிக்க வேண்டிய நிலை. உடும்பு, முயல், மான், மரை, பன்றி என்று வேட்டையாடுவதும் ஒரு தொழில். போதிய வருவாய் இன்மை. கசிப்பு காய்ச்சுவதையும் அவர்களிடையே ஊக்குவித்தது. நெற்றலி ஆற்றங்கரை கசிப்பு உற்பத்திக்கு பெயர் எடுத்தது.

இதனிடையே தர்மபுரத்துக்கு அப்பால் விஸ்வமடு என்ற படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம் உதயமானது. சிறீமா அம்மையாரின் இறக்குமதித்தடை உள்ளூர் உற்பதிக்கு ஊக்கம் கொடுத்தது. மிளகாய் செய்கைக்கு விஸ்வமடு பெயர் எடுத்தது. 'வெளிக்கிட்டி விஸ்வமடுவுக்கு' என்ற பெயரில் நாடகங்களும் மேடையேறிய காலம். மிளகாய் ஒரு இறாத்தல் 40 ரூபாவுக்கு விலைபோன காலம்.

விஸ்வமடுவில் விஸ்வரூபம் எடுத்த மிளகாய் செய்கை தர்மபுரம் பெண்களுக்கு கூலி வேலைக்களம் ஆனது. மிளகாய்ப்பழம் பிடுங்கும் காலம் வந்தால் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வதில்லை. வேலைக்கு போவார்கள். தர்மபுரம் பாடசாலை மாட்டுக் கொட்டிலாக மாறும்.

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

10 வயதுச் சிறுவன் கெற்றபோலும் கையுமாக குருவி அடிக்கத்திரிவான். அருகே அவனது ஏழு எட்டு வயதுத்தம்பி கெற்றபோல் அடியால் துடித்துவிழும்? குருவியை தடியால் அடித்துக் கென்று ஈக்கில் கோர்த்தபடி அடுத்து குருவியைத் தேடி அண்ணாந்து நோட்டமிடும் அண்ணனைத் தொடர்வான்.

இரவு ஆனதும் கசிப்புக் குடிக்க வீட்டுக்கு ஆட்கள் வருவார்கள். 'மவ! வேலி செத்தைக்குள்ள இருக்கிற போர்தலை எடுத்து வாயேன்' என்பார் தந்தை. பொலிசுக்கு பயந்து ஒளித்து வைத்த கசிப்புப் போத்தலை எடுத்துவரும் சிறுவன் அப்படி என்னதான் இது என்று தொட்டு நக்கிப் பார்ப்பான். அடுத்த அடுத்த நாட்களில் ஒரு மிடறு குடித்துப்பார்ப்பான். சின்ன வயதிலேயே குடிகாரன் ஆகிவிடுவான்.

கசிப்பு குடிக்க வீட்டுக்கு வரும் ஆட்கள் இரவு இரவாக இருந்து கதைப்பார்கள். படிக்க வழி இருக்காது. படிப்பை ஊக்குவிக்கும் ஆர்வம் பெற்றோருக்கும் இல்லை. இரவில் ஒன்றுக்குப் போக எழும்பும் சிறுமி பார்க்கும் அசிங்கமான காட்சி பாலியல் ஒழுக்க மீறல் குற்றமல்ல என்ற எண்ணத்தை அச்சிறுமிக்கு ஏற்படுத்திவிடுகிறது.

1977 கலவரத்தைத் தொடரந்தும் அகதிகள் வருகை. கல்வி, தொழில் முறைகளில் ஆர்வத்துக்கு காரணமானது. 1983 இனக்கலவரம் அதைத் தொடர்ந்து எழுச்சி பெற்ற போராட்டம். போராளிகள் வருகை தர்மபுரத்துக்கும் மாற்றத்தைத் தந்தது.

> மிளகாய்ப்பழம் பிடுங்கும் காலம் வந்தால் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வதில்லை. வேலைக்கு போவார்கள். தர்மபுரம் பாடசாலை மாட்டுக் கொட்டிலாக மாறும்.

கசிப்பு உற்பத்தித் தடை போராளிகளால் முற்றாக நடைமுறைப்படுத்தப்பட்டது. சிறு கைத் தொழில் திட்டங்கள் உருவாயின. விவசாய செய்கை நிலம் பகிர்ந்து அளிக்கப்பட்டது. கூலித்தொழில் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. முதலாளித் தனச் சேட்டைகள் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

யாழ்ப்பாணத்தால் இடம் பெயரும் தேவை ஏற்பட்டபோது தர்மபுரம் பாடசாலை தரமான ஆசிரியர்களைப் பெற்றது. புதியவர்கள் வருகை ஒழுக்கத்தையும் கல்வி ஆர்வத்தையும் ஊக்குவித்தது.

இன்று தர்மபுரம் முதற்தர கிராமங்களில் ஒன்று. தர்மபுரம் மாணவர் பல்கலைக்கழகத்துக்குப் படையெடுக்கும் நிலை. காணான், கஸ்தூரிபாய் இல்லம் என்ற சிறுவர் இல்லங்கள். தரமான இரு பாடசாலைகள். தொழில் நிலையங்கள். சட்டதிட்டங்களின் கட்டுப்பாடு புதிய எழுச்சிக்கு வடிவகுக்கும் என்பதற்கு தர்மபுரம் ஒரு நல்ல உதாரணம். அன்று அது முதன்முதல் உருவான அகதிக்கிராமம். இன்று அது இடம் பெயர்ந்து வருவோரை வரவேற்கும் இடம்தரும் எழுச்சி பெற்ற கிராமம்.

நம்பிக்கையுடன் உத்தரவாதமான சேவை !
பல வருட அனுபவமும,
அரச அங்கீகாரமும் பெற்ற
மின் இணைப்பு வல்லுனர்கள் !!

STV
ELECTRICAL
For All Your Electrical Solutions

Industrial / Commercial / Domestic

★ 24/7 Breakdown service
★ Inspection Testing & Certification
★ Portable Appliance Testing (PAT)
★ Fire Alarm Certificates
★ Periodic Inspection Reports
★ Land Lord Safety Certificates
★ Professional Service
★ Full Guarantee

Part P registered with ELECSA

NICEIC
Approved Contractor
& Domestic Installer

Call Kaanthan on 07725 310 064
E mail: stvelect@hotmail.co.uk

கைக்கெட்டாத கைம்மாத்துகள்

அங்கம் 7

"நான் போயிட்டு வாறன். லீவு கிடைச்சால் மறுபடியும் வாறன்" என்று சிவராசனிடம் விடை பெற்றான் சண்முகநாதன்.

பாபுவும் சண்முகநாதனும் காரில் ஏறி அமர்ந்தார்கள். பாபு காரைச் செலுத்த ஆரம்பித்தான்.

'என்ன சண்! திட்டமெல்லாம் வெற்றியாக்கும்.' மர்மச் சிரிப்புடன் கேட்டான் பாபு.

'வெற்றிதான் பாபு. காத்திருந்தவன் பெண்டாட்டியை நேத்துவந்தவன் கொண்டு போனானாம். அந்தக் கதைதான் இது.' உரக்கச் சிரித்தான் சண்முகநாதன்.

'என்னதான் இருந்தாலும் இது நம்பிக்கைத் துரோகமில்லையா?'

'போடா. இதிலென்னடா நம்பிக்கைத்துரோகம். அவன் தாலிகட்டினானா? இல்லையே. அவளை முன்னை பின்னை காதலிச்சானா? இல்லையே. ஊரிலை தாய்தேப்பன் பாத்துநிச்சயித்த பெண்தானே? சில விசயங்கள் நிறைவேற வேணுமெண்டால் குறுக்கு வழியிலைதான் போகவேணும்.'

'இதாலை சிவராசன்ரை கோபத்தைச் சம்பாதிக்கப் போறாய்!'

'அவன்ரை கோபம் என்னை என்ன செய்யும். அவன் கிடக்கிறான் விசரன். கையிலை ஒரு காசில்லை. ஒழுங்கான வேலை இல்லை. இந்த லட்சணத்திலை கலியாணம் தேவையாக்கும்.... வந்த நோயோ கான்சர். குணமாச்சுதாம். சும்மா கதை அளக்கிறான். என்னை என்ன இளிச்சவாயன் எண்டு நினைச்சானா? கான்சர் ஆருக்காவது குணமானதெண்டு அறிஞ்சியா? சுத்தப் புலுடா. இந்தக் கான்சர்காரனோடை சுகுணா வந்து கஸ்டப்பட வேணுமே?

அவள் என்ரை மச்சாள். ஊரிலை இருக்கேக்கையே அவளைத்தான் கட்டுவன் எண்டு நினைச்சன். சொந்தக்காரங்கள்கூட அவள் எனக்குத்தான் எண்டு கேலி பண்ணுவாங்கள். ஆனா இவன் சிவா முந்திவிட்டான். அதுவும் வீடுதேடிவந்துசுகுணாவைக் கலியாணம் கட்டப்போறனெண்டு சொல்லிப் போட்டுப் போனான். முறைமச்சான் என்னட்டையே சொல்ல என்ன தைரியம் பாத்தியே?' ஆவேசத்துடன் கூறினான் சண்முகநாதன்.

'இதோ பார் பாபு. நான் செய்யப்போற விசயம் உனக்கு மட்டுந்தான் தெரியும். நீ என்ரை உயிர்ச் சினேகிதன். உன்னிலை நம்பிக்கை வைச்சிருக்கிறன். ஏமாத்திப் போடாதை.'

'நான் ஏன்டா மற்றவைக்குச் சொல்லப் போறன். நீ இப்ப ஆஸ்பத்திரியிலை எடுத்த படங்களைச் சுகுணாவின்ரை வீட்டுக்கு அனுப்பப் போறாய். கார் விபத்திலை சிவராசனுக்கு ஒரு காலை எடுத்தாச்சு எண்டு எழுதப் போறாய். தொண்டையிலை எல்லாம் கடுமையான காயம் எண்டு படத்தோடை கதைவிடப்போறாய். ஏதோ உன்ரை திட்டம் சக்ஸஸ் ஆக எனது வாழ்த்துக்கள்!' என்று கண்சிமிட்டினான் பாபு.

'பாபு! ஆயிரம் பொய்யைச் சொல்லியாலும் ஒரு கலியாணத்தை நடத்து எண்டு சொல்லுவினம். நான் ஒரேயொரு பொய்யைத்தான் சொல்லப்போறன். ஏமாற்றத்தாலை துவளப் போற சுகுணாவுக்கு வாழ்க்கை தர நான் தயார் எண்டு சின்னத்தம்பி மாமாவின்ரை மனசிலை இடம் பிடிக்கப் போறன். இந்தக் காலத்திலை மற்றவங்களுக்கெல்லாம் ஈன இரக்கம் பார்த்தால் வாழேலாது பாபு" என்று கூறிச் சிரித்தான் சண்முகநாதன்.

❖ ❖ ❖

கற்பனைத் தொடர்

எழுதுவது: சோழியான்

ஆறுமாதம்....

நம்பமுடியவில்லை. நாட்களுக்குத்தான் எத்தனை வேகம். எவ்வளவு விரைவாக ஊருண்டோடிவிட்டன. ஆஸ்பத்திரிக்கு வந்து மொத்தமாக ஆறுமாதங்கள் கழிந்து விட்டன. ஆறுமாதங்களைப்படுக்கையில்போக்கிவிட்டு வீட்டுக்கு வந்தான் சிவராசன்.

தொண்டையில் சத்திர சிகிச்சை செய்த தழும்புகள் பழுப்பு நிறத்தில் தெரிந்தன. தடவிப் பார்த்தான். அசிங்கமாகக்கூடத் தெரிந்தது. பழகிப்போனால் சரியாகிவிடும். நண்பர்கள் பலர் அவனைப்பார்த்துச் சுகநலம் விசாரிக்க வீட்டுக்கு வந்தார்கள். அவனது குரல் சிறிது மாறிவிட்டதாகக் கூறினார்கள்.

'தலைக்கு வந்தது தலைப்பாகையோடை போய்விட்டது. இனிமேலாவது சிகரட் அது இது என்று உடம்பைக் கெடுக்காமல் எச்சரிக்கையாக இரு'

சிகரட்டைத் தொடராகக் கரியாக்கும் ஆனந்தன் கூறினான். சிவராசனுக்குச் சிரிப்பு வந்தது. சிரித்தால் சினப்பான். அடக்கிக் கொண்டான். சீனா ரெஸ்ரோரண்ட் வேலையும் பறிபோய் விட்டது.

'நீ மாதக்கணக்கில் வரவில்லை. வேலை கூட. சமாளிக்க முடியவில்லை. ஆளை எடுத்து விட்டேன். வேலைக்கு இனி மேல் ஆள் தேவையானால் உனக்குத்தான் அறிவிப்பேன்' என்று கைவிரித்து உறுதியளித்தான் சீன முதலாளி.

'ஊரிலிருந்து கடிதம் வந்தது. அப்பா நமசிவாயகம்தான் எழுதியிருந்தார். சண்முகநாதன் தீட்டிய திட்டத்தின் வெற்றி கடிதத்தின் ஒவ்வொரு எழுத்திலும் தெரிந்தது.

'காலில்லாமல் எப்படி உங்கே வாழப்போகிறாய்? உடனே ஊருக்கு வந்துவிடு. உங்கே கண் காணாத தேசத்தில் தனியாகக் கஸ்டப்படாதே. என்னாலை உனக்கு ஒரு வயிற்றுக் கஞ்சியாவது தரமுடியும். எங்களோடை வந்து கண்ணுக்கு முன்னாலை இரு ராசா. உன்னை உடனடியாகப் பார்க்க வேண்டுமென்று உனது அம்மா பிடிவாதமாக அழுதுகொண்டிருக்கிறாள்' என்று பக்கம் பக்கமாகக் குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினர்களினதும் உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்த்திருந்தார் நமசிவாயகம்.

'யார் அந்தப் பாவி?' யோசித்தான். புரிந்தது. சண்முகநாதன்தான். அவன்தான் படம் எடுத்தான்.

'நான் அவனுக்கு என்ன கொடுமை செய்தேன்? ஏன் இப்படிச் செய்தான்?' கடிதத்தின் இறுதியில் விடை கிடைத்தது.

'ஆறுமாதமாய் உன்னோடையும் தொடர்பு கொள்ளமுடியவில்லை. உனக்குக் காலில்லை என்று அறிந்தவுடன் சின்னத்தம்பியும் தனது மனதை மாற்றிவிட்டார்.'

அவரையும் பிழைசொல்லமுடியாது. அவருக்கு மகளின் வாழ்க்கை முக்கியம். இறுதியில் சின்னத்தம்பியின் மகள் ஜேர்மனிக்கு வந்து சண்முகநாதனைத் திருமணம் செய்து விட்டாள்....'

இதயத்துள் உறங்கிக்கிடந்த கோபம் என்ற பூனை முன்னங்கால்களால் பிராண்டியவாறு முதுகு மயிர்கள் குத்திட்டுச் சிலிர்த்தெழ புலியாக மாறிச் சீறிப்பாய சிவராசனின் தேகம் நடுங்கியது. உடனே சென்று சண்முகநாதனின் கழுத்தை நெரித்துக் கொன்றால்தான் பூனை மறுபடியும் துயிலும்போன்ற வெறி.

அவளைச் சுற்றித் தினமும் தனிமையில் படிப்படியாகக் கட்டி எழுப்பிய காதலெனும் கற்பனைக் கோட்டைகள் யாவும் ஒரு சில நொடிகளில் மண்ணோடு மண்ணாய்த் துகள்களாய்ச் சிதைந்து சிதறிப்போனதைச் சிவராசனால் தாங்க முடியவில்லை.

'கடவுளே! இதுஎன்னசோதனை? நான்யாருக்கு என்ன தீங்கு செய்தேன்? ஏன் என்னைச் சண்முகநாதனின் உருவில் பழிவாங்கினாய்?

மனதிற்குள் குமுறினான். நேரம் செல்லச் செல்லக் கோபம் மெள்ள மெள்ளக் குறைந்தது. புலி மீண்டும் பூனையானது.

நான்.... என் வீடு.... என் சகோதரங்கள்.... என்னை நம்பி இவர்கள்.... எனக்காக இவர்கள்.... இவர்களுக்காக நான்.... தொப்புள்கொடியில் தொடங்கிய உறவுப் பற்றைகள்.... பாதுகாப்பானவை.... இடையில் வந்த ஒருத்தியை நினைத்து உறவை மறப்பதா?

எனக்கெனச் சில சுமைகள். அவைகளைச் சுமப்பது எனது கடமை. அவை நிறைவேறும்வரையில் என் ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புக்கள் யாவும் தூசிக்குச் சமானம்.

அவன் இல்லறவாழ்வைத் துறந்த புத்தனல்ல. உலகப் பற்றற்ற துறவி விவேகானந்தருமல்ல. சூழ்நிலைகளின் தாக்கத்தால் தடுமாறித் தடக்கி விழுந்தாலும் எழுந்து நடக்க முயலும் சிவராசன். சிவராசனின் உள்ளம் தெளிந்த நீரோடையானது.

தனது எதிர்காலச் செயற்பாடுகள் என்ன என்பதைப்பற்றி அவனால் சிந்திக்க முடிந்தது.

❖ ❖ ❖

"அந்தப் பாழ்படுவான் இப்பிடிச் செய்வானெண்டு ஆர் நினைச்சுப் பார்த்தது? துடிக்கப் பதைக்க உனக்குக் காலில்லை எண்டு சொல்ல எப்பிடித்தான் மனம் வந்துதோ....'

"அது பழைய கதை ஐயா.... பழசைக் கிளறுற தாலை இப்ப என்ன வரப்போகுது? இப்ப நீங்கள் ஏன் ஐயா கொழும்புக்கு வந்தனீங்கள்? காசு ஏதாகிலும் தேவையே?'

"உன்ரை மூத்த தங்கச்சி குமுதினியைக் கேட்டு மணியத்தாற்றை பொடியன் துரை தாய் தேப்பனை அனுப்பினவன். பொடியன் நல்லகுணம். சீதனம் ஆதனம் எதுவும் வேண்டாமாம். அவன் குவைத்திலையும் போய் உழைச்சவன்....'

"தங்கச்சிக்கு விருப்பமெண்டால் செய்து வையுங்கோவன். அவளுக்கும் வயதாகிக் கொண்டெல்லே போகுது....'

'அதுதான் உன்ரை விருப்பத்தையும் கேட்டுப் பாக்கலாம் எண்டு வந்தனான். கொண்ணனுக்கும் இந்தச் சம்பந்தத்திலை நல்ல விருப்பம். அவை ஒண்டும் வேண்டாம் பொம்பிளை வந்தால் காணும் எண்டாப்போலை நாங்கள் எங்கடை கௌரவத்தை விட்டுக்கொடுக்க முடியுமே....? நீ முந்தி அனுப்பினதுகளிலை நானும் கொஞ்சம் மிச்சம்பிடிச்சு வைச்சிருக்கிறன். கொண்ணற்றை நிலை உனக்குத் தெரியுந்தானே. நாட்டுநிலைமேக்கை உழைப்பு நேர்சீர் இல்லை' என்று இழுத்தார் நமசிவாயகம்.

'ஐயா, நான் எவ்வளவு அனுப்ப வேணுமெண்டு சொல்லுங்கோ.... எப்பிடியும் அனுப்பி வைக்கிறன்.'

'நான் உன்னட்டை இவ்வளவெண்டு கேக்கமாட்டன். ஏதோ உன்னாலை இயன்றதை அனுப்பு தம்பி. மிச்சத்தை நான் பார்த்துக் கொள்ளுறன். உனக்கும் வயசாகிக்கொண்டு போகுது. உங்கை ஆராலும் பொம்பிளையள் தோதாய் வந்தால் கலியாணம் கட்டு. நான் குறைநினைக்கமாட்டன். ஏதோ நீ நல்லாய் இருந்தால் காணும்.'

'எனக்கென்ன ஐயா இப்ப அவசரம். முதலிலை நீங்கள் கஸ்டப்படாமை இருந்தா அதுவே போதும்.'

நமசிவாயகத்தின் குரல் தழுதழுத்தது.

'நான் சிவநேசனிட்டைச் சொன்னனான். உனக்கொரு சம்பந்தத்தைப் பார்த்துப் பேசச் சொல்லி. நீயும் ஒருக்கா அவனைப்போய்ப் பார் தம்பி!'

'சிவநேசன் அண்ணர் வீட்டை போகத்தான் வேணும். வரச் சொன்னவர். ரெலிபோன் யுனிற் ஏறுது. ரண்டு மூண்டு நாளையிலை காசை அனுப்பிப்போட்டு ரெலிபோன் எடுக்கிறன்.'

'ஓமோம்.... ரெலிபோனுக்கு அநியாயக் காசு.... வை.... கடிதத்திலை விபரமாய் எழுது.'

'எதுக்கும் வரதனையும் ஒருக்காப் போய்ப் பாருங்கோ. பாவம் அவன்.'

தொடரும்)

Low cost professional driving lessons, book four for the price of three and block booking discounts. Friendly, patient, male & female experienced instructors, automatic & manual cars, Pass Plus. Door to door service. Covers NW, N, W London & Middx areas. Location: North West London - Middlesex - North London

For Tamil speakers, please call our Mobile: 07946604479 .
Email: info@web-som.co.uk

Low cost Professional Driving Lessons

WEB School of Motoring

PASS PLUS

Freephone - 0800 5677 911

BUYING or SELLING **BUSINESS?**

Vision

We specialise in selling businesses.

- **We have a professional team of experienced staff.**
- **We can give you a free valuation.**
- **We provide effective marketing of your business.**
- **We treat the sale of your business with confidentiality.**
- **We only bring genuine buyers to you.**
- **We have cash buyers waiting.**

...With **Vision** as your partner,
Your only job is to continue business as usual.

To **SELL YOUR BUSINESS** IN confidence

CALL **02087727991-2**
Fax **02087727993**

890 Garratt Lane, Tooting, London SW17 0NB

LIST OF BUSINESSES **FOR SALE**

01 OFF LICENCE & CONVENIANCE STORE FOR SALE: LOCATION TOOTING. TAKINGS £7000P/A. RENT IS £7500 P/A RATES ARE £1188 18 YEARS LEASE IS AVAILABLE ASKING PRICE £45.999

02 OFF LICENCE CONVENIANCE STORES & NEWS AGENT FOR SALE LOCATION: CLAPHAM PARK ROAD TAKINGS £33.000 (SHOP SALE £11.000 LOTTERY £2.000 BUS PASSES £ 7.500 PAY POINT 15.000 WESTERN UNION £100 P/W) RENT IS £10500P/A RATES ARE £2.500 P/A ANOTHER 18 YEARS LEASE IS AVAILABLE ASKING PRICE £189.000

03 CONVENIANCE STORE & FRUIT & VEG LOCATION BATTERSEA TAKINGS £3000P/W RENT IS 8666 P/A RATES ARE £4000 P/A ANOTHER 3 YEARS LEASE IS LEFT IS RENEWABLE TO ANOTHER 15 YEARS ASKING PRICE £29.000

04 OFF LICENCE & CONVENIANCE STORE WITH THREE BEDROOM FLAT FOR SALE LOCATION MORDEN TAKINGS £ 6.900 RENT IS £22.000 RATES ARE £7.500 ANOTHER 18 YEARS LEASE IS AVAILABLE ASKING PRICE £55.000

05 FISH AND CHIPS SHOP FOR SALE LOCATION WALLINGTON TAKING £3000 P/W RENT IS £9.000 P/A RATES ARE £1300 P/A ASKING PRICE £89.000

06 OFF LICENCE & NEWS AGENT FOR SALE LOCATION GREENFORD TAKINGS £ 6,500 P/W (including lottery) RENT IS £10.000 P/A RATES ARE £2100 P/A ANOTHER 17 YEARS LEASE AVAILABLE ASKING PRICE £35.000

07 FREEHOLDS FOR SALE IN BRIGHTON LOCATED IN VERY BUSY MAIN ROAD IN LANCING WITH THREE BEDROOM HOUSE TAKING £4.000 P/W INCLUDING LOTTERY ASKING PRICE £275.000

08 DRY CLEANERS FOR SALE IN GARRAT LANE WITH THREE BEDROOM HOUSE TAKINGS £1.500 P/W 9 YEARS LEASE IS AVAILABLE RENT IS £ 9.000P/A RATES ARE £2472 P/A AVAILABLE NOW ASKING PRICE £85.000

Vision BUSINESS TRANSFER & TRAVEL AGENT

பறக்கும் தட்டுக்கள்
(Flying Saucers)



பாகம் 15

பொதுவாக இப்பறக்கும் தட்டுக்கள் குறித்து மக்கள் மத்தியில் பல தவறான பரப்புரைகளை நடாத்தும் கூட்டத்தினரும் மிகவேகமாக தமது பிரச்சாரங்களை மேற்கொண்டனர்.

அந்தவகையில் அமெரிக்காவில் நடந்த சம்பவத்தைப் பாருங்கள்

திரு. போல் சிமின்ரன் என்னும் கோழிப் பண்ணை உரிமையாளர் விஸ்கொன்சின் என்ற நகரத்தில் ஈகிள் ஆற்றின் அருகில் அமைந்துள்ள தனது கோழிப்பண்ணை வளாகத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது நடந்த சம்பவத்தை இப்படி விபரிக்கின்றார்

"திடீரென பறக்கும் தட்டு வந்து நின்றது. அதில் மூன்று பேர் காணப்பட்டனர். அவர்கள் மூவரும் ஆண்கள். அவர்களில் இருவர் என்னிடம் வந்து தண்ணீர் கேட்டனர். நான் தண்ணீர் கொடுப்பதற்காக அத்தட்டினுள் சென்ற போது மற்றைய இருவரும் உள்ளே பான்கேக் சமைத்துக் கொண்டிருந்தனர். நான் தண்ணீரை அவர்களுக்கு கொடுத்ததற்குப் பதிலாக அவர்கள் பான்கேக் சமைப் பதற்கு நான்கு பைக்கற் மாவினை தன்னிடம் தந்து விட்டு நன்றி கூறி விடைபெற்றனர் எனக் கூறினார்.

இதை ஆராய்ந்த Nicap நிறுவனம் இவர் பொய் கூறி மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றார். எனக்கூறி ஆறு மாத சிறைத் தண்டனை இவருக்கு நீதிமன்றம் மூலம் விதித்தது என்பதனையும் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அத்துடன் நான் முதலில் கூறியது போல் இவ்வேற்றுக் கிரக மனிதர்கள் பேசியதை எவரும் பார்க்கவில்லை அவர்கள் ரெலிபதி மூலமே தமது பாஷைகளைப் பரிமாறிக் கொள்ளலாம் என்பதே அனைவரது கருத்து ஆகும்.

மேலும் பறக்கும் தட்டுக்கள் என்று ஒன்றுமில்லை இவை வானில் ஏற்படும் எரிகற்கள் மற்றும் வாயுக்களின் தாக்கங்களினால் ஏற்படும் நிகழ்வுகளே என வாதிடு பவர்களும் உள்ளனர்.

வேற்றுக்கிரக மனிதனின் மருத்துவ ஆய்வுக்குட்பட்ட எம் மனிதர்களையும் கிப்னாடிசம் என்னும் ஆழ்மன உறக்கநிலை மூலம் மனிதன் தெரிந்து கொண்டான்.

உதாரணமாக அமெரிக்காவில் உள்ள நியு கம்சைர் பகுதியில் வசிக்கும் பெற்றி என்பவரும் அவருடைய மனைவியான பெர்னேகெல் என்பவரும் குறிப்பிடும் சம்பவம் இதோ:

19ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் 1961 ஆம் ஆண்டு காரில் ஒரு வெளியான பகுதியை நோக்கி பயணித்த சமயத்தில் திடீரென ஒரு தட்டு வடிவான பொருள் எம் முன் வந்து நின்றது அதிலிருந்து இரு சிறிய மனிதர்கள் இறங்கி எமது காரை நோக்கி ஏதோ ஒரு பொருளை நீட்டிய படி வந்தனர்.

இதனால் எமது கார் இயங்காது நின்றுவிட்டது. அப்போது அவர்கள் எம்மருகில் வந்து எம்மை எங்கோ அழைத்துச் செல்வதாக உணர்ந்தோம். சில மணி நேரங்களின் பின் நாம் கண்விழித்தபோது நாம் காருக்குள் ஆடைகள் கலைந்த வண்ணம் காணப்பட்டோம் எனக் கூறினர். இதை எல்லோரும் பொய் எனக் கூறிவிட்டனர்.

விண்வெளி விநோதம்

எழுதுவது: அ. மயூரன்

சில ஆண்டுகளின் பின் இவர்கள் இருவரும் ஒருவித பயத்தினாலும் மன உழைச்சலுக்கும் ஆளானார்கள். பின் இவர்கள் மருத்துவரை நாடியபோது அவர்கள் 1969 ஆம் ஆண்டு இவர்களை கிப்னாடிசம் என்னும் ஆழ் மன உறக்கநிலைக்கு உட்படுத்தி இவர்களின் வாக்கு மூலத்தைப் பார்த்த போது அதிர்ச்சியடைந்தனர்.

அப்போதுதான் மருத்துவர்களுக்குத் தெரிந்தது. இவர்கள் இருவரும் வேற்றுக்கிரக வாசிகளின் மருத்துவ ஆராய்ச்சிக்கு உட்பட்டது. இதை ufo சம்பந்தம் பற்றி ஆழ மான அனுபவம் உடைய பிரபல மனவியல் நிபுரனான டொக்டர் கிளேமர் என்பவரும் உறுதிப்படுத்தினார்.

இதுவே முதன் முதலில் எம் மனித இனம் வேற்றுக்கிரக மனிதனால் மருத்துவ ஆராய்ச்சிக்கு உட்பட்தை கண்டுபிடிக்கப்பட்டதாகும்.

அத்துடன் இவர்களது குதிக்காலின் பின்பகுதியில் உள்ள கணுக்காலில் இருவருக்கும் தழும்புகள் காணப் பட்டன. இது போன்றே வேற்றுக்கிரக மனிதனின் ஆராய்ச்சிக்கு உட்பட்டவர்களது கால்களில் தழும்புகள் காணப்பட்டதை மருத்துவர்கள் பலர் இன்று உறுதிப் படுத்தியுமுள்ளனர்.

இது பற்றிய விபரங்களைப் பின்னர் ஒரு சமபத்தில் விரிவாக ஆராய்வோம்.

{UFO Evidence.org kw;Wk; NICAP (National Investigations Committee on Aerial Phenomenon) , Loy Lawhon, About.com ID:315}

- தொடரும்

தொடக்க இருக்கும் நிகழ்வுகள்

Feb 04

Protest against Sri Lankan Independence Day

தமிழ் இளையோர் அமைப்பினால் நடத்தப்படும் சிறிலங்கா சுதந்திர தின எதிர்ப்பு நிகழ்வு.

Monday @ **11AM**

10 Downing Street (Exit 4 at Westminster tube station)

Feb 04

Photo Exhibition

British Tamils Forum (BTF) *நடத்தும் Sri Lanka: 60 years of Oppression என்ற தலைப்பிலான புகைப்படக் கண்காட்சி*

Monday @ **9 AM**

Methodist Central Hall, Westminster,London SW1H 9NH

தொடர்புகளுக்கு: 020 8544 8016

மாபெரும் கண்டனப் போராட்டம்

கயவர்களின் திட்டமிட்ட செயல்களில் எம் தேசம் எரிந்து நிற்க, எம்மவர்களை பட்டினி சாவிலும் பெரும் மனித இடபெயர்விற் குள்ளும் தள்ளி ஒட்டுகுழுக்களின் துணையோட ஆயுத முனைக் கொலைகளையும் கடத்தல்களையும் அன்றாடம் நடாத்திக் கொண்டு தம் நாட்டின் சுதந்திரத்தை கொண்டாட நினைக்கும் பேரினவாதிகளின் போலியான முகத்திரையை கிழித்தெறியவும் எம்மக்களின் உண்மை நிலையை இவ் உலகிற்கு எடுத்தியம்பும் வகையில் பெப்ரவரி மாதம் 4ம் திகதி காலை 11 மணியிலிருந்து மதியம் 3மணிவரை இங்கிலாந்து பிரதமரின உத்தியோகபூர்வமான வாசஸ்தலமான 10 Downing Street இல் ஒழுங்கு செய்யப்பட்ட கண்டன ஒன்று கூடலில் கலந்து எம்கண்டனத்தை தெரிவிக்க அனைத்து தாயக உறவுகளையும் அன்புடன் அழைக்கின்றோம்

- ஐக்கிய இராட்சிய தமிழ் இளையோர் அமைப்பினர்



பொன்னான கதிரையிலே
பொய்யுறக்கம் கொள்பவரே
வரலாற்றுத் தவறுக்காய்
வருந்துகின்ற நாள்வரும்பார்



நேசமுடன் உங்கள் கைகளை பற்றுகிறோம்

We specialise in:

- Asylum and Immigration Matters
- Human Rights Applications
- Apeals
- Detention and Bail
- Entry Clearance Application and Apeal
- Injunctions
- Work Permits
- EEA Application
- Student Visa, Visitors Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications

உங்கள் சட்டப் பிரச்சனை எதுவானாலும் தீர்க்க நாங்கள் இருக்கிறோம்.

LINGA & CO

Legal Advisors & Commisioners for Oaths

14 Years of experience

OISC

Tel: **0208 544 9285**
Mob: **07771 646 441**
Fax: **0208 452 9530**

46 High St, Collierswood, London,SW19 2BY

Goran Gates
ESTATE AGENTS

£0 Broker Fee

We do not charge broker fee for mortgages/remortgages/buy to let/ commercial/secured loans

உங்கள் வீட்டுக்கடன் தேவைகளுக்கு நாங்கள் எந்தவிதமான தரகர் கட்டணமும் அறவிடுவதில்லை

For friendly service, please call Mohan or Sanjiv:

020 8429 0033

Harrow, Rayners Lane சரவணபவன் உணவகத்திற்கு அருகாமையில்

421 Alexandra Avenue
Rayners Lane, Harrow,
Middlesex, Ha2 9SG.

Estates: 020 8429 2030
Mortgages: 020 8429 0033
Travel: 020 8429 2080
Fax: 020 8429 2002
www.gorangates.co.uk

YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE.

இந்த இரவில் ஈரநினைவாக...

சிறுகதை

எழுதியவர்: சாந்தி ரமேஸ் வவுனியன்

அர்த்த ராத்திரியில் அழைத்த அந்தத் தொலைபேசி அழைப்பு. முதல் குரல் அது றமணி. அவளும் றமணியும் ஒரே ஊரில் பிறந்து சிறுவயது முதல் ஒரே பாடசாலையில் படித்து, 14 வயதில் அவள் 12 வயதால் மூத்த ஒருவனுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டு கிறுக்கு வயதின் கிறுக்குத்தனங்கள் எதையுமே அனுபவிக்காது குடும்பம் என்ற கூட்டுக்குள் சிக்கித்து குடும்பவாழ்வு இனிப்பா , கசப்பா , சுகமா , சுமையா? எப்படியான கேள்விகளுக்கும் ஒரு புன்னகையால் மட்டும் எதையுமே வெளிப்படுத்தாத அவளது சுபாவம். இப்படி நிறைய றமணி பற்றிய ஞாபகங்கள்.....

ஏய் உன்னோடை ஒராள் கதைக்கப் போகுதாம்? யாரது ? அவளது கேள்விக்கு பதில் வர முன்னம் றமணியின் கையிலிருந்து தொலை பேசி கைமாறி ஆண்குரல் ஒன்று அவளை நலம் விசாரிக்க... குழம்பிப் போகிறாள்.

என்னை ஞாபமிருக்காதெண்டுதான் நினைக்கிறேன். அவன் தன்னைப் புதிராக்கி அவளுடன் உரையாடிக் கொண்டிருந்தான். ஆனால் அவளை நன்றாகவே அறிந்து அவளைப்பற்றிய சகலத்தையும் தெரிந்து வைத்திருந்தான். 770 பஸ்சுடன் போட்டியாக சயிக்கிள் ஓடிய அவளது வால்த்தனங்களையெல்லாம் ஒன்றும் மறக்காமல் ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தான்.

நானும் நீங்கள் பிறந்த ஊர்தான். உங்கடை கவிதையள், கதையளெல்லாம் பத்திரிகையளிலை வாசிக்கிறனான். றேடியோக்களிலும் உங்கடை குரலில வாற நிகழ்ச்சியளைக் கேக்கிறனான். சும்மா சொல்லேல்ல அந்தமாதிரிச் செய்யிறீங்கள் நிகழ்ச்சியள். சரி யாரெண்டு சொல்லீட்டு கதையுங்கோவன். அவனை அறியும் ஆவலில் கேட்கிறாள்.

ஏய் விளங்கேல்லயா? அவனிடமிருந்து தொலைபேசியை வாங்கி அவனை அடையாளம் சொன்னாள் றமணி. அவன் இருக்கும் நாட்டின் பெயரை அவள் சொல்ல.... எடே நீ எங்கையிருக்கிறாயெண்டும் அறிஞ்சு வைச்சிருக்கிறாளடா.....சொல்லிச் சிரித்தாள் றமணி.

அவன் அவளது ஊரில் அமைதியாக அட்டகாசம் இல்லாத ஆளாக இருந்த ஒருவன் என ஊரில் பலர் சொல்லக் கேட்டிருக்கிறாள். படிப்பிலும் நல்ல கெட்டிக்காரன். க.பொ.த. சாதாரணதரத்தில் 7டி, 1சியும் எடுத்தவன். இவன்போல இன்னும் நிறையப் பேர் கெட்டிக்காரர்களாக இருந்தாலும், இவனது வயதையொத்தவர்களின் காலத்தில் இவன் கொஞ்சம் வித்தியாசமாகவே இருந்தவன். அப்படியொரு அமைதி. இவனது அண்ணன் இவனைவிட 3 வயதால் மூத்தவன். அமைதிக்குள்ளிருந்து ஒரு அட்டகாசமானவன்.

அவனது அண்ணனை அவளால் மறக்க முடியாது. அதுவொரு மாரிகாலம். புன்னாலைக் கட்டுவன் தெய்வேந்திரம் கடையில் வாங்கிய 8 கிலோ சீனிப்பை பின்கரியரிலும் 5லீற்றர் மண்ணெண்ணை முன்னாலுமாக இராஜேஸ்வரியம்மன் முடக்கால் திரும்பி தங்கச்சியம்மா வீட்டு மூலையில் அவள் வந்து கொண்டிருக்க, விக்னாவில் ரியூசன் முடித்து அவனது அண்ணனும் அவனது நண்பர்களும் வந்து கொண்டிருந்தார்கள். நேரே வந்தவன் தங்கச்சியம்மா வீட்டு முடக்கில் இருந்த பள்ளத்தில் நிறைந்த வெள்ளத்திற்குள் தனது காண்டிலை அவளது காண்டிலுடன் உராஞ்சி விட்டான். அந்த வெள்ளத்தில் சீனியும் நனைஞ்சு அவளும் நனைச்சு.... அவனோ வழமையான பல்வெளித் தெரியாத சிரிப்போடு போய்விட்டான்.

ஏன் இடித்தான்? இன்று வரையும் அவளுக்குத் தெரியாது. அதன் பின்னால் அவனது முகத்தையே அவளுக்குப் பார்க்கப் பிடிக்கவில்லை. எதிர்பாராத சந்திப்புக்கள் ஏற்படும் இடத்து ஒரு முழிமுழிப்பாள். அவ்வளவே வேறில்லை. வழமையான அந்தப் புன்னகை மட்டும் அவனுடன் கூடவே.

வெள்ளத்தில் நனைந்து வந்ததன் காரணம் கேட்ட அம்மாவுக்கு அவன்தான் விழுத்தினான் என்று சொல்லவில்லை. அதைச்சொன்னால் அவனோடை நீயென்ன கதைச்சனியெனப் பிரச்சனை வருமென அமைதியாகிவிட்டாள். ஆனால் அந்தச் சம்பவத்தைத் தோட்ட வெளியில் நின்று பார்த்திருந்த ஒரு பழசு பின்னேரம் அவளது வீட்டில் ஒதிவிட, அவனுக்கும் அவளுக்கும் இளவென்று கதைபரவி அம்மாவிடம் வாங்கிய குட்டு இப்பவும் அவளுக்கு நினைவிருக்கு.....அந்த மோதலின் பின்னால் அவனைக் கண்டால் தானாகவே ஓரடி தள்ளியே அவளது சயிக்கிள் அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கிவிடும்.

என்னடி செய்யிறாய்? கேட்டாள் றமணி. இருக்கிறோம். நீயெப்பிடியிருக்கிறாய்? பிள்ளையள் என்ன செய்யினம்? படிப்புகள் எல்லாம் எப்பிடி போகுது? வழமையான அவள் பற்றிய றமணியின் விசாரிப்புகள். பிரச்சனையில்லை இருக்கிறாங்கள் பிள்ளையள். உன்ரை பிள்ளையள் என்ன செய்யினம் ? றமணியைக் குறுக்கிட்டு அவன் தொலைபேசியை வாங்க முயற்சித்துக் கொண்டிருந்தான்.

எட பொறடா கொஞ்ச நேரம் கதைச்சிட்டுத் தாறன். ஐயோ, இவன் விடுறானில்லையடி கதைக்க. அவனோடை கதைச்சிட்டுத் தா. றமணியிடமிருந்து அவனிடம் கைமாறுகிறது தொலைபேசி.

ம் வேறையென்ன விசேசங்கள். சொல்ற மாதிரிக்கு ஒண்டுமில்லை. கலியாணங்கட்டீட்டீங்களா ? சிரித்தபடி சொன்னான் கட்டப் போறேன். அம்மா அப்பா ஊரிலை பெண் தேடுகினம்.

பின்னால் றமணியினதும் றமணியின் கணவனதும் சிரிப்புக்கள் ஊடாக அவளது பெயர் அடிபட்டுக் கொண்டிருந்தது. என்னவாம் என்னைப்பற்றி உங்கடை அத்தை கதைக்கிறா? அவசும்மா ஏதோ கதைக்கிறா.....நீங்க சொல்லுங்கோ..... உங்கடை கண்ணாளன் எந்த ஊர்? அவள் தன்னுடைய கண்ணாளனின் ஊரைச் சொன்னாள்.

ஊருக்கை இருந்த ஒருதரையும் ஏனுங்களுக்குப் பிடிக்கேல்ல. ஊருக்கை யாரையாவது லவ்வியிருக்கலாமே? கேட்டான் அவன். எனக்குப் பிடிச்ச வாழ்க்கையிது. இதிலை எந்தக் குறையுமில்லாமல் இருக்கிறன். இண்டைக்கு இந்த சமூகத்திலை ஒரு அடையாளத்தோடை நானிருக்கிறனெண்டா அதுக்கு காரணம் என்னுடைய என்னவன்தான். ஏன் நீங்களும் பிரதேசப்பிரிவு பாக்கிறீங்களோ? அப்பிடிச் சொல்லேல்ல.... ஊருக்கையெண்டா எப்பவும் ஊரோடையான தொடர்புகள் இருந்திருக்கும். அதுக்குத்தான் சொன்னன் என்றான் அவன்.

நாங்களெல்லாம் காத்திருக்க ஒருதருக்கும் தெரியாமல் தூரமான ஊருக்கு ஓடீட்டியள். அதுதான் கொஞ்சம் கோபம். சிரித்தபடி சொன்னான். உப்பிடி எத்தினை பேர் வெளிக்கிட்டிருக்கிறியள்? சாதாரணமாய்க் கேட்ட அவளுக்குச் சட்டெனச் சொன்னான். உண்மையாத்தான் சொல்றன். நான் காத்திருக்க நீங்க போட்டியள். மீண்டும் சிரித்தான். எடேய் அவளோடை உது கதைக்கவோ இந்த இரவிலை எடுத்தனீ... றமணி அவனைக் கடிந்துகொள்வது கேட்டது. அத்தை முந்தித்தான் கதைக்க முடியேல்ல என்ரை விருப்பத்தைச் சொல்லவும் முடியேல்ல இப்பவெண்டாலும் சொல்ல விடுங்கோ

'நான் காத்திருக்க' அந்த வார்த்தைகள் அவளில் அடியாக விழுந்தது. ஊரில் ஒரு நாளும் அவனுடன் கதைத்தே அறியாள். ஒரு புன்னகைகூடப் பரிமாறியிருக்கவில்லை... அப்படியிருக்க இவனை..? புரியாத கேள்வியால் ஒரு கணம் மௌனமாகிவிடுகிறாள்.

'நான் காத்திருக்க' வார்த்தைகளை விலக்கி ஊர், உறவுகள், தெரிந்தவர்கள் எனக் கதை நீண்டு ஒரு மணித்தியாலத்தை விழுங்கி விடுகிறது மணிக்கூடு.

மாமாவோடை சேந்து பியர் குடிச்சிட்டு நிக்கிறன். அதுதான் கனக்க உளறீட்டன் போலை. நினைச்சிருந்ததைச் சொல்ல வேணும் போலையிருந்தது. அதுதான் சொல்லீட்டன் கோவிக்காதையுங்கோ... இவ்வளவு எழுதிற, சிந்திக்கிற உங்களுக்கு என்ரை வெளிப்படையான கருத்து பாதிச்சிருக்கா தெண்டு நம்பிறன். என்ன? அப்பிடித்தானே...?

ம்... சாதாரணமாகவே கதைத்தாள். வேறையென்ன அத்தையோடை கதையுங்கோ. நான் நித்திரை கொள்ளப்போறன். நாளைக்கு உங்களைப் பாக்க வாறன் அத்தையாக்களையும் கூட்டிக்கொண்டு வரலாம்தானே? தாராளமா வாங்கோ வரவேற்கிறோம். சரி றமணீட்டை குடுங்கோ. தொலைபேசி றமணியிடம் கைமாறுகிறது.

ம்... வேறையென்னடி... என்ன குழப்பீட்டானோ? இல்லை உன்னையின்னும் எத்தினை பேர் நினைச்சிருந்தாங்களோ தெரியாது... சொல்லியபடி றமணி சிரித்தாள். அப்பிடியெல்லாம் இல்லையடியப்பா. நீ வேற. ஒரு எஞ்ஜினியரை இழந்திட்டாய். சொன்னாள் றமணி.

இல்லை றமணி எஞ்ஜினியரைக் கட்டினா என்ன வானத்தில மிதக்கலாமோ றமணி ? நீ சரியாத்தான் முன்னேறீட்டாயடி...அவனிலை கோவிக்காதை ஊருக்கை அமைதியா இருந்தவன். அப்ப மனசுக்கையிருந்ததை இப்ப சொல்லீட்டான். இதென்ன பெரிய விசயமா? பெடியள் பெட்டையளை விரும்புறது, பெட்டையள் பெடியளை விரும்புறது சாதாரணம்தானே. றமணி அவன் சார்பாக அவன் அத்தையாக, தமிழ்ச் சமூக நடைமுறையை விளக்குபவளாக மாறியிருந்தாள்.

சரிவேறையென்னடி நாளைக்கு எடுக்கிறன். விடியவெள்ளண எழும்ப வேணும். தொலைபேசித்தொடர்பைத் துண்டித்துக் கொண்டு விடைபெறுகிறாள் றமணி.

'நான் காத்திருக்க' அவன் சொன்ன வார்த்தைகள் அவளுக்குள் வலித்துக் கொண்டிருந்தது. தினமும் வாசல்கூட்டித் தண்ணீர் தெளிக்கும் அவள் அன்றொரு காலை வேளைக்கு ரியூசன் இருந்ததால் போய்விட... அந்த விடியற் காலை அவள் வாசலுக்குள் கிடந்த ஒரு கடிதம் அவளது அப்பாவிடம் மாட்டுப்பட்டு அன்றிரவு அப்பா அந்தக்கடிதத்தையும் கொண்டு வந்து கள்ளையும் குடிச்சுப்போட்டு அவளைப் பேசின பேச்சும். இந்த இரவில் அவளுள் ஈரநினைவாக. அவளை நேசிப்பதாய் எழுதப்பட்ட அந்தக் கடிதம் யார் எழுதியது? பழக்கமில்லாத கையெழுத்தொன்று அவளை நேசிப்பதாய் எழுதிய எழுத்து யாருக்குச் சொந்தம்? குழம்பிப்போய் அவள் ஆத்மத் துடிப்பாயிருந்த அவள் பிரிய தோழி மதியிடம் அதுபற்றிக் கதைத்து... அந்தக் கடிதத்தை எழுதி வீட்டில் குழப்பம் வரக்காரணமாயிருந்தவனை நாலுவார்த்தை திட்டவேண்டுமெனத் தேடியும் யாரென்று தெரியாமல்...

புதிராகவே அந்தக்கடிதம் உருவாக்கிய புயலின் மையம் இவனாக இருக்குமோ? மூளையில் பொறியாய் விழுந்து தெறித்த சந்தேகத்தை அவளால் மனசிலிருந்து தூக்கியெறிய முடியவில்லை.

பின்னிரவுதாண்டிவிட்டதை உறுதிப்படுத்திய மின்விளக்கொளியின் ஒளியில் கண்விழித்துக் கொள்கிறாள். வேலையால் வந்து குளித்து விட்டு நித்திரைக்கு வந்த அவளது என்னவன் கேட்டான்....என்ன பிந்தீட்டுதோ நித்திரை கொள்ள? ம்... 12மணிக்கொரு ரெலிபோன் வந்தது. கதைச்சதிலை நேரம் போட்டுது. யாரது?அவன் நெஞ்சில் தலையை வைத்த படி அத்தனையையும் அவள் சொல்லி முடிக்க, நீயொரு குயினாத்தானிருந்திருக்கிறாய் ஊருக்கை....சிரித்தான் அவளது என்னவன்.

போடா உனக்கெப்பவும் சிரிப்புத்தான். உனக்குக் கோபம் வரேல்லயா ? என்னத்துக்கு கோபம் வரவேணும் ? இதென்ன பிரச்சனையோ ? இதெல்லாம் சாதாரணம். சாதாரணமாய்ச் சொல்லியபடி அவள் நெற்றியுடன் தன் நெற்றியை முட்டி அவள் நெற்றிப் பொட்டைத் தன் நெற்றியிலும் இட்டுக் கொண்டான். சரி வா நித்திரை கொள்ளுவம். இன்னும் 4 மணித்தியாலத்திலை பிள்ளையள் எழும்பீடுங்கள். அவள் பலமான துடிப்பான அவனது அணைப்புக்குள் அவனது அரசியாக அவள்.

இதய வேரில் உறைந்து கிடக்கும் நினைவுத் தடங்களை ஞாபகங்கள் தட்டியெழுப்பும் கணங்களில் பல ஞாபகங்கள் வலி தரும், வலிமை தரும், வாசம் சிந்தும் ஆயிரம் நினைவுகளின் தடங்கள் நெஞ்சப் பரப்பெங்கும் நிறைந்து கிடக்க பல முகங்கள், பல குரல்கள் பலப்பல.... நினைவலைகள்... இத்தகைய நினைவொன்றில் தான் அவனும் அந்தத் தொலைபேசி அழைப்பில் அவளது ஞாபகங்களுக்குள் சிக்கியிருந்தான்.

Football training for Kids

16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான உதைபந்தாட்ட பயிற்சி மூன்று பிரிவுகளாக நடைபெறுகிறது.

Football Association of UK இன் அங்கீகாரம் பெற்ற பயிற்சியாளர்களால் பயிற்றுவிக்கப்படுகிறது.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 11 மணியிலிருந்து பி.ப. 1மணி வரை

Longfield Middle School Football Grounds,
Farm Avenue, North Harrow, HA2 7NZ

தொடர்புகளுக்கு. Middlesex Tamil Academy Football Club, **020 8866 2496**

பெற்றோர்களே
உங்கள் பிரச்சனைகளை நாங்கள் அறிவோம்

பிள்ளைகளுக்கு கஸ்ரம் கொடுக்கும் பாடங்கள் என்ன என்பதை
நாங்கள் அறிவோம். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்
இதோ நாங்கள் இருக்கின்றோம் இனி என்ன கவலை.

Age group 9-11 on Mondays.
Age group 11-14 on Tuesdays.
Time: 7.30pm-10.30pm
Venue: Aksia Lounge,Opposite No:10, Southend Road, **Eastham**, London E6 2AA.
Fee: Twenty Pounds (£20) for three hours. Also in **Tooting** & **Harrow**

There will be 40 minute lectures and experiments/problem solving activities.
Ten minutes test every day on each subject.Only children and parents who like to follow university degrees need to attend this seminars. No time wasters and people disregard education need to apply.

The seminars start on the first week of February 2008.
This is a golden opportunity for your children.
If they study with me for 5 years.

And if they do all the home work
I give them weekly.
I will make you proud of your
children's achievement.

The lectures will prepare motivated children for the highest grade in **Science-Maths-English.**

Booking by telephone: **07961 933 786** (Mrs. Shanthi Kumaran-Secretary)
e-mail: palaniveldavid@yahoo.co.uk

Please send your applications with £20 cheque for the first seminar, payable to"Dr.D.V.Palanivell' and forward your applications to:
Dr.D.V.Palanivell, 84 Southern Road,London E13 9JD.

Students Name: ..... Age: .....

Address: .....

Tel:.....e-mail: .....

உங்கள் பிள்ளைகளின் அடுத்த தவணைக்கான
Progress Reportஐ பாருங்கள்
எங்கள் கடும் உழைப்பு என்னவென்று
உங்களுக்குத் தெரியும்.



உங்களுக்கு அதிகம் வேலைகள் உள்ளன. பிள்ளைகளின் கல்வியை
பராமரிப்பது என்பது பெரும் பொறுப்பு. கவலையை விடுங்கள்
உங்கள் பிள்ளைகளை எங்கள் பிள்ளைகளாக நாங்கள் பார்க்கிறோம்

Three Hour Seminars in **Science-Maths-English**

By **Dr.D.V. Palanivell**,BDS, FDSRCS (England)

மக்கோணாவுக்குப போகிறேன்

சிறி
(ஒரு பேப்பருக்காக)

முன்னர் நான் என்ரை நண்பன் இருள் அழகனுக்காக காதல் கடிதம் எழுதி பிடிபட்டது பற்றி படிச்சிருப்பீங்கள். அதாலை கோபம் வந்த எங்கடை பாடசாலை அதிபர் என்னைப்போய் என்ரை அப்பாவை கட்டாயம் கூட்டிக் கொண்டு வரச் சொல்லிப் போட்டார்.

அதுக்கு முதல்லை வேறை பிரச்சனையளுக் கெல்லாம் நான் அம்மாவை இல்லாட்டி அம்மம் மாவை கூட்டிக்கொண்டுபோய் சமாளிச்சிட்டன் ஆனால் அந்தத் தடவை கட்டாயம் அப்பா வோடைதான் வரவேணும் எண்டு சொல்லிப் போட்டார் காரணம் அப்பாவும் அதிபரும் நல்ல பழக்கமானவை. அதே நேரம் என்ரை சித்தப்பா ஒருத்தரும் அங்கை படிப்பிச்சவர் அவரையும் கூப்பிட்டு என்ரை வீட்டிலை சொல்லி விடச் சொல்லிப் போட்டார்.

எல்லாத்துக்கும் முதலிலை எங்கடை மானிப் பாய் இந்து பாடசாலை அதிபரைப்பற்றி ஒரு வசனம் சொல்ல வேணும். அண்மையிலை ரஜனி நடிச்ச சிவாஜி படத்திலை 'பேரைக் கேட்டாலே சும்மா அதிருதில்லை' எண்டொரு வசனம் வருமல்லோ அது சும்மா வசனம் தான் ஆனால் எங்கடை அதிபர் சாறியின்ரை (அவரது சுருக்கமான பெயர்) பெயரை கேட் டாலே மானிப்பாய் இந்து உண்மையிலேயே அதிரும். அப்படி ஒரு கண்டிப்பு கடமை யுணர்வான அதிபர். அவரைக்கண்டால் தவறு செய்த மாணவர்கள் மட்டுமில்லை வாத்திமாரே அதிருவினம். அப்பிடி இருந்ததாலைதான் என்னை மாதிரி மாணவனையெல்லாம் கட்டிமேச்சவர்.

சரி என்ரை விசயத்துக்கு வாறன்.இருள் அழகன் கெஞ்சிக் கேட்டதாலைதான் நான் அவனுக்காக கடிதம் எழுதிகுடுத்தனான் எண்டு ஒரு மாதிரி அம்மாவிட்டை சொல்லி அப்பாக்கு தூதுவிட்டு அப்பாவையும் கூட்டிக் கொண்டு பள்ளிக்கூடம் போனன்.

அதிபரின்ரை அறையிலை நான் கையைக் கட்டிக்கொண்டு நிக்க அப்பாவிட்டை அதிபர் என்ரை திருகுதாளங்களை ஒவ்வொண்டாய் எடுத்து வைச்சார். அதையெல்லாம் அடிக்கடி என்னை கோபத்தோடை திரும்பி திரும்பி பாத்தபடியே அப்பாகேட்டுக்கொண்டிருந்ததை பாக்க ஏதோ வில்லங்கமா நடக்க போகு தெண்டு விழுங்கிட்டுது.

அதேநேரம் வந்த விசயத்தை விட்டிட்டு பழங்கதையெல்லாத்தையும் கதைச்சுக் கொண்டிருக்கிறாரெண்டு அதிபரிலையும் எரிச் சலாய் வந்தது.

கதைச்சு முடிய அதிபரை பாத்து அப்பா சொன்னார் எங்கடை குடும்பத்திலை பலபேர் இந்தப் பள்ளிக்கூடத்திலைதான் படிச்சவை இந்தப் பள்ளிக்கூடத்துக்கெண்டு ஒரு நல்ல பெயர் இருக்கு அது என்ரை மகனாலை கெடக் கூடாது அதாலை அவனின்ரை சேட்டி பிக்கற்றை தாங்கோ நான் இவனைக் கொண்டு போய் மக்கோணாவிலை சேர்க்கப் போறன் எண்டிட்டார்.

ஆனால் அந்தவருடம் நான் முக்கியமான பத்தாம் வகுப்பு ஓ.எல்.சோதினை எழுதிற வருடம்.அதாலை என்ரை படிப்பு கெட்டுப்போக கூடாதெண்டு அதிபர் சொல்லியும் அப்பா அடம் பிடிச்சு கேக்காததால். எங்கை படிச்சாலும் மானிப்பாய் இந்துவிற்குதான் எனது சோதினை பேப்பர் வரும் எண்டதாலை அங்கை வந்து சோதினை எழுதச் சொல்லி அதிபர் அனுப்பி விட்டார்.

அப்பா சேட்டிபிக்கற்றை வாங்கிக்கொண்டு என்னையும் கூட்டிக்கொண்டு வீட்டை வந்ததுதான் வேலியிலை நின்ட பூவரசம் தடி கனக்க முறிஞ்சு தும்பாய் பறந்தித. வீட்டிலை அம்மா பக்கத்து வீட்டிலை இருந்த சின்னம்மா அம்மம்மா எண்டு எல்லாரும் என க்கு முடிஞ்சளவு அடிவிழாமல் பாதுகாப்பு அரண்அமைச்சு காப்பாத்தி அடிவிழுந்து வெடிச்ச இடங்களுக்கெல்லாம் நல்லெண்ணை பூசி விட்டிச்சினம்.

நான் விக்கி விக்கி அழுதபடி போய் படுத்தாலும் என்னை மக்கோணாவிலை சேர்க்க போகினம் எண்டுஅடுத்த கவலை. சிறுவர் சீர்திருத்தப்பள்ளியான மக்கோணா இது அச்சுவேலி, வசாவிளான் எண்டிற ஊருக்கு இடையிலை இருந்தது. எண்பதுகளின்ரை இறுதிக்குபின்னர் இது இயங்கவில்லை.

மக்கோணா பள்ளிக்கூடம் எண்டிறதை விட சிறுவர்களின்ரை சிறை எண்டு சொல்லலாம். அங்கை யாரையாவது சேர்த்த உடனையே மொட்டையடிச்சு சீருடை குடுத்து அவருக் கொரு சாப்பாட்டுத்தட்டு எல்லாம் குடுத்திடு வினம். பிள்ளையளின்ரை தாய்தகப்பன் மட்டும் தான் வந்து கூட்டிக் கொண்டு போகலாம் மற்ற படி வெளியாலை போக இயலாது.தங்கிறது படிக்கிறது சின்னச்சின்ன வேலையள் எல்லாம் உள்ளைதான்.

நானும் குளப்படி செய்யிற நேரத்திலை அப்பா எனக்கு அடிச்சுப்போட்டு " டேய் உன்னை ஒருநாளைக்கு மக்கோணாவிலை கொண்டு போய் விட்டிட்டு வருவன்எண்டு அடிக்கடி சொல்லுறவர். பள்ளிக்கூடத்தாலை வெளியேத்தினதாலை அடுத்தது மக்கோணா தான் எண்டு எனக்கும் பயம்வந்திட்டிது. நான் வயதுக்கு வந்த குமர்பிள்ளையை போல மற்றவர்கள் என்ன கதைக்கினம் எண்டதை கேட்டபடி அன்று முழுக்க அறையிலேயே படுத்துக் கிடந்தன்.

அன்றிரவு எங்கடை வீட்டிலை சொந்தபந்தம் எல்லாம் சேந்து அடுத்ததாய் எனக்கு என்ன செய்யலாமெண்டு ஒரு குட்டி மகாநாடு நடந்தது.

ஒரு பிள்ளை என்ன பிழை செய்தாலும் தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளை விட அவனது சினேகிதங்களையே அதிகமாய் குறைசொல்லு வினம். அது எங்கள் சமூகத்தில் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. என்ரை பிரச்சனை க்கும் என்ரை சினேகிதங்களையே எல்லாரும் திட்டித் தீர்த்தனர்.

நான் ஊரிலை அளவுக்கதிமான சினேகிதத் தாலை கெட்டுப் போனன் எண்டும் அதாலை என்னை கொழும்பிலை இருந்த மாமாவிட்டை அனுப்பி அங்கை படிப்பிக்கலாமெண்டு அம்மா ஒரு ஆலோசனையை சமர்ப்பித்தார்.

ஊரிலை நாய்க்குட்டியை பெட்டியிலை கட்டி இரண்டு ஊர்தள்ளி கொண்டு போய் விட்டிட்டு வாறமாதிரி என்னையும் ரெண்டு ஊர்தள்ளிக் கொண்டு போய் விட்டினம்

'இவன் இஞ்சையே இப்பிடியெண்டால் கொழும்புக்கு போனால் சொல்லத் தேவை யில்லை இன்னும் மேசமாய் போயிடுவான்' இது அப்பாவின் குரல்.

அவர்அடிக்கடி வியாபார விசயமாய் கொழும்பு போய் வாறதாலை அவரின்ரை சொந்த அனுபவமாய் இருந்திருக்கலாம். அப்ப இந்தியாவுக்கு அனுப்புவம் எண்டு சித்தியின் அடுத்த ஆலோசனை.

'வேண்டாம் இப்பிடித்தான் பாக்கியநாத னின்ரை பெடியை படிக்க இந்தியாவுக்கு அனுப்ப அவன் அங்கை புளொட்டுக்கு (இயக்கம்) போட்டானாம் இவனும் இஞ்சை நோட்டிசுகளோடை திரியிறான் எண்டு கேள்வி' எண்டு சித்தப்பாவின் இழுவை.

இப்பிடி மாறி மாறி எங்கடை இனப்பிரச்சனை தீர்வு மாதிரியே என்ரை படிப்பு பிரச்சனையும் தீர்வில்லாமல் இழுபட்டுகொண்டு போக கடைசியாய் சின்னம்மா ஒரு தீர்வுத்திட்டத்தை வைத்தார் அதாவது என்னை சினேகிதங்க ளோடை சேராமல் இருக்க யாழ்ப்பாணத்தி லேயே தூரமாய் ஒரு பாடசாலையில் சேர்ப்பது அங்கை எங்கடை உறவினர் தெரிஞ்சஆக்கள் இல்லாட்டி விடுதியிலை வைச்சு படிப்பிப்பது.

அப்பாவின் மக்கோணாத்திட்டம் கைவிடப் பட்டு இந்த யோசனை அதிகவாக்குகளால் நிறைவேறியது.. ஒரு பாடசாலையில் இடைக்காலத்தில் ஒருவரை சேர்ப்பதென்பது கடினம். .அதுவும் பத்தாம் வகுப்பில் சேர்ப்பது அதைவிட கடினமானது.. ஆனாலும் எங்கடை குடும்பத்திலை சொந்தத்திலை அதிகமானவை வாத்திமார் எண்டதாலை எல்லாரும் தங்கடை செல்வாக்குகளை பயன்படுத்தி பிரபலமான எல்லாப்பள்ளிக்கூடங்களிலையும் முயற்சி செய்தினம். அவையளுக்கு என்ரை படிப்பு கெட்டுப் போகுது எண்டிற கவலையை விட தங்கடை குடும்பத்திலை ஒருத்தன் படிக்கேல்லையெண்ட அவமானம் தங்களுக்கு வந்திடுமெண்ட கௌரவப்பிரச்சினைதான் பெரிய கவலையாய் இருந்தது.

எல்லாப்பள்ளிக்கூடத்திலையும் தேடி கடைசியாய்ஒருபாதிரியாரின்ரை உதவியாலை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியிலை இடமும் தங்க விடுதியும் கிடைச்சிது.

ஊரிலை நாய்க்குட்டியை பெட்டியிலை கட்டி இரண்டு ஊர்தள்ளி கொண்டுபோய் விட்டிட்டு வாறமாதிரி. என்னையும் பெட்டி கட்டி (உடுப்பு களை) என்னட்டைசைக்கிள் இருந்தால்எப்பிடி யும் ஊர்ப்பக்கம் வருவன் எண்டதாலை அப்பா தன்ரை சைக்கிளிலையே என்னை ஏத்திக்கொண்டுபோய் வட்டுக்கோட்டையிலை விட்டிட்டு தேவையெண்டால் நாங்கள் வந்து உன்னை பாக்கிறம் நீ ஊர்ப்பக்கம் வரவேண் டாம் எண்டு சொல்லிப் போட்டு போட்டார்.

நானும் ஊரையும் சினேகிதங்களையும் விட்டுப் பிரிந்த சோகத்திலை முதல் கிழமை ஏதோ பள்ளிக்கூடம் போகவேணும் எண்ட கட்டாயத்துக்காக போய் வகுப்பிலை இருந்திட்டு எழும்பி வந்து கொண்டிருந்தன். யாரோடையுமே கதைக்கவில்லை அதேபோலத்தான் விடுதியிலையும் என்ரை பேரை கேக்கிறவைக்கு மட்டும் பெயரையும் ஊரையும் சொல்லிப்போட்டு என்பாட்டிலை எதையாவது படிச்சுக்கொண்டிருப்பன்.

இப்பிடியே முதல் கிழமை லீவு நாளும் வந்தது. விடுதியிலை பலர் வீடுகளுக்கு போய்விட தூரஇடங்களிலை இருந்து வந்து படிச்சவைமட்டும் அங்கையே ஊர் சுத்தவும் விளையாட்டு மைதானத்துக்கும் போடுவினம். கிறிக்கற் விளையாடப்போறம் வாறியா எண்டு சிலர் வந்து கேட்டிச்சினம். இல்லையெண்டு தலையாட்டிப்போட்டு திரும்ப படுத்திட்டன்.

என்ரை நினைப்பெல்லாம் அண்டைக்கு லீவுநாள் என்ரை சினேகிதம் எல்லாம் கோயில் தேர்முட்டியிலை இருந்து கும்மாளமடிக்கும். அதை நினைக்க உலகத்திலையே எனக்கு முதல் எதிரியாய் அப்பாமேலை கோவமாயும் அழுகையாவும் வத்தது.

அப்பவும் இந்த றாக்கிங்(பகிடிவதை) விடுதிகள் பல்கலைகழகங்களிலை இருந்தது. ஆனால் இப்ப சிலஇடங்களிலை நடக்கிற மாதிரியோ இல்லாட்டி தமிழ்சினிமாவிலை காட்டிற மாதிரியோ மோசமாயில்லை. ஏதாவது எங்கடை பொருளுகளை எடுத்து ஒழிச்சு வைப்பினம் இல்லாட்டி தண்ணியாலை எத்து வினம் அப்பிடித்தான் நானும் தலைகணிக் குள்ளை முகத்தை புதைச்சுபோட்டு படுத்திருக்க யாரோ சிலபேர் வந்து தண்ணியை எனக்குமேலை ஊத்திப்போட்டு ஓடினாங்கள். ஏற்கனவே கோபத்திலை இருந்த நான் தண்ணி ஊத்தினவையை கலைச்சு ஒருத்தனை பிடிச்சு எனக்குத் தெரிஞ்சிருந்த கராட்டியிலை ஒண்டை பழகிப்பாத்தன்.

அந்தப்பெடியனுக்கு மூக்கு உடைஞ்சதா பல்லுடைஞ்சதா எண்டு சரியாத் தெரியாது முகமெல்லாம் இரத்தம். பிறகென்ன அப்பிடியே விடுதியை விட்டு ஓடியந்திட்டன். ஊருக்கு பஸ்சிலை போக காசும் இல்லை றோட்டிலை சைக்கிளிலை போறவை யிட்டை அண்ணை நானும் வரட்டோ எண்டு கேட்டு நாலைஞ்சு சைக்கிள் காரரிட்ட மாறி மாறி ஏறி ஊருக்கு போய் சேந்திட்டன்.

பிறகென்ன நடந்திருக்கும் எண்டு நான் சொல்ல வேணுமே?

Fancy a website?



Stand out from the crowd!

orudirectory.com

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com

மணமகள் தேவை

1. சப்பிரகமுவ பல்கலைக்கழக பட்டதாரி 35 வயது 6' 3", வெளிநாடுகளில் தகுந்த மணப்பெண்ணைத் தேடுகிறார். Ref: 1175.

2. ஏழு வருடங்களாக லண்டனில் வசிக்கும் 28 வயது 5' 11", படித்த வரன் தகுந்த மணப்பெண்ணைத் தேடுகிறார். Ref: 1174.

3. திருச்சியை பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5' 6", படித்த வரனுக்கு Canada, EU நாடுகளில் தகுந்த மணப் பெண்ணைத் தேடுகிறார். Ref: 1173.

4. In Canada since 1996, on 'leave to remain' status, graduate from Uni. of Canada, working in USA, 36 years, 5' 11", seeks a professional bride. *Ref: 1172*

5. Mother looking for a suitable bride for her son, UK born, 37 years, 5' 9", IT graduate and well employed in London. *Ref: 1171*

6. Graduate from Moratuwa (Sri Lanka) campus, working in London on Permanent Visa status, 38 years, 5' 11', a divorcee, looking for a bride in EU or Sri Lanka. Ref: 1170

7. Thirteen years in U.K, 37 years, 5' 5", A/L educated and self employed, looking for a suitable bride in UK only. Ref: 1169

8. ஆறு வருடங்களாக லண்டனில் வசிக்கும் 37 வயது, 5'6", sponsor செய்யக்கூடிய மணமகனை தேடுகிறார். Ref: 1168

9. Lecturer in a University in Sri Lanka, worked in the U.K for a 2 year- period, 32 years, 5' 5", seeking a bride, at least A/L, from abroad or Sri Lanka. *Ref: 1167*

10. Engineer 29 years, 5' 10", in Australia since childhood, presently well employed and working in USA, looking for a suitable bride. *Ref: 1166*

11. In the U.K since 2,000, qualified accountant form University of Wales, 36 years, 5' 10" looking for a suitable bride. *Ref: 1165*

12. In the U.K since 1990, now 'leave to remain' status, a divorcee, 38 years 5' 7", London Transport employee, since 1995, looking for suitable bride. *Ref: 1163*

13. பிரான்சில் வசிக்கும் 34 வயது 5'8", A/L படித்த மணமகனுக்கு வதிவிட முள்ள மணப்பெண் தேவை. *Ref: 1164*

14. லண்டனில் 11 வருடங்களாக வசிக்கும் A/L படித்த 43 வயது. 5'5" உயரமுள்ள மணமகனிற்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். *Ref: 1161*

15. Professional groom, 30 years, 5' 8", on 5- year work visa, looking for a bride, a professional, or an undergraduate; sponsorship available, if needed. Ref: 1160.

16. லண்டனில் 11 வருடங்களாக தொழில் புரியும் மணமகன் 30 வயது 5" 7" நிரந்தர வதிவிடமையுள்ள மணமகளை தேடுகின்றார். Ref: 1159.

17. Professional, U.K qualified, 29 years, 5' 11", looking for a suitable bride in the U.K. Ref: 1158.

18. கைதடியில் வலுவிலந்தோர் பாட சாலையில் படித்த, வாய்பேச முடியாத, 39 வயது, 5'2" 11 வருடங்களாக ஜேர்மனியில் வசிக்கும் மணமகனிற்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர்.Ref: 1156.

19. Engineer from UK Uni., 27 years, 5'6", on temp.visa, seeking a suitable bride. Ref:1155

20. கொழும்பில் வசிக்கும், 27 வயது, 5'5", படித்த மணமகனுக்கு, கனடாவில் பிரஜாவுரிமையுள்ள தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1153

21. பிரான்ஸில் 2 வருடங்களாக வசிக்கும், 4 6வயது, 5'6", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1151

22. A graduate from India, working over there, as the team leader in a private enterprise, 29 years, 5' 7", looking for a bride, a permanent resident, in Europe. Ref. 1150

23. UK citizen, living in Canada, well educated and with long service achievements in high positions, 46 years, 5" 11" tall, a divorcee, looking for a suitable bride. Ref: 1149

24. An Accountant in Germany since child hood, in the UK since 2004, 28 years, 5'8", looking for a suitable bride. Ref:1147

25. Msc quilalified accountant on working visa, 29 years 5'7", a divorcee, looking for a professional bride Ref:1146

26. In UK since 2000, on student visa, UK graduate, 29 years, 5'10", looking for a suitable bride with PR Ref:1142

27. In UK since 1998, 35 years, 6'2", O/L educated, in business, looking for a suitable bride.Ref:1141

28. Network Engineer, 7yrs. in the U.K, 29 years, 5'11", seeks a suitable bride.Ref: 998

29. IT பட்டதாரி, 30 வயது, 5'11", Student visaஇல் உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1140

30. அவுஸ்திரேலியா பிரஜாவுரிமையுள்ள, computer engineer, 27 years, 5'8",மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1137

31. கனடா பிரஜாவுரிமை, 28 வயது, 5'6", Engineer மணமகனுக்கு, தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1136

32. பிரான்ஸில் வசிக்கும், 29 வயது, 5'11", M Sc பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1135

33. In the UK since 1998, an honers Graduate, 35 years, 5'6", seeking a bride with a permanant residence from EU, Aus.or Canada. Ref: 1130

34. ஜோயியாவில் படித்த Doctorம், தற்சமயம் UKல் student visaவில் இருக்கும், 32 வயது, 5'5", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1125

35. சுவிஸில் 10 வருடமாக வசிக்கும், 31 வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1124

மணமகன் தேவை

36. கொழும்பில் HSBC வங்கியில் வேலைபார்க்கும் 33 வயது 5'5",படித்த மணமகளுக்கு தகுந்த வரனைத் தேடுகிறார். Ref: 1607.

37. இந்திய பல்கலை பட்டதாரி தற் போது லண்டனில் MA படிக்கும் 32 வயது 5'1" தகுந்த மணமகனை தேடுகின்றார். *Ref: 1606*

38. கொழும்பில் வேலை பார்க்கும் 29 வயது 5', A/L படித்த தகுந்த நிரந்தர வதிவிடவுரிமையுள்ள மணமகனை தேடுகின்றார். *Ref: 1605*

39. Professionally qualified bride living in Colombo, 27 years, 5' 4" looking for a suitable groom, a UK/USA citizen. *Ref: 1604*

40. Accounting professional, working in USA, 30 years, 5' 3", looking for a professionally qualified groom. *Ref: 1603*

41. Medical Doctor, born in New Zealand, working over there, 26 years, 5' 4", looking for a suitable university educated groom, with a deep concern for the plight of humanity. *Ref: 1602*

42. French citizen, a professional, 28 years, 5'7", looking for a professional groom, preferably, a French. *Ref: 1601*

43. யாழ்ப்பாண பல்கலைப் பட்டதாரி 30 வயது 5'3". யாழ்ப்பாணத்தில் தொழில்புரியும் மணப்பெண்ணிற்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 1600

44. யாழ்ப்பாணத்தில் விஞ்ஞான ஆசிரியையாக வேலை செய்யும் 36 வயது,5'3" மணமகளிற்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 1499.

45. Brother looking for sister 32 years 5' 3", working in Colombo, a suitable groom. Ref: 1498.

46. யாழ்ப்பாணத்தில் தொழில் புரியும் பட்டதாரி, 35 வயது, 5'6" மணப்பெண்ணிற்கு படித்த வதிவிடமை உரிய வரனை கனடா, EU நாடுகளில் தேடுகின்றனர். Ref: 1497.

47. கொழும்பில் வேலை புரியும் 31 வயது, 5' மணமகளிற்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 1496.

48. Civil Engineer, grew up in Germany, presently working in the UK, 28 years, 5'4", looking for a suitable groom. Ref:1495

49. Netherland citizen, and undergraduate, 23 years, 5'5", looking for a suitable groom. Ref: 1494

50. நோர்வேயில் சங்கீத பட்டதாரி, 34 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1493

51. இலங்கையில் வசிக்கும், 38 வயது, 5'1", A/L படித்த, மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவிலுள்ள பெற்றோர் தேடுகின்றனர். Ref:1492

52. கொழும்பில் வேலை புரியும், O/L படித்த, 23 வயது, 5'5", மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1491

53. கொழும்பில் பட்டதாரி ஆசிரியை, 38 வயது, 5'4", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1490

54. கொழும்பில் வேலை புரியும், 32 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1489

55. A graduate from Jaffna-Uni., doing Special there, 27 Years, 5' 4", looking for a suitable groom. Ref. 1488

56. யாழ்பல்கலைப் பட்டதாரி, 26வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1487

57. A graduate from Sri Jeyewar'pura-Uni, working as an assistant accountant in Colombo, 26 years, 5' 4", looking for a suitable groom in EU or Australia. Ref. 1486

58. இந்தியாவில் வசிக்கும் பட்டதாரி, 22வயது, 5'உயரம், மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டன், கனடாவில் தேடுகின்றனர். Ref :1484

59. UK born, 25 years, 5'5", a grauate in accountancy, looking for a professional groom. Ref :1483

60. In the UK since 1985, A British citizen, 25 years, 5'2" a grauate and well employed looking for a suitable groom. Ref: 1479

61. கொழும்பில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற 32 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை EU/ canadaவில் தேடுகின்றனர். Ref:1478

62. Qualified Doctor, working in Colombo, 28 years, 5'5", looking for a professional with PR in the UK.

63. Ref:1477

64. கொழும்பில் வேலை செய்யும், 38 வயது, 5'1", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1476

65. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கல்வியற் கல்லூரி ஆசிரியை, 23 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் தேடுகின்றனர். Ref:1475

66. கொழும்பில் வசிக்கும், O/L படித்த, 29 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த கொழும்பில் வேலை பார்க்கும் மணமகனை தேடுகின்றனர். Ref:1474

67. வவுனியாவில் அதிபராக கடமை யாற்றும், 43 வயது 5'5", மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1473

68. Born in Britain, a Graduate, 26 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1472

69. Born in Britain, Professional Graduate, 33 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1471

70. சென்னையில் வசிக்கும் பட்டதாரி, 28 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1469

71. யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 34 வயது 4'8", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1468

72. யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 37 வயது 4'5", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1467

73. German citizen, 30 years, 5'3", educated & well employed,a divorsee looking for a suitable groom. Ref:1465

74. தாயகத்தில் பட்டதாரியாக வேலை செய்யும், 29 வயது, 5'3",மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1464

75. கொழும்பில் கணக்காளராக் பணி புரியும், 26 வயது, 5'5", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1463

76. கொழும்பில் வசிக்கும், 24 வயது, 5'5", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1462

77. கொழும்பில் வங்கியில் முகாமையாளராக வேலை செய்யும், 41 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1460

78. கொழும்பில் வசிக்கும், 47 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1456

79. Educated bride, working in Colombo, 24 years, 5'2", seeks a suitable groom in the U.K. Ref:1453

80. கொழும்பில் வேலை செய்யும், பட்டதாரி மணமகள், 32 வயது, 4'10", தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1452

81. Professional bride, 34 years, 5'8", a U.K citizen, looking for a suitable groom. Ref:1451

82. Working in Colombo, 36 years, 5'1", A/L quarlified, seeks a suitable groom in the E.U or Canada . Ref:1450

83. In the U.K, on student visa, doing Ph.D, 34 years, 5'1", looking for a qualified groom in Europe with PR Ref:1449

84. லண்டனில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற, 34 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1448

85. Teacher in Jaffna, 34 years, 5'2", looking for a suitable groom, Ref:1447

86. கனடாவில் வசிக்கும், 30 வயது, 5'2", விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1446

87. கனடா பிரஜாவுரிமையுள்ள, 46 வயது, 5'5", Hotel Management படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1445

88. Govt. servant in Jaffna, 29 years, 5'3", a graduate, seeks a groom in Sri Lanka or abroad. Ref:1444

89. Jaffna born, in the U.K on student visa, 35years, 5'4", A/L qualified seeks a suitable groom. Ref:1443

90. மட்டக்களப்பில் பிறந்து A/L படித்து ஆசிரியையாக கடமை புரியும் 26 வயது 5'1" தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1442

91. Professional 27 years, 5'5",Ten years in the UK, looking for a Professional groom.Ref:1437

92. இந்தியாவில் Doctorஆக பணிபுரியும், 38 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை India/ Sri Lankaவில் தேடுகின்றார். Ref:1430

93. Professional bride, a Canadian citizen 31 years,5'3",with traditional values seeking a suitable groom Ref: 1427

94. இந்திய மருத்துவ கல்லூரியில் பட்டம் பெற்ற 29 வயது, 5'8', கொழும்பில் வசிக்கும், மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1426

95. Professional bride, born in France, 24 years, 5'4', seeking a suitable groom. Ref:1425

96. டென்மார்க்கில் வசிக்கும், 24 வயது, 5'5', இறுதியாண்டு பல்கலைக்கழக மணமகளுக்கு தகுந்த மணமகனை ஐரோப்பாவில்/ இலங்கையில் தேடுகின்றார்.Ref: 1424

97. Canadian Citizen, 35 வயது, 5', விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை லண்டனில் தேடுகின்றார். Ref: 1422

கவிதை

நீண்டும் பகுத்தறிவு

மனிதன் நான் என்று சொல்லிக்கொள்வாய்
ஆறறிவு கொண்டேனென்று அழகாய் ஒரு கிரீடம்
உனக்கு நீயே சூட்டிக்கொள்வாய்!
கண்ணுக்கு முன்னாலொரு சிசு பாலின்றியழுது
தன் ஜீவன் கரைக்கையில்.
கண்ணுக்கு தெரியா கடவுளுக்கதை குடம் குடமாய் கொண்டு
சென்று ஊற்றி கும்பாபிசேகம் செய்வாய்!

மஞ்சள் கயிறில்கூட ஒருதாலி கொள்ள முடியாமல்
மலர்கள் சில "மணமிழந்து" போகையிலே
இல்லத்தாள் இருக்க இன்னொரு துணை தேடி
தங்கத்தால் கொலுசு அவளுக்கு வேண்டியலைந்து – நீ
தரங்கெட்டு போயிருப்பாய்!

பட்டினியோடு உன் தாய் குடலெரிந்து குமுறியழுவாள்
நீயோ. விஜய் படத்துக்கு சென்று விசில் அடித்து
மகிழ்ந்திருப்பாய்!

இனம் .. இனம் என்று எழுத்தில் மட்டும் வீரம் கொள்வாய்
எடுத்துச்சொல்லி வந்து யாரும் உதவி கேட்டால்
கதவை இழுத்துச் சாத்தி அவர் மனசை கொல்வாய்
பழம் கிடைத்தால் போதும்... தாயை வெட்டி வாழை கன்றின்
காலடியில் புதைப்பாய்.
பட்டாம் பூச்சி சிறகில் நூல் கட்டி.. அது பதைப்பதை பார்த்து
பட்டம் விட்டேன் என்பாய்!

உயிர்களை வதைப்பதை ஒரு பொழுதுபோக்காய் கொள்வாய்...
உருப்படாத இந்த அறிவுக்கு... பகுத்தறிவென்று பதிலும் வேறு
சொல்வாய்!

அலரிப்பூக்கள் கொண்டு அலங்கரித்த மகுடம் யாருக்கு வேண்டும்?
கறையான் புற்றை அலங்கரித்த கனகாம்பர மலரானாய் .. நீ
போ நீயும் உன் பகுத்தறிவும்...

- ஜனார்த்தனி

அழகு

மௌனத்தைக்கடப்பதற்கு
வழியென்ன சொல்
ஒரு கேள்விக்கும்
அதன் பதிலுக்குமிடையில்
அந்தரித்துக் கொண்டிருக்கும்
கனவுப் பூ
அதன் நிறங்களின் மீது வரைகிறது
திவ்ய வாசனையோடான
ஆயிரமாயிரம் கதைகளை
படித்தறிய மனமிருந்தால் சொல்
மொழிபெயர்க்கலாம் அந்த
ரகசியத்தின் ஈரமூறிய அன்பின் ஆதர்சத்தை

ஒரு காலம் கரைகிறது
இன்னும் எத்தனை பொழுதுகள்
இந்தத் தோணி
கரையிலேயே கட்டப்பட்டிருக்கும்

அக்கரை போக இக்கரையில்
காத்திருக்கும் ஒரு பயணி

கரையில்
தனிமரத்தின் மேலே வெயில்
கீழே குளிரூற்றும் நிழல்

தோணியிலும் மரத்திலும்
மாறிமாறிப்பறந்து
காதல் பெருக்கும் சிறு
பறவைகளைக் கண்டாயா
அவற்றின் குதூகலத்தைப் பார்த்தாயா
ஒரு ராச்சியம்
உனக்காகவே காத்துக்கிடக்கிறது

- வெளிவாசல்பாலன்

எங்கோனும் நினைத்தார்களோ?

புலம்பெயர்ந்து வந்திங்கே
புதுவாழ்வு பெற்றாலும்
பிறந்தகம் மண்நினைவாய்
என்றென்றும் வாழ்கின்றோம்
எல்லோர் முன்னாலும்
எடுப்பாகப் பேசும்பலர்
எம்மண்ணின் குறைகளைய
எதனையுமே செய்ததில்லை

பசியெடுக்க வில்லையெந்தன்
பிள்ளைக்கு எனச்செல்லி
பரிகாரம் செய்வதற்காய்ப்
பகலிரவாய் அலைபவர்கள்
பசியெடுத்த போதெல்லாம்
பச்சைத் தண்ணீரால்
பசிமாற்றும் எம்மீழக்
குழந்தைகளை நினைப்பதில்லை

கிழங்குப் பொரியலுடன்
குளிர்பானம் கொடுத்துத்தம்
குழந்தை இடையுணவுத்
தேவையினைப் போக்கும்பலர்
கிழங்கை அவித்துத்தம்
முழுநேர உணவாக்கும்
கண்மணிகள் பசியகற்ற
உருப்படியாய்ச் செய்ததில்லை

பிறந்த நாளென்றும்
பிறவென்றும் கொண்டாடிப்
புகைப்படப் பெட்டிமுன்னால்
புன்னகைத்து நிற்கும்பலர்
போர்செய்த கொடுமையினால்
பெற்றவரைப் பிரிந்திழந்து
புளுதியிலே புரள்கின்ற
பிள்ளைகளை நினைப்பதில்லை

காதலர் தினத்தினிலே
களியாட்டம் செய்யும்பலர்
கணவரையே இழந்துநிற்கும்
கன்னியரை நினைப்பதில்லை
மண்ணிற்காய் உயிர்துறந்த
மறவர்கள் மறைவாலே
மனம்நொந்து போயிருக்கும்
மனைவியரை நினைப்பதில்லை

உடல்மெலியும் வழிதேடி
ஊரெல்லாம் அலையும்பலர்
உணவிற்கே வழியில்லா
ஊரவரை நினைப்பதில்லை
தமிழுக்காய் உயிர்கொடுக்கத்
தயங்காத தீரர்களை
தரணிக்குத் தந்திட்ட
தாய்மாரை நினைப்பதில்லை

பெற்றவரை நினைப்பதற்கும்
நாளொன்றை ஒதுக்கிவைத்த
பிறநாட்டார் வழக்கினையும்
பிடித்துநிற்கும் தமிழர்பலர்
பெற்றெடுத்த பிள்ளைகளை
போர்க்களத்தில் இழந்துவிட்டு
புறக்கடையில் கலங்கிநிற்கும்
பெற்றோரை நினைப்பதில்லை

- கன்னல்

பிரச்சாரம்

ஆறு காலில் நின்று
தலையில் ஓலை சுமந்து
தட்டிவாய் திறந்து வரவேற்று
இளைப்பாற நிழலாய்
வானழுதால் குடையாய்
காற்றுக்குத் தடுப்பாய்
பனிக்குப் போர்வையாய்
படுத்துறங்க மறைப்பாய்
பார்ப்போர்க்கு எளிமையாய்
ஏழைக்கு மாளிகையாய்
இருக்கும் குடில்களெல்லாம்
மகிந்தவிற்குப் புலிப்பாசறையாம்
அதனால்தான் குண்டுவீச்சாம்
சிதறிய முகடுகள்
தெங்குமர வட்டுக்களில்
குழந்தைகளின் புத்தகங்கள்
கொல்லைபுற வேலிகளில்
ஏழைகளின் துணிமணிகள்
இடிந்தமண் சுவர்களுக்குள்
பண்டங்கள் பாத்திரங்கள்
குண்டுவிழுந்த குழிகளுக்குள்
இவையெல்லாம் தெரிந்தும்கூட
பரப்புரைகள் படுகேவலமாக.

-வ.கணேஷ்.

ஆயுதம்

மயானக் குருவியின் இசைக்குறிப்பில்
எனது குரலின் துடிப்பு
பதிவுசெய்யப்பட்டிருக்கிறது

அது துயரங்களை அள்ளிவந்த காற்றின்
இழையறுத்து சுதியும் லயமும் சேர லாபிக்கிறது

நெஞ்சுக்குள் எரியும் நெருப்பும்
மீள மீள உயிர்க்கும் துயரங்களுமே
பாடுபொருளாகின்றன

கிளைவிரிந்த எனது மன வெளிகளில்
இன்னும் ஒளியெறிக்கவில்லை
காற்று வீசவில்லை

இலட்சிய விம்பமும்
துன்பியல் சாயமிடப்பட்ட காதலும்
எண்ணிமுடிக்க முடியாத தோல்விகளுமே
வாசனையோடு பூத்திருக்கின்றன

எந்தச் சாமியும் இந்தப் பூக்களை
பூசைக்கு ஏற்கவில்லை
என் வாலிபத்தோடு வலிகளே நெருக்கமாயின

வலிகளைத் தாண்டி புறப்படும் நேரம்
மயானத்தின் வெளிகளிலெல்லாம் இசைவிரிகிறது
துயரம் நிறைந்த எனது குரலின் துடிப்புகளோடு

- விசித்ரா

SAM
SOLICITORS & COMMISSIONERS. FOR OATHS
உங்களது அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கபட்டு
நீண்டகாலம் வேலை செய்திருப்பீர்களாயின் விசா எடுப்பதற்கு
appeals and representation on all Tribunal Hearing
சம்பந்தமான சேவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
உங்களது வியாபார ஸ்தாபனங்கள் வீடுகள்
வீற்றல், வாங்குதல் சம்பந்தமான சட்ட சேவைக்கும்
எங்களை நாடவும்!!
Tel: 0208 770 7143
Fax: 0208 643 9245
www.samsolicitors.com
info@samsolicitors.com
IMMIGRATION & ASYLUM
JUDICIAL REVIEW
CIVIL LITIGATION
CRIME
DIVORCE & FAMILY MATTERS
EMPLOYMENT
HOUSING / LANDLORD & TENANT
COMMERCIAL CONVEYANCING
RESIDENTIAL CONVEYANCING
LIQUOR LICENSING
288, High Street, Sutton, Surrey, SM1 1PQ

அறுவைப் பக்கம்

லேட்டஸ்ட் ஃபேசனா? அப்படீன்னா?

லேட்டஸ்ட் ஃபேஷன் லேட்டஸ்ட் ஃபேஷன்னு சொல்லுறாவுளே அப்படீன்னா என்னான்னு எனக்கு ரொம்ப நாளாவே சந்தேகங்க.

பேஷன் மாறி போச்சுன்னு யராச்சும் சொன்னா என்னடா மாறிப் பேரச்சுன்னு நானும் கண்ணுல வெளக்கெண்ணைய வுட்டுகிட்டு தேடுறேன் ஒன்னுமே புரிய மாட்டீங்குது.

பேஷன் பத்தி அடிக்கடி பேசுற நம்ம ப்ரெண்ட் ஒருத்தன் கிட்ட நமக்கு முக்கி முக்கி போட்டாலும் இந்த பேண்ட் சட்டைய தவிற என்னாத்த போட்டுக்க முடியுது..? இதுலே என்னடா மார்டர்ன் பேஷன்னு சொல்லிகிட்டு அலையுறேன்னு ஏதோ தெரியாம கேட்டுபுட்டேன். அட அல்பையேன்னு ஒரு இளக்கார லுக்கு உட்டான் பாருங்க .. சே இதுகூட தெரியாம நீயெல்லாம் ஜொள்ளுபாண்டின்னு பெருசா பேரை வெச்சுகிடு அலப்பரை வுட்டுகிட்டு இருக்காதேன்னு மூஞ்சில அறஞ்ச மாதிரி சொல்லிட்டு போய்ட்டான்.

ஆஹா ஜொள்ளுபாண்டியோட திறமையபத்தி இப்படி ஒருத்தன் காறி துப்பாத கொறையா சொல்லிட்டு போய்ட்டானேன்னு உடனே நமக்குள்ள தூங்கிட்டு இருந்த சிங்கம் சிங்கிளா தெறிச்சி ஓடி ஆராய்ச்சி பண்ணிச்சு.

இதோ ஒரு சிட்டியோட மார்டனிட்டிய எப்படியா தீர்மானிக்கிராய்ங்கங்கர அளப்பறியா உண்மைகளை குற்றம் நடந்தது என்ன பாணியில் பல இன்னல்களுக்கு மத்தியில் உங்க முன்னாடி சொல்லிகிடறேன்.

என்னடா புண்ணாக்கு இன்னல்னு நீங்க கேட்கறது கேட்குது.உங்களுக்கு என்ன தெரியும்..? ரெண்டே ரெண்டு கண்ணை வச்சுகிட்டு நான் இந்த ஆராய்சிய பண்ண எவ்ளோ கஷ்டப்பட்டேன்னு உங்களுக்கு தெரியாதுங்கோவ்.

பெண்கள் நாட்டின் கண்கள்ன்னு பெரியவுக எந்த அர்த்தத்திலே சொன்னாகளோ எனக்கு தெரியாதுங்க. ஆனா பொண்ணுகள வச்சித்தான் ஒரு ஊரோட மார்டனிடிய தீர்மானிக்கறாங்க தெரியுமா..? அட என்ன பாக்குறவுக? ஆமாங்க. நம்ம பொண்ணுங்க இருக்காவளே ஒரு காலத்திலே பாவாடை சட்டை அப்புறம் தாவணி அப்புறம் சேலைன்னு படிப்படியா வயசுக்கு தகுந்த மாதிரி கட்டிகிட்டு இருந்தாக !

என்ன அப்படியான்னு எல்லாரும் வாயப் பொளந்து கிட்டு படிக்காதீக. இதெல்லாம் போன நூற்றாண்டின் மத்திய காலத்தில் நடந்த ஒரு ஹாரப்பா மொஹஞ்சதாரோல இருந்த சிந்துச்சமவெளி நாகரிகம் மாதிரி ஒரு புதைஞ்சு போன கலாச்சாரங்க. இந்த சமயத்திலே நம்ம பசங்க எல்லாம் பேண்ட் போட்டு சட்டைய பேண்டுக்குள்ள விட்டுகிட்டு சுத்திகிட்டு இருப்பாய்ங்க.

இந்த நேரத்திலே தான் திடீர்னு கைபர் கனவாய் வழியா நுழைஞ்ச கஜினி மாதிரி நம்ம பொண்ணுங்க மனசிலே இருந்த தாவணியையும் ஜாக்கெட்டையும் கொத்தோட சூறையாடிகிட்டு போய் சுரிதார்ன்னு ஒரு ட்ரெஸ் அவுக மனசை கொள்ளை அடிச்சிட்டு போய்டுச்சு. இதைய வச்சிகிட்டே நம்ம அம்மணிக பேஷனோட அடுத்த தலைமுறைக்கு வந்துடாக.

நம்ம அம்மணிக அவ்ளோ சீக்கிரம் திருப்தி அடைஞ்சுடுவாகளா.? மீன் குஞ்சுக்கு நீச்சல் கத்துக்கொடுக்கணுமா என்ன? நம்ம அம்மணிக எல்லாம் பேஷனுக்கே பேண்டு தச்சு போடுரவுகளாச்சே..

சுடிதார்ல லோ 'கட்' , ஹை 'கட்', மினிசுடி, பேகி சுடின்னு சும்மா கதறக் கதற கைய வெட்டு கால ஒட்டுன்னு சும்மா பேஷன் கோடங்கிகளா மாறி பிரிச்சு மேய்ஞ்சுகிட்டு சிட்டியோட மார்டனிட்டிய ஹை வோட்டேஜ்ல வச்சிகிட்டு இருந்தாக. இப்பவும் நம்ம பசங்க பேண்ட்டு சட்டைய போட்டுகிட்டு, இன் பண்ணி கொஞ்ச பேரு, சட்டைய வெளிய வுட்டிகிட்டு கொஞ்ச பேரு ன்னு பரிதபமா சுத்திகிட்டு இருந்தாக.

இப்படியேக்கா கொஞ்ச வருசத்தை பல்லை கடிச்சிகிட்டு நம்ம அம்மணிக ஓட்டிகிட்டு இருந்தாவளா அப்போதான் பார்த்தாக. எத்தனை நாளைக்குதான் இந்த சுரிதார் கருமாந்தரத்தை இப்படியே போட்டுகிட்டு இருக்கிறதுன்னு என்ன பண்ணலாம்னு. அதான் மூக்கு சிந்த கைல கர்சீப் இருக்கு இதிலே எதுக்குடா இவ்ளோ பெரிய துப்பட்டான்னு திடீனு போதி மரத்தடியிலே புத்தருக்கு ஞானோதயம் வந்த மாதிரி நம்ம அம்மணிகளுக்கு வந்து தூக்கி கடாசீட்டாங்க துப்பட்டாவை.

இன்னும் எவ்ளோ நாளைக்குதான் இந்த இத்துப்போன துணியிலே சுரிதாருக்கு பேண்டை போடுறதுன்னு பார்த்தங்க.

அட இந்த பசங்க எல்லாம் சும்ம கோணித்துணியிலே ஜீன்ஸ் சை போட்டுகிட்டு தானே நம்ம கிட்டே பெரிய சீனைப் போருறாவ உருவுடா அவனுக ஜீன்ஸை ன்னு நம்ம அம்மணிக ரகசிய தீர்மானம் நிறைவேத்தி இந்த ஜீன்ஸை மட்டுமே வச்சு ஆட்டம் போட்டுகிட்டு இருந்த பசங்க பேட்டரிய ப்யூஸ் புடுங்கிட்டாங்க.

இந்த கால கட்டத்திலேயும் நம்ம பசங்க பேண்ட்டை போட்டு சட்டைய இன் பண்ணிகிட்டுதான் சுத்திகிட்டு இருக்கானுவ. கொஞ்சம் பேரு வெளிய சட்டைய விட்டுகிட்டு இருக்கானுவ.

இப்படி பசங்க கிட்டே இருந்து ஜீண்ஸை தங்களோட உரிமையா உறுவிகிட்டு வந்ததோட திருப்தி அடையாம அவுகளோட shirt, Tshirt, short kurtha ன்னு மனசாட்சியே இல்லாம எதையுமே விட்டு வைக்காம உருவிகிட்டு ஒடிவந்துடாக. கேட்டா இதுதாண்டா எங்க பேஷ்ன்னு தெலுங்கு ராஜசேகர் பட டைட்டில் கணக்கா நம்ம கிட்டே உருமிகிட்டு போறாக.

இதிலே நம்ம அம்மணிக பார்த்தீகண்ணா பழசையெல்லாம் அவ்ளோ சீக்கிரம் மறக்க மாட்டாக. தாவணி. சேலைன்னு கற்கால பேஷன் எல்லாம் இவுகளுக்கு திடீர் திடீர்னு ஞாபகம் வந்து எங்கினயாச்சும் அவுக display பண்ணற மாதிரி ஒரு கல்யாணமோ ஆபிஸ் பங்ஷனோ வந்தா போதும் கட்டத்தெரியாம கட்டிகிட்டு வந்து பரிதாபமா இருக்குற பசங்க உசுரை எடுக்கிறதுல இவுகளுக்கு ஒரு அலாதி ப்ரியம் போங்க.

இதிலே பசங்களோட முண்டா பனியன் கூட தப்பலைங்க.. அதைய மட்டுமே போட்டுகிட்டு நம்ம அம்மணிக ஸ்லீவ்லெஸ் பனியன்னு அலப்பறை வுட்டுகிட்டு இருக்காவ,

அது மட்டுமா ஸ்கூல பசங்களோட டவுசரைக்கூட விடலையே.... அதையும் போட்டுகிட்டு விடலைப் பசங்க மனச கன்னா பின்னானு அலைபாயவிடுறாக...

என்னதான் சொல்லுங்க முக்கி முக்கி தேடி போட்டாலும் இந்த பசங்களுக்கு பேகி, பெல்பாட்டம் தவிர என்ன இருக்குங்க..? நம்ம அம்மணிகள பாருங்க..? இப்போ சொல்லுங்க ஒரு ஊரு மார்ட்டனா இருக்குரதும் இல்லாததும் நம்ம அம்மணிககிட்டே தான் இருக்கு இல்ல..?

- ஜொள்ளுபாண்டி



சிரிப்பாச் சிரிக்க..

நபர் 1: எப்பாடு பட்டாவது டாக்டராகவோ அல்லது பைலட் டாவோ ஆகணும். அதுதான் என் லட்சியம்.

நபர் 2:எப்படியானாலும் ஜனங்களை மேலே கொண்டு போற முடிவோடதான் இருக்கிறாய்.

❖ ❖ ❖

நபர் 1: கோடிக்கோடியா சம்பாதிக்க வழின்னு ஒரு புத்தகம் எழுதினீங்களே, அது என்னாச்சு?

நபர்2:அது என்னைத் தெருக் கோடிலே கொண்டு வந்து நிறுத்திடிச்சு.

❖ ❖ ❖

நபர் 1:நான் அந்தக்காலத்தில எட்டு மைல் தூரம் நடந்தே போய் பள்ளிக்கூடத்திலே படிச்சேன்

நபர்1:அப்ப படிப்புக்கும் உங்களுக்கும் ரொம்ப தூரம்ன்னு சொல்லுங்க.

❖ ❖ ❖

மனைவி: ஏங்க..உங்களோட நண்பருக்குப் பார்த்த பொண்ணு நல்லாயில்லன்னு நீங்க கொஞ்சம் எடுத்துச் சொல்லக்கூடாதா?

கணவன்: அவன் மட்டும் எனக்குச் சொன்னானா?

❖ ❖ ❖

ராமு : நண்பா....தினமும்காலையில எழுந்திருச்சி எனக்கு போன் பண்ணுடா..

வேணு : அடடா..என்னே ஒரு நட்பு.

ராமு : அதெல்லாம் ஒண்ணுமில்லடா. தினமும் காலையில நரி ஊளையிடறதக் கேட்டா நல்லதுன்னு சொன்னாங்க.

❖ ❖ ❖

நபர் : மருந்தை எதுக்கு ரோட்டுல கொட்டி தடவுறீங்க?

ஜோன்ஸ்:டாக்டர்தான் சொன்னார், அடிபட்ட எடத்துல மருந்தைத் தடவுங்கன்னு.

நபர் : ???

❖ ❖ ❖

நபர் 1 : மச்சரன்.. சிகரெட் குடிச்சா கேன்ஸர் வரும்னு சொல்றாங்களே. உண்மையாடா?

நபர் 1 : தெரியலடா மாப்ளே... நான் குடிச்சா புகை தான் வருது

நபர் : ???

புஷ்ஷிற்கு வந்த தொலைபேசி அழைப்பு

இடம் வெள்ளை மாளிகை. ஒய்ல் ... ஒய்ல்... ஒய்ல் என்று தொலைபேசி சிணுங்குகிறது. புஷ் தொலைபேசியை எடுக்கிறார். இதோ அந்த உரையாடல்.

புஷ் : Hello, புஷ் பேசுகிறேன்

மறுமுனை : வணக்கம். நீங்கள் சர்வதேச பொலிஸ் காரன் தானே?

புஷ் : ஆமாம் ஆமாம். உங்களுக்கு என்ன வேண்டும்.

மறுமுனை : எங்கள் நாட்டு அரசாங்கம் மனித உரிமைகளை மீறுகிறது.

புஷ் : இதென்ன அநியாயம். இதைப் பார்த்துக் கொண்டு நாங்கள் சும்மா இருக்க மாட்டோம்.

மறுமுனை : அது மட்டுமில்லை இங்கே இனப் படுகொலையே நடக்கிறது. மக்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்படுகிறார்கள்.

புஷ் : ஏன் இவ்வளவு தாமதமாக அறிவிக்கிறீர்கள். இதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுப்போம். ஐ.நா பாதுகாப்புச் சபையின் கவனத்திற்கு உடனே கொண்டு வர வேண்டும். உங்கள் நாட்டின் மீது படையெடுக்க வேண்டும்.

மறுமுனை : படையெடுப்பதற்கு ஐ.நா சம்மதிக்காவிட்டால்...

புஷ் : அவர்கள் கிடக்கிறார்கள். என்னுடைய நண்பன் பிரித்தானியாவையும் ஏனைய நாடுகளையும் கூட்டிக் கொண்டு படையெடுப்பொம் பயப்படாதீர்கள்.

மறுமுனை ஐயா இப்பொழுது தான் எனக்கு நிம்மதியாக இருக்கிறது. இனி எங்களுக்குப் பயமில்லை. நீங்கள் உண்மையிலேயே சர்வதேச பொலிஸ் காரன் தான்.

புஷ் : அதுசரி உங்கள் நாட்டில் பெற்றோலிய வளம் இருக்கிறதா?

மறுமுனை : இல்லை ஐயா

புஷ் : atleast சூடானில் இருப்பது போல மாதிரி ஏதாவது பெறுமதியான கனியவளங்கள் இருக்கறதா

மறுமுனை : இல்லை ஐயா இது வளங்களே இல்லாத வறிய நாடு

புஷ் : அப்ப ஏனையா என்ரை நேரத்தை வினாக்கிக் கொண்டிருக்கிறாய். போனை வை.

- கபிலன்

சினிமா

சினிமாவை மக்கள் ஊடகமாக மாத்தணும் - சீமான்



மண்ணுக்காக, மக்களுக்காக சினிமாவில் இருந்து எழும் ஒரு கலகக் குரல் இயக்குநர் சீமானுடையது. அனல் கக்கும் மேடைப் பேச்சினால் பெரியாரிய கொள்கைகளை நாடெங்கும் பரப்பி வருபவருடனான சந்திப்பிலிருந்து

திரைப்படத்துறையில் இருக்கும் பெரியாரியவாதிகளில் நீங்களும் ஒருவர். நீங்கள் எப்படி பெரியார் பாதைக்கு வந்தீங்க?

பெரியார் பாதையில திட்டமிட்டு நான் வரவில்லை. நான் ஒரு ஒத்தையடிப்பாதையில நடந்துக்கிட்டு இருந்தேன். அந்த ஒத்தையடிப் பாதை வந்து சேர்ந்த இடம் பெரியாரோட பாதையா இருந்துச்சி.

அறிவியல்படி நடக்கணும்னு சொல்றீங்க. ஆனால், நீங்க இருக்கிற திரைப்பட உலகம் பூஜை, ராசி, செண்டிமென்ட்னு நிறைய மூடப்பழக்கங்களோடு இருக்கிற இடம். இதை நீங்க எப்படி சமாளிக்கிறீங்க?

என்னோட கொள்கைகள் காரணமா என்னை நிராகரிக்கிற சூழலும் இருக்கத்தான் செய்யுது. ஆனால் நான் தெளிவா இருக்கேன். அதனால எதுவும் என்னை பாதிக்கிறதில்லை.

தேங்காய் உடைக்கிறது மாதிரி விஷயங்களை நான் முதல் படத்தில இருந்தே தவிர்த்தேன். பூஜை பண்றதை நீங்க பண்ணிக்கலாம், நான் தடுக்கலே, ஆனா என்னைக் கூப்பிடாதீங்கன்னு சொன்னேன். சாமி கும்பிடறது, சாமிப் படத்தைக் காட்டறது போன்ற காட்சிகள் என் படத்தில் இருக்காது.

கறுப்புப்பணம், பாலியல் ஒழுங்கீனங்கள், சீரற்ற சம்பளம்னு தவறுகள் அதிகம் இருக்கிற இடம். ஒரு கொள்கைவாதியா நீங்க இதை எப்படி பார்க்கறீங்க?

களையப்பட வேண்டிய விஷயங்கள் சினிமாவில் நிறையவே இருக்குது. சினிமாக்காரன்னாலே இப்படித்தான்னு வெளியே ஒரு கணிப்பு இருக்குது. மிக நேர்மையா ஒழுக்கமா இருக்கணும்னு நினைக்கிற என்னை மாதிரி ஆளும் இதனால பாதிக்கப்படறாங்க. எனக்கு ஒரு வீடு வாடகைக்குத் தர ஆளில்லை. கல்யாணத்துக்குப் பொண்ணு குடுக்குறதுக்கு யோசிக்கறான். சிலர் பண்ணுகிற தப்புகளை பத்திரிகைகள் அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதுவதாலே மொத்த ஊடகமும் கொச்சையானதுங்கிற எண்ணம் வந்துடுச்சி.

இயக்குனர் என்பதைத் தாண்டி நீங்கள் ஒரு மிகச் சிறந்த மேடைப்பேச்சாளர். உங்களோட பேச்சு எல்லோராலும் விரும்பிக் கேட்கப்படுறதுக்கு என்ன காரணம்?

நான் அடிப்படையில் மிகவும் வெளிப்படையானவன். ஒருவனது பேச்சு என்பது எண்ணத்தை வெளிப்படுத்தும் கண்ணாடி போன்றது. அதுக்காக என்னை பெருசா தயார் படுத்திக்கலை. மனசுக்குள்ள நிறைய விஷயங்களும், கோபங்களும் இருந்தது. திடீர்னு ஒரு மேடையில பேசச் சொன்னப்போ கொட்டித் தீர்த்தேன். அதுக்கு ரொம்ப வரவேற்பு இருந்தது. காரணம் நான் உண்மையாக மக்களின் மீது அக்கறையோடு பேசினேன். அவங்க மேல உள்ள பிரியத்துலே, இப்படி இருக்கீங்களேன்னு கோபத்துல ரொம்ப மோசமா அவங்களைத் திட்டினேன். அவங்க வீட்டுப் பையன் பேசற மாதிரி என்னை அனுமதிச்சாங்க. என்னை ஆதரிச்சாங்க.

மேடையிலே ஏறும்போது கோர்வையாப் பேசணும், எதுகை மோனையோடு பேசணும்னு போகக்கூடாது. மக்களுக்கு முன்னாடி நிர்வாணமா நிக்கணும். நான் நின்னேன். நான் படிக்கிற, சிந்திக்கிற, சந்திக்கிறவர் களிடம் உள்வாங்குகிற விஷயங்களை பிரியத்தோடு என் மக்களுக்கு சொன்னேன். அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவ்வளவுதான்.

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்துலே தீவிரமாக இயங்கினீர்களே, அதைப் பற்றி சொல்ல முடியுமா?

என் மொழியை மீட்டெடுக்கணும். மொழியை மீட்டுட்டா இன உணர்வு, மான உணர்வு எல்லாம் வரும். அறிவார்ந்த ஒரு சமூகமா இந்த சமூகத்தை மாற்றியாகணும். அறியாமை இருளில் இருந்து இந்த மக்களை மீட்டெடுக்கணும். எங்க கையில் தந்தை பெரியார் கொடுத்த அறிவுச்சுடர் இருக்குது. அதோட ஓடிட்டிருக்கோம். நான் சோர்வும்போது அதை என் தம்பிகள் கையிலயோ, தோழர்கள் கையிலயோ கொடுத்துடுவேன். அவங்க அடுத்து ஓடுவாங்க. இது ஒரு நெடுந்தூர ஓட்டம். இதன் லட்சியமே தேசம் முழுக்க இந்த அறிவுச்சுடரை பரவவிடுவது தான்.

தமிழ் ஈழம் எங்களோட பிரதான இலக்கு. அதுக்காக போராட தலைவர் அங்க இருக்காரு. அந்தப் போராட்டத்தோட நியாயத்தை, தனிநாடு கேட்பதற்கான காரணத்தை உலக மக்களுக்கு எடுத்துச் சொல்றது தான் இங்கே இருக்கிற என்னை மாதிரியான ஆட்களோட வேலை. தன் இன வரலாறு, தான் யாரென்றே தெரியாத நிலையில் தான் இந்த இனம் இருக்குது. சினிமாப் பாட்டை மனப்பாடம் செய்த நேரத்தில் திருக்குறளை படிச்சிருந்தா இந்த இனம் என்னைக்கோ முன்னேறியிருக்கும்.

தமிழில் பேசுங்கன்னு சொன்னா அது கிண்டலுக்குரிய செய்தியா இருக்குது. மகிழ்ச்சின்னு ஒரு தமிழ்ச் சொல் இருக்குது சந்தோஷம்னு தான் சொல்றோம். காரியத்தை விசேஷம், சோறை சாதம், கோயிலை ஆலயம்னு சொல்றோம். இப்படி எல்லாத்திலயும் சமஸ்கிருதம் கலந்திருக்குது. இந்தக் கலப்பு பத்தாதுன்னு இங்கிலீஷ் கலப்பு வேற.

பிரிட்டிஷ் மக்கள்கிட்டப் போய் தமிழில் பேசுங்கன்னு சொன்னா அது அயோக்கியத்தனம், கர்நாடகாவில் போய் தமிழ்ப் பெயர் வைங்கன்னு சொன்னா நான் இன வெறியன். என் சொந்த மக்கள்கிட்ட மம்மிக்கு பதிலா அம்மான்னு சொல்லுங்கடான்னு சொல்றது தப்புன்னா, இந்தக் கொடுமையை எங்க போய் சொல்றது?

நன்றி : கீற்று

சினித்துளி

விஜய்யும் சிபாரிசு செய்கிறார்

தனது படங்களில் யார் ஹீரோயினாக நடிக்க வேண்டும் என்பது பற்றியெல்லாம் இளைய தளபதி விஜய் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. முன்னணி நடிகைகள் தாங்களாகவே போட்டி போட்டுக் கொண்டு, விஜயுடன் நடிக்கும் வாய்ப்பை எப்படியாவது சாமர்த்தியமாக வாங்கி விடுவதுதான் இதுவரை நடந்து வந்திருக்கிறது.

ஐங்கரன் பிலிம்ஸ் தயாரிக்க, பிரபுதேவா இயக்கும் படத்துக்கு இலியானாவை ஹீரோயினாக போடச்சொல்லி முதல்முறையாக விருப்பத்தை தெரிவித்தாராம் விஜய்.

ஆனால் இலியானாவிடம் கேட்டதுக்கு இரண்டு வருடத்திற்கு தேதி கிடையாது என்று சொல்லியிருக்கிறார். எவ்வளவு சம்பளம் என்றாலும் பரவாயில்லை என்று பெரிய அளவில் காய் நகர்த்தியிருக்கிறார் இயக்குனர் பிரபுதேவா. கிடைப்பாரா இலியானா?

தேவயானியின் சகோதர பாசம்

'காதல் கோட்டை' மூலம் தமிழில் பிரபலமாகி, பல முன்னணி நடிகர்களுடன் நடித்து, குடும்ப பாங்கான நடிகை, குழந்தைத்தனமான நடிகை, மங்களகரமான நடிகை என்று பல பரிணாமங்களில் வந்த தேவயானி தற்போது சின்னத்திரைத் தொடரில் ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கிறார்

ஆனாலும் பெரிய திரை ஆசை இவருக்கு விட்டுப் போகவில்லை. எனவே, தனது தம்பி நகுலனை களமிறக்க கடுமையாக உழைத்து 'காதலில் விழுந்தேன்' என்ற படத்தையும் வாங்கி கொடுத்து விட்டார். அத்தோடு இல்லாமல், கையில் பிரம்புடன், படத்தின் ஸ்கிரிப்ட் வைத்துக் கொண்டு, வசனங்களை எப்படி உச்சரிப்பது, முகபாவங்களை எப்படி மாற்றிக் காட்டுவது என்று கற்றுக் கொடுக்கிறார். சரியாக செய்தால், தட்டி கொடுக்கிறார். தப்பாக செய்தால், பிரம்பால் தட்டுகிறார். என்னோடு திரைத்துறை போகக் கூடாது. நீ நிலையாய் வர வேண்டும் என்று தீராத் வேட்கையில் களமிறங்கி இருக்கிறார் தேவயானி. நகுலன் என்ன செய்வார் என்பதை 'காதலில் விழுந்தேன்' வந்ததும் தெரிந்து விடும்.

சின்னத் திரையில் சிம்ரன்

மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதில்லை. சிம்ரனின் கதையும் அது போல்தான்! சிம்ரன் சினிமாவில் இல்லையென்றாலும் அவரை ரசிகர்கள் விடுவதாயில்லை. சமீபத்தில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுடன் இணைந்து பிரமிட் சாய்மீரா நிறுவனம் போட்டி ஒன்று நடத்தியது. பெரியதிரை நட்சத்திரங்களில் யார் சின்னதிரையில் நடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பது கேள்வி. இதற்கு அதிகம்பேர் தெரிவித்த பதில், சிம்ரன்!

எனவே சிம்ரனை சின்னத்திரைக்கு கொண்டுவரும் நடவடிக்கைகள் தீவிரமாக நடந்து கொண்டிருக்கின்றன.

'சிம்ரன் திரை' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் மார்ச் முதல் காட்சிதரப் போகிறார் சிம்ரன். இதுபற்றி சிம்ரனிடம் கேட்டதற்கு, 'டி.டி. மெட்ரோவில் சூப்பர்ஹிட் முகாபுலா நிகழ்ச்சியில் தோன்றியதுதான் எனது முதல் நடிப்பு அனுபவம். பிறகுதான் சினிமாவுக்கு வந்தேன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு தொலைக்காட்சியில் நடிப்பது பரவசமாக இருக்கிறது' என்றார்.

- Accountancy & Auditing
- Business Start up Advice
- Business Plans & Cash Flow Forecasts
- Personal tax Affairs & Self Assesment
- Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- Preparing VAT, Payroll for the Sale Trader
- Patrnership & Limited Companies
- Company Formation
- Attending VAT & PAYE visits
- CIS Voucher & Construction
- Industry Services
- Tax Investigations
- Solicitors Accounts & Accounts Reports

அனைத்து தமிழ் உள்ளங்களுக்கும் உளம் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

TAMSONS
Accountancy & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: **020 8313 0800**

சினிமா

இடிமுழக்கம், கானல்
இரு குறும்படங்கள்

ஏஆர்
ஒரு பேப்பருக்காக

குறும்படம் ஒன்றினைப் பார்த்து நான் மிக அதிர்ந்து போனேன். 'இடிமுழக்கம்' என்பது அக்குறும்படத்தின் பெயர். சுமார் இருபது நிமிடங்களாலான இக்குறும்படம் இரண்டு மூன்று நாட்களுக்கு என்னுள் அதிர்வைத் தந்தது. தரிசனம் தொலைக்காட்சியில் ஒரு நாளில் பொழுதுபட்ட நேரம் பார்த்தேன்.

ஒளித்தொகுப்பையும் படத் தொகுப்பையும் டெசுமன் செய்திருக்க எண்ணம் ஆக்கம் இரண்டினையும் சதா பிரணவன் செய்து பிரதான பாத்திரத்தில் நடித்துமிருந்தார். மிகச் சின்னப்பையனாக இருந்தார் சதாபிரணவன். இவரிடமா இவ்வளவு ஆற்றல்? இந்தக் கொம்புகள் இன்னும் சீவப்பட்டால் ஈழத்துச் சினிமாவின் அடையாளத்தை உலகெங்கும் காட்டுவார்கள்.

இடிமுழக்கம் என்ற இக்குறும்படம் சொன்ன கதை மிக எளிது. வேலை இல்லாத, ஒழுங்கான வதிவிட அனுமதி இல்லாத சிறு பெடியள் குழு. காவாலிகளாக, ரவுடிகளாக மாறி இடிமுழக்கம் என்ற பெயரில் வன்முறைக் கும்பலாக மாறுகிறார்கள். அக்குழுவின் செயல்பாடுகளை கிண்டலுடன் மெல்லிய நகைச்சுவை இழையோட அற்புதமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

உரையாடல் தவிர்க்கப்பட்டு, உரைஞர் குரலாக (Narration) காட்சிப்படுத்தப்பட்ட இக்குறும்படம், சொல்ல வந்ததை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது. எழுத்துக் காட்டுவதில் இருந்து (Title card) நேர்த்தியான கலைப்படைப்பை நாம் காணமுடிகிறது. நீர்ல் மிதந்து அமிழ்ந்து போகிறது எரிந்த சிகரட் துண்டு. பின்னணியில் இக்காட்சி நெளிந்து ஓடுகிறது. அதுவே இக்குறும்படத்தின் வித்தியாசத்தை வெளிக்காட்டி விடுகிறது.

ஒரு குறும்படம் எடுக்கிறோம் என்று பிரக்ஞை பூர்வமாக இல்லாமல் மிக இயல்பாக படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. மிக எளிமையான திரைமொழியினை இந்த இடிமுழக்கம் கொண்டிருக்கிறது.

இதில் ஆச்சரியம் தந்த இன்னொரு விசயம் என்ன வென்றால் ஒளிப்பதிவும், படத்தொகுப்பும். டெசுமன் அதைச் செய்திருந்தார். குறிப்பாக படத்தொகுப்பு நேர்த்தி மிக்கதாக இருந்தது. ஒரு தேர்ந்த படத்தொகுப்பாளரின் வேலைபோல இருந்தது, இவரின் படத்தொகுப்பு. விக்ரமனின் இசைக்கோர்வையையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

சதாபிரணவனுக்கும், டெசுமனுக்கும் அவர்களைச் சூழ நின்ற கலைஞர்களுக்கும் என் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். இச்சினிமா முயற்சி உங்களை வெறும் சின்னப் பையன்களாக என்னைப் பார்க்க வைக்கவில்லை. நீங்கள் பெரியவர்கள் ஆகின்றீர்கள். இன்னும் சாதிப்பீர்கள். நம்புகிறேன்.

கலைகளின் நாடு பிரான்ஸ் என்றும் கலைகளின் நகரம் பாரிஸ் என்றும் சொல்கிறார்கள். அது உண்மை என்று அங்கு வாழும் தமிழர்களும் நிரூபிக்கிறார்கள். 'இடிமுழக்கம்' பிரான்ஸ் தமிழர்களின் குறும்படம்.

அதேபோல் பிரான்ஸ் தமிழர்களின் இன்னொரு குறும்படத்தையும் தரிசணம் தொலைக்காட்சியில் பார்த்தேன். 'கானல்' அக்குறும்படத்தின் பெயர்.

ரிரிஎன்னில் தொலைக்காட்சிக் கலைஞராகப் பணி புரிந்த றொபேட் என்பவர் இக்குறும்படத்தை ஆக்கி யிருக்கிறார். இக்குறும்படத்தைப் பார்த்து முடித்தவுடன் அது எனக்குள் திகைப்பை ஏற்படுத்தியிருந்தது. அடிப்பாகம் தேய்ந்துபோன இரண்டு சப்பாத்துக்களும், திரை முழுவதையும் நிறைத்தது. ஒரு குறியீட்டு ஓவியமாக காட்சியை நெகிழ வைத்தது நான் நெகிழ்ந்துதான் போனேன்.

தனது வரவு செலவுத் திட்டத்தில் புதிதாக ஒரு சோடி சப்பாத்துக்களை வாங்குவதற்கு பணம் ஒதுக்க முடியாத ஒரு கதையைச் சொல்கிறது இக்குறும்படம். சுமார் இருபது நிமிடங்களிலாள இக்குறும்படம் தனது காட்சிப்படுத்தலில் ஒருவரின் இயலாமையை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

சப்பாத்து வாங்குவதுதான் பிரச்சினை என்பதை இறுதிக்காட்சிதான் நமக்குத் தெரிவிக்கிறது. அதுவரை அவன் ஒரு பெண்ணைப் பார்க்கப் போகிறான் என்றுதான் நாம் புரிந்து கெள்கிறோம். அப்படிக் காட்சிப்படுத்தியிருக்கிறார் நெறியாளர்.

இந்த உத்தி எனக்குப் பிடித்துப் போயிற்று. ஒரு சப்பாத்து வாங்குவது என்பதே ஒரு பெண் பார்க்கும் படலத்துக்கு இணையாக வார்க்கப்பட்டு அவன் இயலாமையை வெளிக் கொணர்கிறது. அசோகமித்திரன் போன்ற தேர்ந்த படைப்பாளியின் சிறுகதைகள் முடிவு வரியில்தான் முழுக்கதையின் பரிமாணத்தைக் காட்டுவது போல, இக்குறும்படமும் தன் முடிவுக்காட்சியிலேயேதான் தன் முழுப்பரிமாணத்தையும் எய்துகிறது.

தான் புதுச் சப்பாத்து வாங்கப் போகிறேன் என்ற நம்பிக்கையில் பிய்ந்து தேய்ந்துபோன பழைய சப்பாத் துக்களை குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டு வருகி றான். புதிய சப்பாத்துக்கள் வாங்கப்படவில்லை. மீண்டும் குப்பைக் கூடையைத் துழாவி தன்னுடைய பழைய சப்பாத்துக்களை எடுத்துக் கொண்டு நடக்கிறான். திரை முழுக்க தேய்ந்த இரண்டு சப்பாத்துக்களும் ஆக்கிரமிக்க திரை இருள்கிறது. எனக்கு அது நெருட வைத்த ஓவியம். றொபேட் கையைத் தாருங்கள். பற்றிக் குலுக்கி விடுகிறேன்.

டெசுமன், சதாபிரணவன், றொபேட் இவர்கள் போன்ற இன்னும் சில ஈழத்துத் தமிழ் இளைஞர்களின் கைகளில்தான் ஈழத்துத் தமிழ்ச் சினிமா இருக்கிறது. இவர்கள் நல்ல சினிமா தர தமிழ்நாட்டுக்கு ஓடவில்லை. தங்களிடம் உள்ளதை தரமாக திறமாகத் தந்து விடுகி றார்கள். ஐந்து பாடல் காட்சிகளும், ஆறு சண்டைக் காட்சிகளும் என்று சினிமா எடுக்கவில்லை. கறுப்புக் கண்ணாடியும், கறுப்புச் சட்டையும் கையில் ஏ.கே47உம் கொண்டு சினிமா எடுக்கவில்லை. காதல் சுவாசம், காதல் கடிதம் என்று காதலை வைத்து கதறி ஒப்பாரி வைக்கவில்லை. தமிழ் நாட்டின் பல சினிமாக்களே குப்பை. அந்தக் குப்பைகளை கொப்பி பண்ணி, தங்கள் காசையும், நேரத்தையும் வீணாக்கி எங்களையும் எரிச்சலுக்குள்ளாக்கவில்லை.

நெஞ்சுக்கு நிம்மதியாக, நெஞ:சுக்கு நிறைவாக சினிமாக்கள் தருகிறார்களே! இவர்கள் வாழ்க. நல்ல வளத்துடன் நமக்கு இன்னும் சினிமாக்கள் தருக. ஈழத்தமிழர் சினிமாக்கலையை இன்னும் மேலே எழ வைக்க. எங்கள் வேண்டுகோள் இதுவே.



விமர்சனம்

பிரிவோம் சந்திப்போம்

குத்துப்பாட்டு, ஈட்டிச் சண்டை, இரட்டை அர்த்த டயலாக்குகள் இவற்றை யெல்லாம் தவிர்த்து வெளியாகியுள்ள கமர்ஷியல் படம்தான் பிரிவோம் சந்திப்போம்.

உறவுகளுக்கு மத்தியில் கூட்டுக்குடும்பத்தில் வளரும் சேரன். அதற்கு நேர் எதிராக ஒரே பெண்ணாக பிறந்துவிட்ட சினேகா. இருவருக்கும் திருமணம் செய்து வைக்கிறார்கள்.

தியான மண்டபத்து அமைதியை, திருவிழா கூட்டம் அசத்துகிறது. இந்த உறவுகளும், அவர்கள் தரும் அன்பும் நிரந்தரம் என்று மகிழும் சினே காவின் ஆசையில் திடீரென்று இடி விழுகிறது. சேரனும், சினேகாவும் மலைப்பிரதேசத்துக்கு தனிக்குடித்தனமாக இடம் பெயர்கிறார்கள்.

அங்கே தமிழ் சினிமா இதுவரை பார்த்திராத வில்லன். அதுதான் தனிமை. சேரன் வேலைக்கு போய்விட தனிமையில் இருக்கும் சினேகா படுகிற வேதனையை அப்படியே அப்பட்டமாக காட்டியிருக்கிறார் இயக்குனர் கரு.பழனியப்பன்.

சினேகாவுக்கு இப்படி ஒரு சவாலான கேரக்டர் கிடைத்தால் விட்டு விடுவாரா என்ன? மகிழ்ச்சி, ஏமாற்றம், விரக்தி, வெறுமை எல்லாவற்றையும் நொடி பொழுதில் புரிய வைக்கின்றன சினேகாவின் கண்கள். நமக்கு எல்லாம் தருகிற அந்த கடவுளுக்கு நன்றி சொல்லனும் என்றபடி, ஒவ்வொரு முறையும் உண்டியலை நிரப்புவது அழகு.

சேரன் சினேகா காதலில் சுவாரஸ்யங்களுக்கும் பஞ்சமில்லை. திருமணத்திற்கு முன்பு சினேகாவை தனிமையில் சந்திக்க விரும்பி, அவர் செய்யும் முயற்சிகளும், அது பலிக்காமல் போய் தவிப்பதும் கலகலப்பு.

ஒரு மருத்துவராக மட்டுமல்லாமல், அந்த ஊரின் செல்லப்பிள்ளையாகவே வலம் வரும் ஜெயராம் சட்டென்று சினேகாவின் மன ஓட்டத்தை புரிந்து கொள்வது ஆறுதல். தானாக மருந்து எடுத்துக் கொள்ளும் பலருக்கு ஜெயராமின் அட்வைஸ் ரொம்ப அவசியமான விசயம்.

எம்.எஸ்.பாஸ்கர், லட்சுமணன் டயலாக்குகள் கரு.பழனியப்பன் ஒரு பொறுப்பான பத்திரிகையாளர் என்பதையும் பறைசாற்றுகிறது. காந்தியைப் பற்றியும், மதுக்கடைகளையும் பற்றி டயலாக் எழுதி அசத்தியிருக்கிறார் இயக்குனரர்.

தான் கருப்பு இல்லை. லைட் புரோன் கலர் என்று கூறி தன் கலருக்கு விளக்கம் கொடுக்கும் கஞ்சா கருப்புவின் கலக்கல்.

இரண்டாம் பாதியின் துவக்கத்திலிருந்தே சண்டிக்குதிரையாகி அடம் பிடிக்கிறது திரைக்கதை. நேரம் போகாமல் தவிக்கிறார் சினேகா என்ற ஒரு விஷயம் திரும்ப திரும்ப ரிப்பீட் ஆகி, ரசிகர்களை நெளிய வைத்திருப்பதை தவிர்த்திருக்கலாம்.

பிரிவோம் சந்திப்போம் தனிமையில் இருக்கும்போது சிந்திப்போம்.

- *தினமலர்*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ

creative artwork from **concept to design**

மற்ற காட்சி இடங்களுக்கும் நேரங்களுக்கும் தொடர்புகொள்க

Contact: Kumar: 0751545133 / Thaya: 07957955700 / Bobby: 07812334880 / Sris: 07903311775 / 07870106335

உங்கள் இல்லத்தில் நடைபெறும் அனைத்து வைபவங்களுக்கும் அதி நவீன முறையில் வீடியோ, புகைப்படங்கள், முத்துமாலை அலங்காரங்கள், மணமகள் அலங்காரங்கள் கேக் வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் செய்து கொள்ள எங்களை நாடுங்கள்.

LAKSHMI VIDEO & DECORATIONS

S.Ranjan: 07951890664 / 020 8204 6036 / 079 8868 3666

Sabesan: 079 5649 8553

லக்ஸ்மி வீடியோ & டெக்கரேஷன்

Mo's

RESTAURANT & TAKEAWAY

Sri Lankan & South Indian Cuisine

Catering Undertaken for Weddings
Parties & Special Events, Small or Large

Open 7 days a week
11.30 am to 12.00 midnight

Tel: 020 8204 7667

559, Kingsbury Road, Kingsbury, NW9 9EL

Branch:
25 St. John's Road, Wembley, Middx. HA9 7HU
Tel: 020 8795 1254

e-TOURS LTD.

T: 020 8429 5200
T: 020 8429 5201
F: 020 8429 5203
E: info@e2ours.co.uk
W: www.e2ours.co.uk
Talbot House, 204/226 Imperial Drive, Rayners Lane, Harrow, Midlesex HA2 7HH

• FLIGHTS WORLDWIDE • HOTEL BOOKING • TRAVEL INSURANCE
•PACKAGE HOLIDAYS •VISA SERVICES

Sydney £600 +TAX
Bangkok / Hong Kong £375 +TAX
Singapore / Malaysia £375 +TAX

Kerala Holiday

Very Special Offer By E-Tours Only
2 Nights Houseboat
3 Nights Kovalam Beach
2 Nights Munar Kerala
inc Flights, Transfer, Meals and Travel Insurance
All These Just For
£549 per person

Bombay Delhi £190 +TAX
Colombo £220 +TAX
Trichy from £280 +TAX
Chennai £230 +TAX
Canada from £99
Dubai from £180 +TAX

Sri Lanka

five star hotel 7 nights
from £510
including flights & transfer

All Major Credit Cards Accepted

SriLankan Airlines · Qatar Airways · Emirates · Etihad

Your Magical Gateway Into The World

ATOL 9308 PROTECTED

020 8429 5200

mobile Ragu: 07771 788 598